அறைவு 03 இயம் 43 May 09-15, 2015

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு
MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்


பக்கங்கள் : 20 விலை : 30.00







# சம்பூர் மண் எண்ணூற்றுப் பதினெட்டு ஏக்கர் விடுவிப்பு ஏராளம் ஏக்கர்கள் இன்னும் பிடியில்




திருகோணமலை சம்பூரில் போரினால் வலுக்கட்டாயமாக இடம் பெயர்த்தப்பட்ட மக்களின் ஆயிரக்கணக்கான ஏக்கர் வளம் மிக்க மண்ணில் எண்ணூற்றுப் பதினெட்டு ஏக்கர்கள் நிலப்பகுதியை மட்டும் விடுவிப்பதற்கான வர்த்தமானி அறிவிப்பை ஸ்ரீலங்கா அரசு வெளியிட்டுள்ளது.

கடந்த 8ம் திகதி வெளியாகியுள்ள அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் இலங்கையின் முதலீட்டுச் சபைக்கு வழங்கப்பட்டிருந்த இந்த மண்ணுக்கான உரிமம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து உடனடியாகவே 17

## "அரசியல் தீர்வு மிக விரைவில் கிடைக்கும்"- சம்பந்தர்

### "மீள்குடியேறி பலவருடங்கள் – வதிவிடம் இல்லை ஐயா...." மக்கள் கதறல்

புதிய அரசு மக்களின் பிரச்சினைகளுக்கு சிறந்த தீர்வைப்பெற்றுத் தரும் என்ற நம்பிக்கை காணப்படுகின்றது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் முதலிக் குளம் (மொறவெவ) பிரதேச மக்கள் மத்தியில் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் முதலிக்குள பிரதேச செயலாளர் 17



## சொற்கணை மாவட்ட வெற்றியாளராக புனித மரியாள் கல்லூரி



தமிழருவி சொற்கணை திருகோணமலை மாவட்ட போட்டியில் புனித மரியாள் கல்லூரி அணி வெற்றியீட்டியுள்ளது.

கடந்த 3ம் திகதி நடைபெற்ற சொற்கணை இறுதிப் போட்டியில் இவ் வெற்றி ஈட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அதிபர் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு

நடைபெறவிருக்கும் 3ம் தர அதிபர் பதவிப் போட்டிப் பரீட்சைக்கான முன்னோடிக் கருத்தரங்குகளை நடாத்த மலைமுரசு முன்வந்துள்ளது.

கிழக்கு மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்குகள் முறையே மே மாதத்தின் 16ம், 23ம், 30ம் திகதிகளிலும், ஜூன் மாதத்தின் 6ம் திகதியிலும் நடாத்தப்படும் என கிழக்கு மாகாண தமிழ் ஆசிரியர் சங்கப் 17

## 19வது திருத்தத்தின் போது தமிழுக்கே அவமானம்

### சி.அ. யோதிலிங்கம்



நாடாளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட 19வது திருத்தச் சட்டத்தில் தமிழ் மொழியை புறக்கணித்ததன் மூலம் தமிழ்ப் பிரதேசம் அவமானப்படுத்தப்பட்டுள்ளது என அரசியல் ஆய்வாளர் சி. அ.யோதிலிங்கம் குற்றம் சாட்டியுள்ளார்.

அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 19வது திருத்தச் சட்டம் குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில், 17

## அனல் மின்நிலைய எதிர்ப்பு நடவடிக்கைகளை முடக்க உள்ளூர் அரசியல்வாதிகள் கடும் எத்தனம்



சம்பூர் அனல் மின்நிலையத்தினை எதிர்த்து நடத்தப்பட்ட மக்கள் போராட்டத்தை முடக்குவதில் மூதூர் தமிழ் அரசியல்வாதிகள் கடும் முனைப்புடன் செயற்பட்டது தெரியவந்துள்ளது.

கடந்த 30ம் திகதி நடைபெற்ற அமைதி 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

# அதிகாரப் பரவலாக்கம்!

தமிழ்த் தேசியத்தின் எழுச்சியை உருவாக்கியது ஆயுதப் போராட்டம் என்பதில் ஐயமில்லை. ஒரு நிலப்பரப்பினுள் தமிழ் மொழியைப் பேசுபவர்களாகக் பெரும்பான்மையானவர்களை கொண்டவர்களைத் தமது கரங்களுக்குள் கொண்டிருந்த அந்த ஆயுதப் போராட்டத்தின் எழுச்சியால் தான் தமிழ்த் தேசிய எழுச்சியும் நிகழ்ந்து, ஒன்றையொன்று பற்றிப் படரத் தொடங்கியிருந்தது.

ஆனால் ஆயுதப் போராட்டமானது ஒடுக்கப்பட்ட பின்னர் தமிழ்த் தேசியம் என்பது பற்றிப் பேச மக்கள் சற்று அச்சமுற்ற நிலையில் மக்களால் தெரிவு செய்யபட்டவர்கள் தமிழ்த் தேசியம் என்ற கருத்தை ஒட்டுமொத்தமாக அழிவடையச் செய்யும் எண்ணத்துடன் செயற்படத் தொடங்கிவிட்டனர்.

தமிழ்த் தேசியம் என்பது தமிழ் இனத்தின் இருப்பைத் தக்கவைப்பதற்கானது. தேசிய இனமொன்றின் இருப்பானது மற்றைய இனங்களால் கேள்விக்குறியாக்கப்பட்டு, குறித்த தேசிய இனத்தின் இனத்துவ அடையாளங்கள் அழிக்கப்படும் போது அழிவடையும் இனமானது தமது கொள்கையாக தேசியத்தை வரித்துக் கொள்வதாலேயே அவர்களால் அழிவிலிருந்தும் உயிர்பெற முடிகின்றது என்பதைப் பல வரலாறுகள் எடுத்துக்காட்டி நிற்கின்றன.

அதிகாரப் பரவலாக்கம் என்ற கருதுகோளானது சில பத்தாண்டுகளுக்கு முன்னர் இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளுக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்ட விடயமே. அதன் பிந்திய வடிவமாக தமிழர் பிரச்சனைகளுக்குத் தீர்வாக இன்று எமது கைகளில் இருப்பது மாகாண சபை நிர்வாகங்கள்.

மாகாணசபைகளானவை அதிகாரப் பரவலாக்கங்களின் அதி உச்சத் தீர்வு என்று அனைத்துலகிற்கும் அரசு வெளிப்படுத்தி வருகின்றதெனினும் அதன் வினைத்திறன் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

மாகாணசபைகள் ஆரம்பிக்கப்பட ஏதுவான சட்டமாக அரசியலமைப்பின் 13வது திருத்தச் சட்டம் உருவாகியது. உண்மையில் அதிகாரப் பரவலாக்கத்திற்கான பல அடிப்படைகள் அச்சட்ட வரம்பினுள் உள்ளடக்கப்பட்டிருந்தாலும் அவற்றை தனியே எழுத்தில் மட்டும் கொண்டதா அச்சட்ட வரம்பு மாறியதை அடுத்தே இன்று 13வது திருத்தம் அதிகாரப்பரவலாக்கலுக்கான வலுவை இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதனையடுத்தே 13 சக மற்றும் சய என்ற கணிதக் குறிகளுடன் விவாதங்கள் அரசியல் மேடைகளில் உள்நாட்டிலும் குறிப்பாக இந்திய அரசியலாளர்களாலும் பேசப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அப் பேச்சுக்கள் முடிவின்றித் தொடாவதையும் அவதானிக்க முடிகின்றது.

இந்த நிலையில் மீண்டும் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு என்பதை அதிகாரப் பரவலாக்கம் நிறைவேற்றிவிடுமா? என்றோர் கேள்வி எழுகின்றது.

ஏனெனில் தமிழர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் தலைமையானது அதிகாரப்பரவலாக்கம் என்ற செயற்பாட்டு நிலையையே இப்போது கோரிவருவதைக் காண முடிகின்றது.

அவ்வாறு கோரும் போதே எவ்வாறான அதிகாரப் பரவலாக்கத்தை அத் தலைமை கேட்கின்றது என்பது தெளிவாகத் தெரிவிக்கப்படாமலுள்ளது.

அதிகாரப்பரவலாக்கத்தைப் பதின்மூன்றுக்குள் உள்ளடக்க முயற்சித்தால் அச் செயற்பாடானது எந்த விதத்திலும் தமிழர்களின் இனப்பிரச்சனைக்கு ஓர் நிரந்தரத் தீர்வாக அமையப் போவதில்லை. அதற்கும் மேல் செல்ல வேண்டுமானால் இறையாண்மையுடன் கூடிய தனித்தேசம் என்பதே உச்ச எல்லையாக மாறலாம்.

## தொழிலாளர் கௌரவிப்பு



(அப்துல்சலாம் யாசீம் )

நல்லாட்சிக்கான தேசிய முன்னணியினால் ஏற்பாடு செய்யப்பட்ட தொழிலாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

மூதூர் சேப் ரெஸ்ட் மண்டபத்தில் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் செயற்குழு உறுப்பினர் டாக்டர் கே.எம். ஸாஹிர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தவிசாளர் பொறியியலாளர் அப்துல் றஹ்மான், அதன் பொதுச் செயலாளர் நஜா முஹமட் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது மூதூர் பிரதேசத்தைச் சேர்ந்த நாற்பது தொழிலாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

## காணாமற் போனவரைக் கண்டுபிடிக்க வேண்டுகோள்



திருகோணமலை இறக்ககண்டி பகுதியை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான வஹார்தீன் வாவுதீன் என்பவர் கடந்த மாதம் 01 ம் திகதி முதல் காணாமல் போயுள்ளார்.

1955-08-27ம் திகதி பிறந்த இவர் 04ம் வட்டாரம் இறக்ககண்டி பகுதியில் வசித்து வந்ததுடன் கூலித்தொழிலாளியாவார்!

மூன்று பெண் பிள்ளைகளின் தந்தையான வாவுதீனை கண்டு பிடித்து தருமாறு மனைவி பொது மக்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றார்.

விபரங்கள் தெரிந்தால் குச்சவெளி காவல் நிலையத்துக்கோ அல்லது 026-2252222 ,0774113858 எனும் தொலைபேசி இலக்கத்துக்கோ தொடர்பு கொள்ளுமாறும் மனைவி வேண்டுகோள் விடுத்துள்ளார்
(அப்துல்சலாம் யாசீம்)

## பாற்குட பவனி



திருகோணமலை காந்திநகர் அருள் மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தின் 10 வது நாள் சங்காபிசேக தினத்தன்று 05.05.2015 செவ்வாய்கிழமை அன்புவழிபுரம் ஸ்ரீ தில்லையம்பலம் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து அம்பிகை அடியார்கள் பால் குடம் எடுத்து பவனியாக வருகை தந்தனர். (அச்)

## பாரதிபுரத்தில் வழங்கப்பட்ட வாழ்வாதார உதவிகள்

"மூதூர் பாரதிபுரம் கிராமம் அழிக்கப்பட்ட ஒன்பதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடிய கடந்த ஏப்ரல் 25ம் திகதி அழிக்கப்பட்ட அந்த நாளில் தனது துணையை இழந்த குடும்பத்தைத் தலைமைதாங்கும் பெண்ணொருவருக்கு தையல் எந்திரமொன்றை மலைமுரசின் ஆசிரியர் வழங்கி வைத்தார்.

குறித்த பெண்ணுக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் வழங்கப்பட்ட கல்வி உதவிப் பொருட்களை அக் கட்சியின் சார்பில் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் திரு. ஹரிஹரன் வழங்கி வைத்தார்.



## ரோட்டறி கழகத்தின் 36வது வருட நிகழ்வுகள்




திருகோணமலை ரோட்டறி கழகத்தின் 36வது ஆண்டுத் தொடக்க விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை (03) ரொட்டறி இல்லத்தில் நடைபெற்றது.

இலங்கை மாலைதீவு நாடுகளுக்கான முன்னாள் மாவட்ட ரொட்டறி ஆணையாளரும், திருகோணமலை ரொட்டறி கழகத்தின் ஸ்தாபக தலைவருமான ரொட்டேரியன் பத்மனாதன் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

பிரதம அதிதி பத்மநாதன் புதிதாக கழகத்தின் இணைந்து கொண்ட சம்பத் வங்கி கனிட்ட அதிகாரி எஸ்.புருஷோத்தமனுக்கு அங்கத்துவ சின்னத்தை அணிவித்து வைத்ததுடன் கழகத்தின் தற்போதைய தலைவர் கார்மன் அன்ரனி ஸ்தாபக தலைவருக்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தார்.
(கதிரவன்)





## வலயக் கல்வி அலுவலகத்தின் "செல்நெறி" வெளியீடு

திருகோணமலை வலயக் கல்வி அலுவலகத்தினால் வெளியிடப்படும் 2015அம் ஆண்டுக்கான புதிய செல்நெறி காலாண்டுப் பத்திரிகை வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.என் விஜேந்திரன் தலைமையில் விவேகானந்தாக் கல்லூரியில் நடைபெற்றது.

அதன் முதல் பிரதியை மக்கள் வங்கியின் திருகோணமலை பிரதான கிளையின் முகாமையாயளர் கே.செல்வராசா விவேகானந்தாக் கல்லூரி அதிபரிடமும் ஆசிரியை திருமதி பசீரிடமும் வழங்கினார்.
(அச்சுதன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
மட்டக்களப்புச் செய்திகள்

# காணிப்பிரச்சினைக்கான விசேட குழு

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின்போது ஏறாவூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள எல்லை நகர் காணிப்பிரச்சினை தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்டது. இதனையடுத்து இக் காணிப் பிரச்சினையை தீர்த்து வைப்பதற்காக கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபீஸ் நசீர் அகமட் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு எதிர்வரும் 17, 18ஆம் திகதிகளில் கூடி இந்தக் காணிப்பிரச்சினை தொடர்பாக ஆராயும் என கிழக்கு மாகாண முதலமைச்சரின் இணைப்புச் செயலாளர் எம்.ஏ.நாசர் தெரிவித்தார். இதில் ஏறாவூர் நகர சபையின் தவிசாளர் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி மன்ற உதவி ஆணையாளர், ஏறாவூர்பற்று பிரதேச செயலாளர், ஏறாவூர் நகர சபை உறுப்பினர்கள் ஆகியோர் அடங்குகின்றனர்.

## கூரை மீதேறி ஆர்ப்பாட்டத்தில் கைதிகள்

சிறைச்சாலைக் கைதிகள் இருவர், இரவு 7 மணியளவில் சிறைச்சாலைக் கூரை மீதேறி, சிறைச்சாலைகள் திணைக்களத்தின் ஆணையாளர் அல்லது மாவட்ட நீதிபதி தம்மை நேரில் வந்து சந்திக்கும் வரை தாங்கள் கூரையை விட்டு கீழிறங்கப் போவதில்லை எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சட்டவிரோத ஆயுதம் வைத்திருந்தமை மற்றும் பயமுறுத்திக் கப்பம் பெற்றமை தொடர்பாகக் கைது செய்யப்பட்டு, மறியலில் வைக்கப்பட்டுள்ள மற்றும் பயங்கரவாதிகளுடன் தொடர்புடைய சந்தேக நபர் என்ற குற்றச்சாட்டின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஆகியோரே சிறைச்-சாலைக் கூரை மீது ஏறியமர்ந்துள்ளனர். தற்போது சிறைச்சாலைப் பாதுகாப்பு பலப்படுத்தப்-பட்டுள்ளதுடன் ஆர்ப்பாட்டம் நடத்தும் கைதிகளைக் கூரையிலிருந்து கீழிறக்குவத-ற்கான முயற்சிகள் மேற்கொள்-ளப்படுவதாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.



## மூடப்பட்டிருந்த வீதி புனரமைப்பு



தாண்டவன்வெளி, தாமரைக்கேணி, கோட்டைமுனைப் பிரதேசங்களில் உள்ள கழிவு நீர் செல்லும் பிரதான கால்வாய் மட்டக்களப்பு வாவியினுள் விழுகின்றது. குறித்த கால்வாயின் குறுக்கே உள்ள தாம்போதி சேதமடைந்துள்ளதினால் போக்குவரத்து வசதிக்காக இது புனரமைக்கப்படுவதாக மட்டக்களப்பு மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் தெரிவித்தனர். மழைக்காலங்களில் ஏற்படும் வெள்ள நீரை வாவியினுள் கொண்டு செல்வதற்கான குறித்த பிரதான கால்வாய் 6.1 மில்லியன் ரூபாய் செலவில் தாம்போதி, வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாணிக்கப்படுவதாக நிர்மாணிப்பாளர்கள் தெரிவித்தனர். லேடி மனிங் வீதியானது யுத்த காலங்களில் போக்குவரத்துக்காக மூடப்பட்டிருந்தது கடந்த ஆண்டு திறக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## 7,451 மில்லி ஒதுக்கீடு அபிவிருத்தி வேலைத்திட்டம்

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழுக்கூட்டம் மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத்தலைவர்களான சமுர்த்தி வீடமைப்பு பிரதியமைச்சர் எம்.எஸ்.எம்.அமீரலி, கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட் ஆகியோரின் தலைமையில் நடைபெற்றபோது 1,222 திட்டங்களுக்காக 7,451 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் இவ்வாண்டு மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்களை ஆராயும் வகையில் இந்த அபிவிருத்திக்குழுக்கூட்டம் நடைபெற்றது. அத்துடன், மாவட்டத்தில் கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டதுடன் பூர்த்தியடையாத வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

## "எனது மகனை மீட்டுத் தாருங்கள்"

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனைப் பற்றைச் சேர்ந்த செல்லத்துரை தவநாதன் (35), கடந்த 11.3.2011 இல் கட்டார் நாட்டுக்கு தொழிலுக்காக சென்றார். சென்று நான்கு வருடங்கள் கடந்த நிலையிலும் அவருக்கு அங்கு சரியான தொழில் கிடைக்கவில்லை. இதனால் அவர் அங்கு மிக கடுமையான கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றார். மிகவும் கஷ்டமான குடும்ப சூழ்நிலையைக் கொண்ட எனது குடும்பத்திலிருந்து எனது மகன் வெளிநாடு சென்றார். அவர் கஷ்டத்தினால், தற்கொலை செய்துகொள்வாரோ என்று அஞ்சுகின்றோம். அவர் மீண்டும் நாட்டுக்கு திரும்ப முடியாமல் இருக்கின்றார். அதனால் எனது மகனை நாட்டுக்கு அழைக்க உதவுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் வேண்டு-கோள் விடுக்கின்றேன் என்று தாயார் செல்லத்துரை தவமணி தெரிவிக்கின்றார்.

## நல்லாட்சியின் பிரதிபலிப்பு

சுயதொழிலுக்கான வாழ்வாதாரக் கடன் வழங்கும் திட்டத்தின் கீழ், கோறளைப்பற்று மத்தி மற்றும் ஓட்டமாவடி ஆகிய இரண்டு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பயனாளிகளுக்கு கடன் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்ட சமுர்த்தி மற்றும் வீடமைப்பு பிரதி அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி நல்லாட்சியின் பயனாக நாம் நமது பிரதேசங்களிலே அதன் பிரதிபளிப்பு-க்களை தற்போது காணக்கூடியதாக-வுள்ளதாக தெரிவித்தார்.

## கசிப்பு பதுக்கியவர் கொள்கலனுடன் கைது



வெல்லாவெளிக்குட்பட்ட விளாந்தோட்டம் அலியார்-வட்டைப் பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி கசிப்பு கொள்கலன்களை கடந்த 05.05.2015 அன்று கைப்பற்றி-யதாக தெரிவித்த வெல்லாவெளி காவல்துறையினர் இதனுடன் சம்பந்தப்பட்ட நபரையும் கைது செய்துள்ளனர். அவர்களுக்கு கிடைத்த இரகசிய தகவலை-யடுத்து சுற்றிவளைத்த போதே, மறைத்து வைக்கப்பட்டிருந்த இந்த கொள்கலன்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட-வருக்கு எதிராக, எதிர்வரும் 11ஆம் திகதி நீதவான் நீதிமன்றில் தாக்கல் குற்றப்-பத்திரிகை தாக்கல் செய்யப்பட-வுள்ளதாகவும், இது தொடர்-பிலான மேலதிக விசாரணை-களை மேற்கொண்டு வருவதா-கவும் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

## வெசாக் வார மது ஒழிப்பு

மட்டக்களப்பு நிருபர்

வெசாக் வாரத்தினை முன்னிட்டு கடந்த 01.05.2015 - 05.05.2015 வரையான காலப்பகுதியில் விசேட மது ஒழிப்பு நடவடிக்கையினை மதுவரி திணைக்கள குற்றப்பிரிவு ஆணையாளர் டீ.மல்லவ அவர்களின் ஆலோசனைக்கு அமைவாக கிழக்கு பிராந்திய உதவி மதுவரி ஆணையாளர் கே.எம்.ஜீ.பண்டார அவர்களின் வழிகாட்டலில் மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி எஸ்.தங்கராசா தலைமையிலான குழுவினர் மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சட்டவிரோதமாக மது விற்பனை, சட்டவிரோதமாக மது வைத்திருந்தமை மற்றும் சட்டவிரோதமாக சசிப்பு தயாரித்தமை தொடர்பாக குற்றமிழைத்த 20பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## பாரிய விபத்து

மட்டக்களப்பு நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் கல்முனையை நோக்கி பயணித்த வானும் ஒன்றுடன் ஒன்று நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியில் கடந்த 07.05.2015 அன்று மாலை இடம்பெற்ற இப்பாரிய விபத்தில், தந்தையும் மகனும் படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் விபத்துடன் தொடர்புடைய வானின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார். வானின் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் போனதே இவ்விபத்துக்கு காரணமென தெரியவந்துள்ளது. இவ்விபத்து தொடர்பில் காவல்துறையினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மாவட்டத்தில் மதுவைத் தடை செய் !!



மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசியல்வாதிகளின் தலையீடுகள் இருக்கும் வரை மதுபானசாலைகளை குறைக்கமுடியாது என கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெட்னம் தெரிவித்தார். மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் துப்பாக்கியுடன் வந்து மாவட்ட அரசாங்க அதிபரை மிரட்டி மதுபானசாலைக்கு அனுமதிபெறமுயன்ற சம்பவங்களும் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கட்சியை சேர்ந்தவர்கள் இந்த மதுபானசாலை விடயத்தில் தலையிடக்கூடாது எனவும் அவர் தெரிவித்தார். ஐக்கிய தேசிய கட்சியை சேர்ந்த சசி அவர்களும் மோகன் அவர்களுமே இந்த மதுபானசாலை தொடர்பிலான கடிதங்களை வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# தேசிய செய்திகள்

## மருந்துகள் கடத்தியவர் கைது

விமான நிலைய போதை பொருள் தடுப்பு பிரிவு நேற்று வெள்ளி அதிகாலை 4.35 அளவில் சட்டவிரோதமான முறையில் மருந்து வகைகள் சிலவற்றை இலங்கைக்கு கொண்டுவந்த ஒருவர கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தியாவின் சென்னையில் இருந்து இலங்கை வந்த இவரது பயணப் பொதியில் இருந்து 80,530 வலி நிவாரணி மற்றும் 280 கருக் கலைப்பு வில்லைகள் மீட்கப்பட்டுள்ளன. கல்பிட்டியைச் சேர்ந்த சந்தேகநபர் கட்டுநாயக்க விமான நிலைய சுங்கப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.




## வாக்குறுதிகள் நிறைவேறிய பின்னே பொதுத் தேர்தல்

அமைச்சரவை பேச்சாளரும் சுகாதார அமைச்சரு-மான ராஜித சேனாரத்ன சிங்கள ஊடகமொன்றிற்கு, 100 நாள் வேலைத்திட்டத்தில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டதன் பின்னரே பொதுத் தேர்தல் நடைபெறும் என ராஜித சேனாரத்ன தெரிவித்து-ள்ளார்.

எங்கள் உயிரைப் பணயம் வைத்து நாங்கள் கடந்த அரசாங்-கத்திலிருந்து வெளியேறியது தேர்தல் ஒன்றை நடத்துவதற்கல்ல. நாட்டு மக்களுக்கு சிறந்த சேவையை வழங்கும் மனப்-பாங்கிலேயே நாங்கள் ஆட்சிக்கு வந்தோம். எதுஎவ்வாறாக இருந்த போதிலும் விரைவாக தேர்தல் ஒன்றை நடத்துமாறு ஐக்கிய தேசிய கட்சி வலியுறுத்தி வருவதாக அமைச்சர் கபீர் ஹாசீம் தெரிவித்துள்ளார். மேலும் தேர்தல் ஒன்று நடத்தப்பட வேண்டும் என 100 வேலைத்திட்டத்தில் உள்ளடக்கப்-பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.



## நட்டஈடு கோரி மனு

நாட்டு மக்கள் மத்தியில் சிறந்த கீர்த்திநாமம் பெற்ற தனக்கு இழுக்கு ஏற்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்டு லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதால் பாதிப்பை எதிர்நோக்கியுள்ள தனக்கு ஒரு பில்லியன் ரூபா நட்டஈடு வழங்குமாறு கோட்டாபய ராஜபக்ஷ மக்கள் விடுதலை முன்னணியின் மேல் மாகாண சபை உறுப்பினர் சுனில் வட்டகலவிற்கு விண்ணப்ப மனு அனுப்பி வைத்துள்ளார்.

## கொலை செய்ய முயன்ற தந்தை கைது

பொருளாதார கஷ்டத்தைத் தீர்ப்பதற்கு தாயார் மலேசியாவிற்கு சென்று 4 மாதங்கள் கடந்த நிலையில், நேற்றிரவு பொகவந்தலாவை – வானகாடு தோட்டத்தில் உள்ள ஒருவர் தனது பிள்ளைகளை மண்ணெண்ணெய் ஊற்றி கொளுத்த முயற்சித்துள்ளார். இந்த சந்தர்ப்பத்தில் பிள்ளைகளின் அலரலைக் கேட்ட அயலவர்கள் குழந்தைகளைக் காப்பாற்றி வைத்திய-சாலையில் அனுமதித்துள்ளதாக தெரியவருகிறது.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்னரும் இந்த தந்தை தன் குழந்தைகளை மண்ணெண்ணெய் ஊற்றி கொலை செய்ய முயற்சித்-துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த சம்பவத்தில் காயமடைந்த இரு பிள்ளைகளும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## தேரருக்கு பிடியாணை

பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரை கைதுசெய்வதற்காக கொழும்பு பிரதான நீதிவான் பிடியாணை பிறப்பித்துள்ளார். லஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு முன்னால் கடந்த 23ஆம் திகதி நீதிமன்ற தடையுத்தரவை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை நேற்று நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த நிலையில் அவர் முன்னிலையாகாத காரணத்தினாலே அவருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## ஒரு போதும் கிட்டாது

மஹிந்தவை பணயம் வைத்து மீண்டும் அரசியலில் குதிக்க ஒருசிலர் முயற்சிக்கின்றனர். ஆனால் மக்கள் ஒருபோதும் மஹிந்த கூட்டணியை ஆதரிக்க மாட்டார்கள். மஹிந்தவின் பிரதமர் கனவு ஒருபோதும் பலிக்கப் போவதில்லை என்று அமைச்சர் சம்பிக்க ரண-வக்க தெரிவித்தார்.



மஹிந்தவுக்கு குரல்கொடுக்கும் கூட்டணியே மஹிந்தவை வீழ்த்-தியது என்பதை அவர் மறந்துவிடக் கூடாது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## கஞ்சா கடத்தியவர் மடக்கிப் பிடிப்பு

இந்தியாவிலிருந்து கடத்தப்படும் கஞ்சாவின் விநியோகப்-பாதையாக வடமராட்சி கடற்கரை பிரபல்யமடைந்துள்ளது. அவ்வகையினில் பருத்தித்துறை, சுப்பர்மடம் பகுதியில் நேற்றும் 19 கிலோ கிராம் நிறையுடைய கஞ்சா போதைப்பொருளை கைப்பற்றப்-பட்டிருந்தது.

எனினும் கஞ்சா கடத்தல்கள் தொடர்பினில் காவல்துறை உயரதிகாரிகள் மட்டத்தினில் தொடர்புகள் இருப்பதாக சந்தேகம் வெளியிடப்-பட்டுள்ளது. இதனிடையே கைப்பற்றப்பட்ட கஞ்சாவினை வைத்திருந்த 42 வயதுடைய சந்தேகநபர் ஒருவரை நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்ததாக காவல்துறை தெரிவித்துள்ளது.

சந்தேகநபர் கஞ்சாவை கொழும்புக்கு கொண்டு செல்லும் பொருட்டு பொதியிட்டுக்-கொண்டிருக்கும் போதே கைது செய்யப்பட்டுள்ளார். கைப்பற்றப்பட்ட கஞ்சா 47 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியானதென தெரிய-வருகின்றது.

## பேருந்து நேரசூசி தொடர்பான சந்திப்பு



வவுனியா மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் பந்துல ஹரிச்சந்திர தலைமையில் வவுனியா தனியார் பஸ் சங்கத்தினரு-க்கும் இலங்கை போக்குவரத்துச் சபையி-னருக்கும் இடையிலான சந்திப்பொன்று வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினருக்கும் இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்களுக்குமிடையில் நீண்ட காலமாக நிலவி வந்த நேரசூசி பிரச்சனைகள், தேசிய போக்குவரத்து சபையால் புதிதாக அமைக்கப்படும் பஸ் நிலையத்தில் இருந்து இரு சாராரும் சேவையில் ஈடுபடுத்தல் தொடர்பாகவும், தனியார் பஸ் அனுமதிப்பத்திரங்கள் வேறு ஒருவருக்கு மாற்றம் செய்தல் மற்றும் வெளி மாகாண இலங்கை போக்குவரத்து சபை பஸ்கள் பஸ் நிலையத்தில் தரித்து செல்வதால் தனியார் பஸ் உரிமையாளர்கள் எதிர்கொள்ளும் வாழ்வியல் பிரச்சனைகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டிருந்தன.

## பிரித்தானிய பாராளுமன்றில் இலங்கையர்

பிரித்தானிய பாராளுமன்ற தேர்தலில் இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த ரணில் ஜயவர்தன பாராளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ளார். இவர் 35 ஆயிரத்து 573 வாக்குகளை பெற்று பாராளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. ரணில் ஜயவர்தன கடந்த 2008 ஆண்டில் கென்சவேட்டிவ் கட்சியில் தனது அரசியல் பயணத்தை ஆரம்பித்தார்.



## கவனயீர்ப்புப் போராட்டம்



மலையக ஆசிரிய உதவியாளர்-களுக்கான நியமனம் நியாயமான முறையில் வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி பத்தரமுல்ல, இசுருபாயவில் அமைந்துள்ள கல்வி அமைச்சுக்கு முன்பாக நேற்று கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

மலையக ஆசிரிய உதவியாளர்கள் பதவிக்காக விண்ணப்பித்து, நேர்முகப் பரீட்சையின்போது தகுதிபெற்ற 3,024 பேருக்கும் ஒரே தடவையில் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட வேண்டும் என கவனயீர்ப்பில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். மேலும் 1500 பேருக்கு மாத்திரம் முதலில் நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டமை சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

## இராணுவத்தினர் நீக்கம்

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் பணியாற்றிய இராணுவத்தினர் அந்தப் பிரிவில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர் என இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் ஜயநாத் ஜயவீர தெரிவித்தார். ஏப்ரல் 30ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் இவர்கள் நீக்கப்பட்டுள்ளனர். இராணுவ வீரர்கள் முன்னர் பணியாற்றிய இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதியால் இந்தப் பிரிவு ஏற்படுத்தப்பட்டிருந்தது. அதில் 1,200 இராணுவத்தினர் இணைக்கப்பட்டிருந்தனர். அந்தப் பிரிவில் இருந்து அனைத்து இராணுவத்தினரும் அவர்கள் முன்னர் பணியாற்றிய இடங்களுக்கு அனுப்பிவைக்கப்-பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# உலகச் செய்திகள்

## ஓவிய கண்காட்சியில் சூட்டுச் சம்பவம்

அமெரிக்காவில் டல்லாஸ் புறநகர் பகுதியில் இஸ்லாமிய குழுவொன்றினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஓவிய போட்டியொன்றின் போது, துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்ட ஆயுததாரிகள் இருவர், கால்துறையினர் மேற்கொண்ட தாக்குதலில் உயிரிழந்துள்ளனர். இதனையடுத்து, குறித்த ஆயுததாரிகள் பயணித்த வாகனத்தில் வெடிபொருட்கள் உள்ளதா என்பது தொடர்பில் சோதனை மேற்கொள்ளுமாறு குண்டு செயலிழக்கும் பிரிவினருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த தாக்குதலையடுத்து குறித்த பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக அமெரிக்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இரண்டாவது தடவையாக கைப்பற்றப்பட்ட ஆட்சி



பிரித்தானிய நாடாளுமன்ற பொது தேர்தலில் ஆளும் கட்சி பிரதம வேட்பாளரான டேவிட் கேமரூன் தனி பெரும்பான்மையை நிரூபித்து 330 ஆசனங்களை வென்று இரண்டாவது முறையாக ஆட்சியை பிடித்துள்ளார். தற்போது பொது தேர்தலின் 650 ஆசனங்களின் வாக்கு எண்ணிக்கையும் முடிவடைந்துள்ளதால், ஆளும் கன்சர்வேடிவ் கட்சி 330 ஆசனங்களில் வெற்றி பெற்றுள்ளதாக அதிகாரப்பூர்வமான தகவல்கள் வெளியாகியுள்ளன.

## தன்னை சிலுவையில் அறைந்த பெண்



மெக்சிகோவில் யூன் மாதம் உள்ளாட்சி தேர்தல் நடைபெறவுள்ளன. இந்நிலையில் ர.்.பெல்லா ஒரொஸ்கொ ரோம் என்ற பெண் சுயேட்சை வேட்பாளராக போட்டியிட மனுதாக்கல் செய்திருந்தார். இந்நிலையில் அவர் செலவு தொடர்பான விபரங்களை தாக்கல் செய்யவில்லை என கூறி தேசிய தேர்தல் ஆணையம் அவரது வேட்பு மனுவை தள்ளுபடி செய்தது.

தனது மனுவை வேண்டுமேன்றே தள்ளுபடி செய்த தேர்தல் ஆணையத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக ர.்.பெல்லா தன்னைத் தானே சிலுவையில் அறைந்துகொண்டார்.

மேலும் தான் தேர்தலில் போட்டியிட ஆசைப்படவில்லை என்றும் அந்த பகுதியை சேர்ந்த பொதுமக்கள் விருப்பத்தின்படியே போட்டியிட மனு தாக்கல் செய்ததாகவும் ர.்.பெல்லா கூறியுள்ளார்.

## வீணாக்கிய நேரத்திற்கு நஷ்டஈடு

நிதி திட்டமிடல் நிபுணராக இருக்கும் லெஸ்லி எலின்ஸ் என்ற பெண்மணி, ஒன்ராறியோ மருத்துவமனை ஒன்றில் ஒன்றரை மணி நேரம் காத்திருந்ததற்காக பீற்றபொறோ பிராந்திய சுகாதார மையத்திற்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அவர் அந்த கடிதத்தில், மருத்துவமனையின் திட்டமிடல் முறைகளில் தவறு இருக்கிறது. மருத்துவரை சந்திக்க நான்கு நோயாளருக்கு ஒரே நேரம் கொடுக்கப்பட்டுள்ளது. நீண்ட நேரம் நோயாளிகள் காத்திருக்கும் அறையில் தளர்ந்த நிலையில் காத்திருந்த போது, மருத்துவரும் அவரது ஊழிரும் மதிய உணவு இடைவேளைக்கு சென்று விட்டனர் என தெரிவிக்கப்பட்டது. மருத்துவமனையில் தான் வீணாக்கிய நேரத்திற்கு தனக்கு 122.50 டொலர்கள், தர வேண்டுமென கோரி விலைப்பட்டியலுடன் கடிதம் அனுப்பியுள்ளார்.

## விமான விபத்தில் அறுவர் பலி

வடக்கு பாகிஸ்தானில் இடம்பெற்ற ஹெலிகொப்டர் விபத்தில் நோர்வே மற்றும் பிலிபைன்ஸ் தூதுவர்கள் இருவர் உட்பட 6 பேர் பலியாகியுள்ளனர். குறித்த இராணுவ ஹெலிகொப்டர், அவசரமாக தரையிறக்க முற்பட்ட போது நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இந்தோனேஷியா மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளின் தூதுவர்களின் மனைவிகள் இருவர் மற்றும் பாகிஸ்தானின் இராணுவ விமானிகள் இருவரும் இந்த விபத்தில் பலியாகியுள்ளனர். சுற்றுலா திட்டமொன்றை ஆரம்பித்து வைப்பதற்காக காஷ்மீர் பிராந்தியத்தில் பயணித்து கொண்டிருந்தபோது, ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளாகியுள்ளது.

## அகதிகளின் வீட்டை தீக்கிரையாக்கியவர் கைது

வெளிநாட்டு அகதிகளின் வீடுகளின் மீது தொடர்ந்து தாக்குதல் நடந்து வருவது ஜேர்மனியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதுபோன்ற தாக்குதல்களுக்கு அங்குள்ள தீவிர வலது சாரி அமைப்பினர் தான் காரணம் என குற்றம் சாட்டப்பட்டது. இந்நிலையில், ஈராக் நாட்டை சேர்ந்த 6 அகதிகள் தங்கியிருந்த வீட்டை தீயிட்டு கொளுத்திய குற்றத்திற்காக நபர் ஒருவரை காவல்துறையினர் சமீபத்தில் கைது செய்தனர். அகதிகளின் வீட்டு ஜன்னல் கண்ணாடிகளை உடைத்து உள்ளே நுழைந்த அந்த நபர், எளிதாக பற்றி எரியும் திரவியத்தை வீட்டிற்குள் தெளித்து தீயிட்டு கொளுத்தியுள்ளார்.

இனப்பாகுபாடு காரணமாக அகதியின் வீட்டை தாக்கிய நபரை கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தினர். நீதிமன்றத்தில் தனது குற்றத்தை ஒப்புக்கொண்ட அவருக்கு 10 வருடங்கள் வரை சிறை தண்டனை கிடைக்க வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## அதிக துப்பாக்கியுடனும் சமாதானம்

அதிக அளவில் துப்பாக்கிகளை வைத்துள்ள சுவிஸ்லாந்து மக்கள் அமைதியான வாழ்க்கையை மேற்கொண்டு வருகிறார்கள். செல்வச் செழிப்புக்கும், அமைதிக்கும், அழகான பனி மலைகளுக்கும், சுற்றுலாவுக்கும் பெயர் போனது சுவிட்சர்லாந்து. அந்த நாட்டில் 100 பேருக்கு 47 துப்பாக்கிகள் வீதம் இருப்பதாக கூறப்படுகிறது. 8 மில்லியன் மக்கள் தொகை கொண்ட அந்த நாட்டில் 3.4 மில்லியன் துப்பாக்கிகள் உள்ளன. இதுதான் ஐரோப்பாவிலேயே அதிகபட்சம் என்பது குறிப்பிடத்தக்கது. எப்போது வேண்டுமானாலும் நாட்டைக் காக்க தயாராக இருக்கும் வகையில் அரசே அனைவருக்கும் ஒரு கைத்துப்பாக்கி அல்லது ரைபிள் துப்பாக்கியை கொடுத்துள்ளது.

போதைப் பொருட்கள், வறுமை போன்ற பிரச்சனைகள் இல்லாதால் அந்நாட்டு மக்கள் துப்பாக்கிகளுடன் அமைதியாக வாழ்ந்து வருகிறார்கள்.



## காட்டுக்குள் பிறந்த குழந்தைகள்

சமீபத்தில் சாம்பிசா வனப்பகுதியில் அடைத்துவைக்கப்பட்டிருந்த 234 பெண்கள் மற்றும் சிறுமிகளை ராணுவத்தினர் மீட்டனர். தீவிரவாதிகளிடமிருந்து மீட்கப்பட்ட பெண்களில் 214 பேர் கர்ப்பமாக இருப்பது தெரியவந்துள்ளது. இவர்களை பாலியல் தொழில் அடிமைகள் போல தீவிரவாதிகள் பயன்படுத்தி வந்துள்ளனர். ஏற்கனவே இப்பெண்களுக்கு எச்ஐவி உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கான பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.

அவர்களின் ஆரோக்கியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. சில குழந்தைகளும் மீட்கப்பட்டு உள்ளது. அவர்கள் வனப்பகுதியில் பிறந்தவர்கள் ஆவர். இப்போதுதான் அவர்கள் வெளி உலகையே பார்க்கிறார்கள் என்று கூறியுள்ளார்.

## குற்றத்தை நிரூபிக்க முன்னரே தண்டனையா?

சுவிஸில் நபர் ஒருவர் தனது மனைவி மற்றும் நான்கு வயதான மகளுடன் வசித்து வந்துள்ளார். கடந்த பெப்ரவரி மாதம் அந்த நபரின் மனைவி காயங்களுடன் வெளியே வந்து, 'தனது மகளை என் கணவர் கத்தியால் குத்தி கொலை செய்துவிட்டார்' என பல முறை உரக்க கூச்சலிட்டுள்ளார்.

இதைத் தொடர்ந்து கொலை வழக்கு பதிவு செய்த காவல்துறையினர், அந்த நபரை கைது செய்தனர். ஆனால், சிறையில் விசாரணைக்குரிய கேள்விகள் எதற்கும் அவர் பதில் அளிக்காத அவர், காவல்துறையினரின் பிடியிலிருந்து தப்பித்து மாடிப்படிகளில் ஏறி அங்கிருந்து தலை கீழாக குதித்து தற்கொலை செய்து கொண்டதாக தெரியவருகின்றது.

## எவரஸ்டின் உயரம் குறைவு



நேபாளத்தை தாக்கிய பெரும் பூகம்பத்தின் விளைவுகளால் எவரெஸ்ட் சிகரத்தின் உயரமும் சற்று குறைந்திருக்கக்கூடுமென ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. செய்மதி தரவுகளின் அடிப்படையில் ஆராய்ந்த போது, சிகரத்தின் உயரம் 2.5செ.மீ குறைந்திருக்கலாமென தெரியவந்ததாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

ஐரோப்பாவை சேர்ந்த சென்ரினல் என்ற ராடார் செய்மதி எவரெஸ்ட் சிகரத்தை படம் பிடித்துள்ளது. இந்த சிகரத்தின் மலையடிவாரத்தில் உள்ள திறந்தவெளி பூகம்பத்தின் பின்னர் செங்குத்தாக உயர்ந்ததும் தெரியவந்துள்ளது.

## சர்ச்சைக்குள்ளான பேச்சு

மலேசிய இஸ்லாமிய தலைவரான பெரக் முப்தி தாம் சகாரியா சமீபத்தில், திருமண உறவுக்குள் நடைபெறும் பாலுறவில் பலாத்காரம் என்ற வார்த்தைக்கே இடமில்லை. கணவன் ஆசைப்பட்டு கேட்கும்போது, உறவு வைத்துக்கொள்ள மாட்டேன் என்று சொல்லும் உரிமை மனைவிக்கு கிடையாது.

ஒட்டகத்தின் மீது பயணித்துக் கொண்டிருக்கும்போது, கணவன் உறவுக்கு அழைத்தால், உடனே அதை நிறைவேற்றுவதே மனைவியின் பணியாகும் என்றுதான் இறைதூதரும் கூறியுள்ளார். மாதவிடாய் சமயத்தில் மட்டுமே மனைவியுடன் உடலுறவு வைத்துக்கொள்ள கூடாது என்று குரான் கூறியுள்ளது என்றார்.

இதுகுறித்து அனைத்து பெண்கள் ஆக்ஷன் சொசைட்டி அமைப்பு அதிர்ச்சி தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தொடர் நாவல்

# வினையடி நீ எனக்கு.. 14



– கவிஞர் வி.மைக்கல் கொலின்–

- உனது உள்ளத்தினுள்
நான் இரகசியமான
ஒரு மூங்கில் காடாக
வேரோடியிருக்கிறேன்.
எப்பொழுதாவது
புல்லாங்குழல் ஓசையாகவோ
அல்லது
தீப் பொறியாகவோ
வெளியேறுவேன். -

– சோ.நாதன் –

அக் கவிதைகள் ரதன் தனது நண்பனின் அனுபவங்களை உள்வாங்கி எழுதியிருந்தது. அந்தக் கவிதைகளை வாசித்த பலர் அவனிடம் வந்து தமது பாராட்டுக்களைத் தெரிவித்தனர்.

ஒரு நாள் பல்கலைக்கழக வாசிகசாலைக்குப் போவதாக வந்தவனை பல்கலைக்கழக மருத்துவமனை பகுதியில் நின்ற நான்கு சீனியர்ஸ் மாணவிகள் "ஹலோ, இங்கே வாரும். என அழைத்தனர்." ரதனும் சிரித்தபடியே அவர்களிடம் சென்றான்.

"என்ன ஹலோ சிரிக்கிறீர்... எங்களுக்குப் பின்னால் வாரும்." என அழைத்தபடி அவர்கள் முன்னால் சென்று பக்கத்திலிருந்த கென்ரினுக்குள் சென்றனர். அவனும் அவர்கள் பின்னாலேயே சென்றான்.

மாணவர்கள் அதிகம் இல்லாத ஒரு பக்கத்தில் இருந்த மேசையில் அமர்ந்து கொண்ட சீனியர்ஸ் மாணவிகள் "நான்கு பென்ரா வாங்கி வாரும்" என சொல்லிவிட்டு அங்கிருந்த கதிரைகளில் அமர்ந்து கொண்டனர்.

ரதன் கௌண்டருக்குப் போய் நான்கு பென்ராவை ஓடர் செய்து வாங்கி வந்தான்.

"டேய் யாருக்கடா பென்ரா வாங்குகிறாய்?" என கேட்டபடி அவனது தோளைப் பற்றி இழுத்த ஒரு சீனியர்ஸ் மாணவன் ஒருவன், ரதன் தூரத்தில் அமர்ந்திருந்த சீனியர்ஸ் மாணவிகளை காட்டவும் "ஆ... சரி... சரி... போ..." என்றான்.

பல்கலைக்கழகத்தில் ராக்கிங்கிலும் ஒரு ஒழுங்குமுறை இருந்தது. யாராவது ஒரு சீனியர்ஸ் ஒரு ஜூனியரைப் பிடித்து ராக்கிங் பண்ணும்போது வேறு சீனியர்ஸ் அதில் தலையிட மாட்டார்கள். அப்படிக் குறிப்பிட்ட அந்த ஜூனியர் அவர்களுக்கு தேவை என்றால் அவரை முதலில் சந்தித்து கதைத்துக் கொண்டிருக்கும் சீனியர்ஸிடம் அனுமதி கேட்டே கூட்டிப் போவார்கள். இது சீனியர்ஸ் தமக்குள் கொடுத்துக் கொள்ளும் மரியாதை.

பென்ராவை எடுத்துக் கொண்டு வந்த ரதன் அவர்கள் இருந்த மேசையில் வைத்தான். "ஹலோ, நீரும் இப்படி இரும்" என்று சொல்லவும் பரவாயில்லை. நான் நிற்கிறேன். என்று ரதன் சொல்லவும்,

"ஓ! சீனியர்சுக்கு ஒபே பண்றிங்களா... பரவாயில்லை. நீரும் இதில் இரும்." என அதில் ஒரு சீனியர்ஸ் மாணவி கூற ரதனும் அமர்ந்து கொண்டான்.

"ஐசே... உமது பெரென்ன...?" என்று ஒரு சீனியர்ஸ் மாணவி கேட்கவும் ரதன் "ஜெயரதன்." என்று சொல்லவும்... மற்ற மாணவி "என்ன உமக்கு அப்பா இல்லை... நீர் என்ன ரெஸ்ட்ரியூப் பேபியா?... அப்படியென்றால் T தான் உமது இனீசியல் போல...." ரதன் சிரித்துக் கொண்டு தலையாட்டியான். "என்ன உமது இனிசியல். T ...யா? மற்ற மாணவி கோபமாக கேட்டாள். "ஆமா என்ட அப்பாட பேர் தங்கராசா. எனது இனிசியல் T தான்." இனிசியல் மூலம் ரதனைக் கவிழ்க்கலாம் என்று நினைத்த அவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

ரதன் மென்மையாக சிரிப்பதைப் பார்த்த அவர்களுக்கு கோபம் வந்திருக்க வேண்டும். "என்ன சிரிப்பு... இப்ப நாங்க உம்ம சிரிக்க சொன்னமா... இப்படி சிரித்து சிரித்து பெட்டைகளை சைற் அடிப்பீரென்ன...?" ஒருத்தி கேட்டாள்.

ரதன் எதுவும் பேசவில்லை. அவர்கள் தமது பேச்சின் மூலம் தம்மையே தாழ்த்திக் கொள்வதாக அவனுக்குப் பட்டது.

"அது சரி... நோட்டிஸ்போட்டில உமது கவிதை இருந்ததே. அது என்ன சொந்த அனுபவமா...?" என்று ஒருத்தி கேட்டாள். ரதன் மௌனமாக கீழே பார்த்தபடி இருந்தாள். "என்ன ஐசே... நிலத்தைப் பார்த்துக் கொண்டு நிற்கிறீர்? உம்மை என்ன மாப்பிள்ளை பார்க்கவா கூப்பிட்டம்..." இன்னொருவள் கமென்ட் அடித்தாள். "அடியே அவரை விடுங்கடி. அவர் அவளைத் தேடிப் போய் அவரையே தொலைத்தவராச்சே. இப்ப அவரிடம் அவரில்லை..." ரதனின் கவிதையை வைத்தே மற்றவள் கிண்டல் செய்தாள்.

"என்னைப் பார்க்க வெட்கமா இருக்கா...?"

ரதன் மெல்ல நிமிர்ந்து அவர்களைப் பார்த்தான். அவர்கள் கண்களையே பார்த்தான்.

அவனது பார்வையின் தீட்சணியத்தை அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஓர் ஆடவன் நேருக்கு நேர் நின்று கண்களையே பார்த்து கதைக்கும்போது அவர்களால் அதிகம் பேச முடியவில்லை. அதே நேரத்தில் ரதனைப் பற்றி ஒரு நல்ல அபிப்பிராயமும் அவர்கள் மனதில் இருந்தது. பொதுவாக ஆண்கள் பெண்களுடன் கதைக்கும்போது அவர்கள் பார்வை அதிகமாக அப் பெண்களின் நெஞ்சுப் பகுதிகளிலேயே குத்திட்டு நிற்கும். அதுவும் தம் வயதை ஒத்த இளைஞர்கள் தம்முடன் கதைக்கும்போது அவர்கள் பார்வை எங்கு செல்கிறது என்பதை ஒவ்வொரு பெண்ணும் அறிவாள். பார்வைக்கு கவர்ச்சியாகவும் அதேவேளை பெண்களின் உடலியல் அமைப்பில் அவர்களை மிக அழகானவர்களாக காட்டுவதற்கும் அவர்களது மார்புகள் உதவுகின்றன.

உளவியல் அடிப்படையிலும் சரி, மனித உணர்வுகள் அடிப்படையிலும் சரி, ஆண்கள் பெண்களுடன் கதைக்கும்போது அவர்கள் பார்வை அவர்களை அறியாமலேயே பெண்களின் அழகுப் பிரதேசங்களை நோட்டமிடுகின்றது. இதில் சில விதிவிலக்குகளும் இல்லாமல் இல்லை என எங்கேயோ படித்திலிருந்து ரதன் எப்போதாவது பெண்களுடன் கதைக்க நேரும் போதெல்லாம் அவர்களது விழிகளை நோக்கியே தனது பார்வையை வைத்துக் கொள்வான். தவறிக் கூட தன் பார்வை விலகாமல் இருக்க வேண்டும் என்ற ஜாக்கிரதை உணர்வு அவனுக்குள் இருந்தது.

"அந்தக் கவிதை என்னுடைய அனுபவமில்லை. எனது நண்பனொருவனை வைத்து எழுதியது..." ரதன் சொன்னான்.

"ஓ அப்படியென்றால்.... நீர் பிரீயாகத்தான் இருக்கிறீர் போல... நாம... அப்ளிகேஷன் போட்டுப் பார்க்கலாமா?" ஒருத்தி சிரித்தபடியே கேட்டாள்.

ஏதோ வேலைக்கு அப்ளிகேஷன் போடுவதைப் போல காதலைப் பற்றி அவர்கள் கதைத்தது ரதனுக்கு என்னவோ செய்தது.

**கிழக்குப் பல்கலைக் கழகத்தினை மைய நீரோட்டமாகக் கொண்டு தமிழ் மக்களின் கடந்தகால அரசியல் பேசும் முதல் காதல்**

அந்த இறுக்கமான சூழலை ஒருத்தி சகஜ நிலைக்கு கொண்டு வந்தாள். "சரி சரி... நீர் அதிகம் யோசிக்காதேயும்... பென்ராவைக் குடியும். ரதன் தயங்கினான்."

"பரவாயில்லை ஐசே... உம்மிடம் காசு கேட்கமாட்டம் குடியும்".

"அடியே... அவர் தனிப் போத்தல் குடிக்க மாட்டார்... நாம குடிச்சிற்று குடுப்பதைதான் குடிப்பார் போல் இருக்கு..." ஒருத்தி சொல்ல மற்றவள் "அப்படியென்றா நாங்க மூவரும் பாதி பாதி குடிச்சிற்று மிகுதியை சேர்த்து இவருக்கு கொடுப்பமா?"

அவர்கள் கதையிலிருந்து எங்கே அவர்கள் அப்படி செய்து விடுவார்களோ என்ற பயம் அவனைத் தொற்றிக் கொண்டது.

உடனே அவர்கள் தந்த "பென்ரா" போத்தலை எடுத்து ஸ்ரோவில் வாய் வைத்து ஒரு முடர் உறிஞ்சினான்.

அவனது அவசரத்தைப் பார்த்து அவர்கள் சிரித்துக் கொண்டனர்.

"ஐசே... சோடா குடித்தது காணும். ஏதாவதொரு பாட்டுப் பாடும்..." ஒருத்தி சொல்ல மற்ற இருவரும் அதனை ஆமோதித்தனர்.

"ஓமோம். ஏதாவதொரு பாட்டுப் பாடும்..." அவர்கள் வற்புறுத்தல் அதிகமாகியது.

"எனக்கு குரல்வளம் இல்லை... பாட்டு வராது" ரதன் சொன்னான்.

"ஐசே... உம்மை சினிமாவிலயா பாடச் சொன்னம். உமக்கு குரல்வளம் இல்லாட்டியும் பரவாயில்ல. கழுதை கத்துற மாதிரியாவது ஒரு பாட்டுப் பாடும்". ரதன் சில வினாடி மௌனத்திற்குப் பின் ஒரு தமிழ் பாடலை மெல்லப் பாடினான்.

"உன் உருவம் காண்பதென்றால்
என் நெஞ்சில் ஏன் இந்த ஏக்கம்
உன் குரலை கேட்பதென்றால்
ஏன் இந்த மயக்கம்
என் அன்பே நீ அறியாயோ
நான் உன்னை காதலிக்கின்றேன்"

பாடலைப் பாடினான். ரதனுக்கு அதிக குரல் வளம் இல்லாவிட்டாலும் ஓரளவு பாடக் கூடிய ஆற்றல் இருந்தது. மேடைப் பாடல்கள் என்று இல்லாவிட்டாலும் குளியலறையில் படிக்கும் பாடல்களுக்குரிய குரல்வளம் இருந்தது. அவன் பாடி முடிக்க மூவரும் மெதுவாக கைதட்டினர்.

அதிலொருத்தி "எமது பாடகருக்கு ஏதாவது பரிசு கொடுக்க வேண்டாமா என் மற்றவர்களைப் பார்த்து கேட்டாள். மற்ற இருவரும் தலையாட்டவும் அவள் தனது கைப்பையைத் திறந்து அதிலிருந்து இரு பச்சை மிளகாய்களை எடுத்து "ஐசே உமது பாடலுக்கு இதுதான் எமது பரிசு. இதை சப்பிச் சாப்பிடும்..." எனக் கூறியபடியே அந்த இரண்டு மிளகாயில் ஒன்றை ரதனிடம் கொடுத்தாள்.

ரதன் அதனை வாங்கிக் கொண்டான். அந்த நேரம் பார்த்து மேலும் இரண்டு சீனியர்ஸ் அந்த இடத்தில் வந்து அமர்ந்து கொண்டனர். அவர்கள் இருந்த இடம் அந்த "கென்ரீன்" பகுதியில் ஒதுக்குப் புறமாக இருந்ததால் அந்தப் பகுதியில் அதிகம் பேர் இருக்கவில்லை. கென்ரினின் முன் பக்கத்திலேயே பலர் இருந்தனர். உள்ளே வந்து எட்டிப் பார்ப்பவர்களும் மூன்று சீனியர்ஸ் ரதனைப் பிடித்து ராகிங் செய்வதை பார்த்து விட்டு சென்று விடுவர். ரதனுக்கு அது கொஞ்சம் ஆறுதலாக இருந்தது. அவன் ராகிங் பண்ணப்படுவதை யாரும் பார்க்கவில்லை என்று திருப்தி அவனுக்கு இருந்தது.

மேலதிகமாக வந்து சேர்ந்த இரண்டு சீனியர்ஸ் பெட்டைகளும் தமது பங்குக்கு கேள்விகளை அடுக்கினர். ஐந்து பெண்கள் மத்தியில் ஓர் ஆண்மகன் கிடைத்து விட்டால் சொல்லவும் வேண்டுமா...?

ஆனால் அவர்கள் இருவர் அங்கு வந்தது ரதனுக்கு வாய்ப்பாக போய்விட்டது. அவர்கள் தம் பங்குக்கும் கேள்விகளை கேட்கத் தொடங்கினர். அதில் ஒருத்தி கொஞ்சம் கவிதை ரசனையுடையவளாக இருந்தாள். அது மட்டுமல்லாமல் அவர்கள் இருவரும் திருகோணமலையை சேர்ந்தவர்களாக இருந்தனர். ரதன் அவர்களை பல முறை ஊரிலும் கண்டிருக்கிறான். அவர்கள் ரதனிடம் அதிகம் கவிதைகளைப் பற்றியே கேட்டனர்.

"ரதன்... நீர் கவிதை எழுதுவீர்தானே... கடைசியாக நீர் எழுதிய கவிதை ஒன்று சொல்லும் பார்ப்போம்..." புதிதாக வந்தவர்களில் ஒருத்தி கேட்டாள். அவர்கள் இருவரும் கதைக்கும் போது ரதனின் பெயரைக் குறிப்பிட்டே கதைத்தனர்.

ரதன் சில வினாடி மௌனத்தின் பின் தன் அண்மையில் "ஒற்றை நட்சத்திரம்" எனும் பெயரில் எழுதி தேசிய பத்திரிகை ஒன்றுக்கு அனுப்பியிருந்த கவிதையொன்றை கூறத் தொடங்கினான்.



"கல்லூரி நாட்களில்
என்
ஆட்டோகிராப்பை
உன்னிடம் நீட்டியபோது
பிரிபவர்கள்தான்
எழுதிக் கொள்வார்கள்
இணைபவர்கள்
நினைத்துக் கொள்வார்கள்
என்றாய் -
மனதில்
ஆயிரம் நட்சத்திரங்கள்
பூப்பூத்து சிதறின
கனவுகளின் நந்தவனத்தில்
நான்
காலிடறி விழுந்தேன்
பனிப் புஷ்பங்களாய்
உன் ஞாபகங்கள்
என் நேசங்களை
பொறுக்கி எடுத்து
உனக்கு சூடவந்தேன்
சிலகாலம்
பொறுத்துக் கொள்ளுங்கள்
என்றாய்
நிரந்தர பிரிவுமில்லை
நிஜமான இணைப்புமில்லை
இரண்டுக்கும் நடுவே
ஒற்றை நட்சத்திரமாய்
உன் நினைவில் எரியும் நான்.

ரதன் கவிதையை சொல்லி முடித்தான். "என்ன ரதன் உமது கல்லூரி அனுபவமா...?" ஒருத்தி கேட்டாள். அவன் மௌனமாக இருந்தான். மற்ற மூவருக்கும் அந்தக் கவிதை பிடித்திருக்க வேண்டும். அவர்களது பாடசாலை ஞாபகம் வந்ததோ..? தெரியவில்லை. மௌனமாக இருந்தனர்.


அதில் ஒருத்தி கைக் கடிகாரத்தைப் பார்த்தபடியே... "மணி 9.50. ஆயிற்று. பத்து மணிக்கு எமக்கு புறொஜக்ட் மனேஜ்மென்ட் இருக்கு. போவமா,...?" என்றாள். அவள் சொல்லவும் தான் மற்ற மூவரும் தமது கடிகாரத்தைப் பார்த்தனர்.

"ஓ...மடி... வெளிக்கிடுவம்... ஐசே... உமக்கு தந்த மிளகாயைத் தாரும். நாம் லெக்ஸர்ஸ் முடிந்து பதினொரு மணிக்கு வருவம். அப்போது நீரும் இங்கு வரவேண்டும்...". எனக்கூறியபடி அவனிடமிருந்து பச்சை மிளகாயை வாங்கிக் கொண்டாள்.

ரதனும் சிரித்தபடியே அந்த மிளகாயை அவளிடம் கொடுத்தாள். அவனுக்குத் தெரியும். நான் எங்கே பதினொரு மணிக்கு வரப்போகிறேன் என்பது. அவர்களுக்கும் தெரியும் அவன் வரப் போவதில்லை என்று. ஆனால் அந்த ராகிங் நிகழ்வில் விடைபெறுதல் ஓர் உத்தரவுடன் முடிந்தது. ரதனும் அதிலிருந்து தப்பித்துக் கொண்டான்.

**மேவும்.. ...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







அனல் ஏறிக் கொதிக்கும்,
அண்டவெளியில் ஆயிரம் துளைவிழும்,
ஆகாசமெங்கும் அக்கினி மூட்டங்கள் உலாப்போம்,
மண்டைகள் மரக்கும்,
மண்படை சிறுக்க மலைதாண்டி நீர் வற்றும்,
புண்படா துடல் அற்று புழுதியில் புரளும்,
கண்படா இடமெங்கும் கரியமிலம் கருக்கும்,
வெண்படை விலகி கரிய விழி பரக்கும்,
எச்சில் வற்றி நாக் கொப்பழிக்கும்,
கனக முலைகள் கரும் பாலைக் கக்கும்,
அரையின் கீழ்த் தண்டைகள் அமிலம் கசியும்,
நரையும், திரையும் நாற்பதை முந்தும்,
கரையும் சந்ததி கழிப்பறையில் நாறும்,
முனகி முனகி சொல்லத் திராணியற்று அண்ணம் ஒட்டும்,
கட்சிக் கொடிகள் காலங் கடந்து பறக்கும்,
எங்கள் தலைகளை எரியூட்டும் வெளிப்பில் யாரோ...
அண்டைநாடுபற்றி அம்மணமாய் அலசுவார்கள்,
நிலங்களும், உழும் மேழிகளும், உழவரும்
உக்கிப்போனபின்......
மேயோராந் நாளில் சிலர் பட்டணத்தில் பவனிவருவர்,
"தொழிலாளரின் உரிமை காப்போம்......"
எம் தலைகளில் அனல் ஏறிக் கொதிக்கும்."

- - மதுரன் - -

## சுணங்கச் சொல்!

ஏ.ரவீந்திரன் [ஆசிரியர்]

படைப்புத் தொழில் நான்முகா,
பறந்ததடா அகவையே!
சுடலை வழிச் செல்லுமுன்
சுணங்கச்சொல்லு எமனிடம்!

இன்னும் படிக்க உள்ளதாம்
இன்பத்தமிழ் - ஆதலால்
என்னிடத்தில் பிந்திவா,
என்று மட்டும் சொல்லடா!

அவனும் படிக்க விரும்பினால்
ஆருக்கும் தெரியாமலே
இவடம் வந்து போகவை
ஏன்படிக்க நீயும்வா!

தமிழ் தெரிந்தால் கேட்குமுன்
தமிழர் ஆவி தருவராம்!
அமுதின் சுவையும் அறியலாம்,
ஆக்குவோன் நீ அல்லவா?



## "நீ வாழ்க . . ."

மலைமுரசே
திருமலை மண் பெற்றெடுத்த
தலைமகனே
நிலை பெற்றாய் எம் மனதில்
கலை பல சுமந்து வந்தாய்
கருத்துக் களம் பல தந்தாய் - திரு
மலை வாழ் மக்களின்
மனங்களில் நீங்கா இடம் பெற்றாய்
வாழ்க உன் பணி
வளர்க உன் புகழ்

## ஏழ்மை

திருமலை சுந்தா

ஏழையாயிருந்த போது
ஏழ்மையொன்று மட்டுந்தான்

ஏழ்மையை ஏணியாக்கி
உச்சத்துக்கு படியேறி
மிதித்த போது தான்
பயமும் சேர்ந்ததுவே

நித்தமும் நித்திரையை
தொலைத்து விழித்தெழுந்து
மிதிக்கும் நிலத்திலும்
சந்தேகங் கொண்டு . . .

இழந்த ஏழ்மையை
நினைத்து நிதமும்ஏங்கி!



## எழுதினேன் என் தமிழை

பிரதீஷன்

தமிழுக்கு அழிவில்லை
தமிழன் என்றும் பணிந்ததில்லை
தமிழுக்கு தொண்டு செய்யும் தமிழனுக்கு
நெடுங்குன்றும் நிலைத்ததில்லை
தடையாக
பிறந்தவர் தமிழ் அறிஞர்
ஆதல் வேண்டும்.
வரும் தமிழர் வையகத்தை ஆள வேண்டும்
இக்கவிதை கனவாக போகுமென்றால்
என் உடல்
உயிர் இன்றி உதிரவேண்டும்
இக்கணமே

# கந்தளாய்ப் பூதங்களின் கதை

08.06.1786 இல் தம்பலகாமத்தில் இருந்து கந்தளாய் நோக்கிப் பயணமான ஒல்லாந்த ஆளுனர் அக்காலத்தல் தம்பலகாம மக்களிடையே பூதங்கள் தொடர்பாக இருந்த அச்ச உணர்வு பற்றி விபரித்திருக்கிறார். இந்தப் பூதங்களின் கதை சுவாரஸ்யமானது. என்னறிவுக்கு எட்டியவரை இந்தப் பூதங்கள் தொடர்பான நம்பிக்கைகள் 1985 காலப்பகுதிவரை தம்பலகாம மக்களிடையே பரவலாக இருந்தது. பின்வந்த நாட்களில் புதிதாக உருவான இனவன்முறைப் பூதம் இந்தக் கந்தளாய்ப் பூதங்களின் கதைகளை வாலைச் சுருட்டிக் கொண்டு ஓடவைத்துவிட்டது.

நானறிந்த கந்தளாய்ப் பூதங்களின் கதை இதுதான். கந்தளாய்க் குளத்தில் குளக்கோட்டு மன்னனால் திருப்பணிகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது அப்பணிகளுக்கு ஆடகசௌந்தரி என்னும் அரசியின் ஆணைப்படி உதவிக் கொண்டிருந்தவையே இந்த கந்தளாய்ப் பூதங்கள். இவை மனிதர்களால் முடியாத அனைத்து கடின வேலைகளையும் செய்யும் வலிமை பெற்றவையாக இருந்தன. அவை மிகப்பெரிய கருங்கற்களைக் கொண்டு குளத்தின் அணைகளைப் புணரமைத்தன. அத்துடன் குளக்கட்டுக்குத் தேவையான மண்ணை தம்பலகாமம் வயல்பகுதி ஊடாக அவை எடுத்துச் சென்றன. அவ்வாறு எடுத்துச் சென்ற மண்ணை குளக்கட்டில் கொட்டிவிட்டு திரும்பி வருகையில் களைப்பு மிகுதியால் தம்பலகாமப் பகுதியில் இளைப்பாறின, அவ்வாறு இளைப்பாறும் போது அவற்றின் கூடையில் ஒட்டியிருந்த மண்களால் உருவான திடல்களே இன்று வயல்களுக்கு நடுவே ஊர்களாக உள்ளன. இவ்வாறு நீண்டு செல்கிறது கந்தளாய்ப் பூதங்களின் கதை.

இது இவ்வாறிருக்க குளத்திருப்பணிகள் முடிவடைந்த பின்னர் குளக்கோட்டு மன்னரின் அமைச்சர்கள் மற்றும் அரச பிரதானிகளுக்கு ஒரு முக்கிய பிரச்சனை உருவானது. வேலை முடிந்துவிட்டது இனிப் பூதங்களுக்குக் கொடுப்பதற்கு எந்தவேலையும் இருக்கவில்லை. ஆனால் பூதங்களுக்கு நேரத்துக்கு, நேரம் சாப்பாடும் நாள் முழுவதும் வேலையும் கொடுக்க வேண்டும். இல்லையென்றால் அவை அருகிலுள்ள கிராமங்களுக்குள் புகுந்து மனிதர்களைத் துன்புறுத்தத் தொடங்கிவிடும். அத்துடன் வேலை முடிந்த பிற்பாடு அவற்றுக்கு தொடர்ந்து சாப்பாடு கொடுப்பதும் இயலாத காரியம். இந்தக் காரணங்களால் தான் அமைச்சர்கள் அச்சத்துக்கு உள்ளானார்கள்.

இந்தச் சிக்கலில் இருந்து விடுபடும் வழியொன்றினை ஒரு புத்திசாலி அமைச்சர் கண்டுபிடித்தார். அவர் அங்கிருந்த வீரர்களுக்கு ஒரு பணிப்புரை வழங்கினார். அதன் படி படைவீரர்கள் காட்டுக்குச் சென்று ஒரு குறித்த பெரிய மரங்களை வெட்டி யானையின் உதவியுடன் கந்தளாய்க் குளத்திற்கு அருகிலுள்ள ஆறுகளில் போட்டனர். இந்த மரங்களில் உள்ள விசேடம் என்வென்றால் அவை நீரில் ஊறியதும் அவற்றின்மேற்பரப்பு மிகுந்த வழுவழுப்புத் தன்மை கொண்டதாக மாறிவிடும் என்பதுதான்.

அடுத்தநாள் காலை பூதங்கள் வழக்கம்போல அதிகளவிலான உணவுகளை உண்டு முடித்த ஆனந்தத்துடன் குளக்கரைக்கு வந்து அன்றைய பணியினை எதிர்பார்த்திருந்தன. அந்த சந்தர்ப்பத்தில் அங்கு வந்த பிதான அமைச்சர் புதிதாக வெட்டி ஆற்றில் போடப்பட்டிருந்த மரக்குற்றிகளைக் காட்டி அவற்றினை குளக்கரைக்கு கொண்டுவந்து முடித்தால்தான் குளத்திருப்பணி நிறைவு பெறும், அப்போதுதான் மன்னர் மகிழ்வடைவார் இல்லையேல் கடமை நிறைவேற்றாமைக்குரிய தண்டனைகளைத் தருவார் என அழுத்திக் கூறினார்.

வேலை முடிகிறது என்ற ஆனந்தத்தில் ஆற்றுக்குள் பாய்ந்த பூதங்களுக்கு ஒரு பெரிய சவால் காத்திருந்தது. அவற்றின் கைவிரல்கள் மனிதர்களைப் போலில்லாது கட்டையானதும் மழுங்கியதும் ஆகும் அதனால் வழவழுக்கும் தன்மை நிறைந்த அந்த மரக்கட்டைகளை அவற்றினால் பற்றிப்பிடிக்க முடியவில்லை. பலமுறை முயற்சித்து கைகளில் காயங்களைத் தேடிக்கொண்ட பூதங்களால் அவற்றைத் தூக்குவற்கான எந்த உபாயத்தினையும் அன்றைய மாலைப்பொழுது வரை கண்டுபிடிக்க முடியவில்லை. மிகவும் சோர்வாகவும், களைத்தும் போயிருந்த அவைகள் பயந்தும் போயிருந்தன. குளப்பணி தங்களால் நின்றுபோனதை அரசர் அறிந்தால் கொடிய தண்டனையை அவர் பூதங்களுக்கு வழங்குவார் என்ற அமைச்சரின் எச்சரிக்கை அவற்றினை கூட்டாக ஒரு முடிவெடுக்க வைத்தது.

அதன்படி அவை சொல்லாமல் கொள்ளாமல் மலைகள் நிறைந்த அடர்ந்த காட்டுக்குள் ஓடி ஒளிந்தன. அவ்வாறு அவை ஓடியபோது ஒன்றன் பின் ஒன்றாகச் சென்றதால் அவற்றின் பாதங்கள் பட்ட இடங்களில் இன்றுவரை புற்கள் முளைப்பதில்லை என்ற நம்பிக்கையும் தம்பலகாமத்து மக்களிடையே பலகாலம் நிலைத்திருந்தது. பூதம் சரிந்த வழி புல்லும் முளைக்காது என்ற பழமொழியை 1985 க்கு முன்னர் எங்கள் ஊரில் இருந்த பல கதைசொல்லிகளிடம் இருந்து கேட்டிருக்கிறேன்.

எனக்குக் கதை சொன்னவர்களில் ஒருவர் தான் கந்தளாய்க் காட்டுக்கு வேட்டைக்காகச் சென்ற பொழுது ஒரு குகையைக் கண்டதாகவும் அங்கு ஆளுயர நெற்பொரிகள் காணப்பட்டதாகவும் கூறினார். நிட்சயமாக இது மனிதனால் உண்ணப்பட்டவை அல்ல என்பதை உணர்ந்த அவர் கட்டுத் துவக்குடன் மாலைவரை பூதங்களுக்காக காத்திருந்த-தாகவும், பின் பொழுதுபடத்துடங்கியவுடன் இரவில் பூதங்களுக்குப் பலம் அதிகம் என அறிந்திருந்ததால் தான் திரும்பிவிட்டதாகவும் கூறினார். இப்போது கந்தளாய்ப் பூதங்கள் பற்றிய பயம் மறைந்து கதைசொல்லி வந்த அவர்மீது ஒரு இனம்பியாத மரியாதை மெல்லமெல்ல உருவெடுக்கச் செய்தது. இவ்வாறு இந்தக் கதை இத்துடன் முடியவில்லை. கதைசொல்லிகளின் தனிப்பட்ட அனுபவங்களுக்கு ஏற்ப அது நீண்டும், பல் கிளைக் கதைகளைக் கொண்டதாகவும் இருந்தது.



வைத்திய கலாநிதி
த.ஜீவராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகம் 10

# மக்களில் இருந்து..... மக்களை நோக்கி

-மாயன்-

## இலக்கை அடைந்த மக்கள் போராட்டமொன்றின் பதிவுகள்

உண்ணாநோன்பிருந்த அனைவரும் குளக்கோட்டன் வளாகத்தில் கூடிய வேளையில் மக்களுடன் மக்களாகப் புலனாய்வுப் பிரிவினரும் உள்ளே வர முயன்றனர்.

ஆனால் மிக விரைவாகச் செயற்பட்ட வண.பிரபாகர் அவர்கள் மக்கள் உள்ளே வந்ததும் குளக்கோட்டன் கட்டிட பிரதான வாசலை மூடினார். அவர்கள் அனைவரும் வெளியே நிற்க வேண்டியதாயிற்று. ஆனால் அவர்கள் அனைவருக்கும் கேட்கும் முகமாகவே எமது உரைகள் தெளிவாகவும், சத்தத்துடன் அமைந்திருந்தன.

அங்கு குழுமியிருந்தவர்களிடம் எனது உரையை முதலாவதாக ஆரம்பித்தேன். எமது போராட்டத்தின் நோக்கங்களில் முதலாவது மைல்கல்லை நாங்கள் எட்டியிருப்பதை அவர்களுக்குத் தெளிவாக எடுத்துரைத்தோம். காணாமல் ஆக்கப்பட்டவர்களைக் கண்டறியும் ஆணைக்குழுவானது தமது பலவீனத்தை ஏற்றுக்-கொண்டிருப்பதை நாம் வெளிப்படுத்தினோம்.

அந்தப் பலவீனத்தைப் பற்றியும் தமிழ் மக்கள் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகள் தொடர்பாகக் கொண்டுள்ள அபிலாசைகள் பற்றியும் ஆணைக்குழுவிடம் கலந்துரையாடுவதற்கு உரிய நேரத்தை எமக்கு ஒதுக்கித் தந்துள்ளதைப் பற்றியும் நாம் மக்களிடம் தெரிவித்தோம்.

அத்துடன் ஆணைக்குழுவானது முன்மொழிந்துள்ள தற்காலிக மரணச் சான்றிதழ், தேர்வு செய்யப்பட்ட-வர்களுக்கான நூறாயிரம் ரூபா வாழ்வாதார உதவிகள் போன்றவை தொடர்பாக எமது கடுமையான கண்டனங்களை அங்கு முன்வைத்ததையும் நாம் மக்களுக்கு எடுத்தியம்பினோம்.

அதன் பின்னர் பேசிய வண. அடிகள் யோகேஸ்வரன் அவர்கள் அடுத்துவரும் செயற்பாடுகள் தொடர்பான விளக்கங்களை மக்களுக்கு வழங்கினார்.

காணாமல் ஆக்கப்பட்ட மக்களின் தகவல்கள் தமது நிறுவனத்தினால் பதிவு செய்யப்படுவதை முதலில் சுட்டிக்காட்டிய அவர் அனைவரும் பதிவு செய்யவேண்டியது மக்கியம் என்பதை வலியுறுத்தினார். அத்துடன் புலனாய்வுத்துறையினரின் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுக்க விரும்பாமல் பதிவுகள் எவற்றையும் செய்யாமல் இருக்கும் காணாமல் ஆக்கப்பட்டவரின் உறவுகளையும் பதிவுகளைச் செய்யவும் வண. யோகேஸ்வரன் அவர்கள் வலியுறுத்தினார்.

அத்துடன் ஆணைக்குழுவைச் சந்திக்கும் அணியினரைத் தீர்மானிப்பதை தமது பொறுப்பாக எடுத்துக்கொண்ட அவர் வடக்குகிழக்கு மாவட்டங்கள் அனைத்தையும் பிரதிநிதித்துவப் படுத்தக்கூடிய அங்கத்தவர்களை தெரிவுசெய்யவும், அவ்வாறு தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னடுக்கப் போவதாகவும் அங்கு தெரிவித்தார்.

அனைவரது முகத்திலும் ஏதோவொரு திருப்தி தோன்றியது. நான்கு நாட்களாகத் தொடர்ந்த அந்த பகிஷ்கரிப்பு தனது மைல்கல்லொன்றைக் கடந்ததை அவர்கள் அனைவரும் உளமாறத் தெரிந்துகொண்டனர். அத்துடன் அன்றைய நாளின் பகிஷ்கரிப்பு நிறைவிற்கு வந்தது.

உணவுத் தவிர்ப்பில் இருந்ததால் அனைவருக்கும் பழச்சாறு வழங்கும் நடவடிக்கைகளுக்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்தன. அதற்கான நிதியுதவியை ஈஸ்ட்ஹில் சிறார் பாடசாலையின் நிர்வாகத்தினர் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் வழங்கியிருந்தனர்.

இரண்டு விசுக்கோத்துகள், ஒரு கோப்பை பழச்சாறுடன் அன்றைய நாள் நிறைவிற்கு வந்தது. அனைவரும் கலைந்து சென்ற பின்னர் நாங்கள் எமது பொருட்களை வாகனங்களில் ஏற்றிக்கொண்டு அங்கிருந்து வெளியேறினோம்.

2009ம் ஆண்டுக்குப் பின்னர் மக்கள் போராட்டமொன்று அதன் மைல்கல்லைத் தாண்டியது முதற் தடவையாகப் பதிவாகியது. அந்த அதிர்வு திருகோணமலையில் தொடங்கி கிழக்கு மற்றும் வடக்குப் பிரதேசம் எங்கும் தனது அதிர்வலைகளை அனுப்பியிருந்தது. அவ்வதிர்வின் அடுத்த கட்டம் கல்முனை நகரில், அம்பாறை மாவட்டத்தில் அடுத்ததாக வெடித்தது. காலம் அவ்வெடிப்புக்களைக் கணக்கில் எடுக்கத் தொடங்கியிருந்தது.

எமது மக்கள் மயப்படுத்தப்பட்ட போராட்டத்தின் பதிவுகளை ஐக்கிய நாடுகள் சபை வரை கொண்டு சென்றனர் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள். ஐக்கிய நாடுகள் சபையின் உப



குழுவின் கூட்டத் தொடரில் திருகோணமலையில் கறுப்புத் துணிகளால் தமது வாய்களைக் கட்டிக்கொண்டு போராட்டத்தில் ஈடுபட்ட அம்மாக்களின் படங்கள் பெருந்திரையில் வெளியிடப்பட்டன.

அதனைத் தொடர்ந்த சில நாட்களில் ஐக்கிய நாடுகள் சபையில் இருந்து ஸ்ரீலங்காவின் உள்ளக விசாரணைகள் தொடர்பான முடிவொன்று வெளியாகியது. அம்முடிவு உலகை நோக்கி யாவருக்கும் ஒரு உண்மையை அறிவித்தது. அந்த உண்மை

### ஸ்ரீலங்காவின் உள்ளக விசாரணைகளின் நம்பத்தகு தன்மை கேள்விக்குரியது!

என்பதே. மக்களில் இருந்து மக்களை நோக்கி நடாத்தப்பட்ட அந்தப் பயணம் தனது இலக்கை அடைந்தது. அளப்பரிய தியாகங்களும், வலிகளும், மகிழ்ச்சிகளும் அப்பயணத்தில் ஆழ்ந்து கிடந்தன.

இலக்கை அடைந்த அந்தப் பயணத்தின் தூரநோக்கு இப்போது என்னவோ எட்டிவிடும் தூரத்தில் இருப்பதாகவே எமக்குப் படுகின்றது.

**மற்றொரு மக்கள் போராட்டத்தில் சந்திப்போம்!**

---

# தமிழரின் ஆயுதப்போரின் காட்டிக்கொடுப்பு

## விளைவுகளை எதிர்கொள்ளப்போகும் தமிழர்கள்

தமிழர்களின் சுதந்திரத்தை நோக்கி நகர்ந்த ஆயுதப் போரைப் பயங்கரவாதிகளின் தாக்குதலாகச் சித்திரத்து வந்த சர்வதேசமானது பூகோள அரசியலில் தமது நாடுகளின் பாதுகாப்பு மற்றும் வர்த்தக நன்மைகளை அதிகரிக்க வேண்டுமாயின் இலங்கையின் வரைபடத்தில் அப்போதைய காலத்தில் வரையப்பட்டிருந்த இரண்டாகிப் போன தேசங்களின் கோட்டை அழித்தொழிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியிருந்தன.

தமக்கான தேசமொன்றை வரையறுத்துக் கொண்டிருந்த விடுதலைப் புலிகளின் வரைபடங்களை அழித்தொழிக்கும் ஆவலுடன் செயற்படத்தொடங்கிய சர்வதேசத்தின் முதல் முயற்சிக்கு வித்திட்டது அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதல். 2011ம் ஆண்டின் மூன்றாவது காலாண்டுப் பகுதியில தகர்த்தெறியப்பட்ட அமெரிக்க இரட்டைக் கோபுரங்களின் அதிர்வினால் பயங்கரவாதத்திற்கெதிரான போர் *(WAR ON TERROR)* என்பதை அன்றைய அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ் ஆரம்பித்தார். எனினும் அத்திட்டமானது பயங்கரவாதத்திற்கெதிரான பூலோகப் போர் *(GLOBAL WAR ON TERRORISM)* ஆகப் பரிணமித்து அனைத்து அதிபயங்கர ஆயுதக் குழுக்களையும் அடக்கும் நடவடிக்கையாக நேட்டோ நாடுகளால் முன்னெடுக்கப்பட்டது.

2013ல் அமெரிக்க சனாதிபதியாகப் பொறுப்பேற்ற ஒபாமா பயங்கரவாதத்திற்கெதிரான பூலோகப் போரினை மட்டுப்படுத்திய போதும் அந்தச் சில காலப்பகுதிக்குள் எந்தெந்த ஆயுதக்குழக்கள் பயங்கரவாத இயக்கமாக அறிவிக்க்ப்பட்டனவோ அவற்றின் மீதான பயங்கரவாத முத்திரை அகற்றப்படவில்லை.

தமிழர்களின் ஆயுதப் போரை தலைமையேற்று வழிநடத்தி வந்த விடுதலைப்புலிகளைப் பயங்கரவாத இயக்கமாக இந்தியா மட்டுமே அறிவித்திருந்த அக்காலப்பகுதியில் ஐரோப்பிய அமெரிக்க நாடுகளும் விடுதலைப்புலிகளின் பெயரை பயங்கரவாதப் பட்டியலில் சேர்க்கத் தயங்கவில்லை.

சர்வதேசம் தமிழர்களின் விடுதலையை நேசித்த ஆயுதப்படையை பயங்கரவாத இயக்கமாக முத்திரை குத்துவதற்குப் படடியலிட்ட குற்றங்கள் பல.

அவற்றுள் மனித உரிமை மீறல்களாக குடிமக்கள் மீது ஆயுதத் தாக்குதல்கள், சிறுவர் போராளிகள், இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைகள், யுத்தக் கைதிகளின் கொலை, யுத்தக் குற்றங்கள் என்பவையும் ஏனைய குற்றச் செயல்களாக கடற்கொள்ளை, ஆயுதக் கடத்தல், மனிதக்கடத்தல், மனிதப் பிரிப்புக்கள், சட்டவிரோத காசுப் பரிமாற்றங்கள், கடவுச் சீட்டு மோசடிகள், போதைப்பொருள் கடத்தல், கடனட்டை மோசடிகள், கணனி வலைப்பின்னல் திருட்டுக்களும் மோசடிகளும் என அப்பட்டியல் நீண்டுகொண்டேயிருந்தன.

இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு ஒட்டுமொத்தமாக 32 உலக நாடுகள் விடுதலைப்புலிகளைத் தடை செய்தனர். அவர்களைப் பயங்கரவாத இயக்கமாக முத்திரை குத்தினர்.

சர்வதேசமே விடுதலைப்புலிகளைப் பயங்கரவாத இயக்கமாக முத்திரை குத்திய போதிலும் விடுதலைப் புலிகளின் போராட்டமானது இரண்டுவகையான பார்வைப் புலங்களைக் கொண்டிருந்தது.

ஈழத்தில் வாழ்ந்துகொண்டிருந்த தமிழ் மக்களிற் பெரும்பாலானவர்களும் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களிற் பெரும்பாலானவர்களும் விடுதலைப்புலிகளின் போராட்டத்தைத் தமிழ் மக்களின் சுதந்திரப் போராட்டமாகவே பார்த்தனர். அதே வேளை இந்தியத் தமிழ் நாட்டு மக்களிற் கணிசமான மக்கட் தொகையினரும் இந்தப் போராட்டமானது தனித் தமிழ் நாடொன்றை உருவாக்கும் வகையானது என்பதை ஏற்றுக்கொண்டு அப் போராட்டத்தை சுதந்திரப் போராட்டமாகவே தமது பார்வைப்புலத்தினுள் உள்ளடக்கியிருந்தனர். எஞ்சியோர் எல்லோருமே இப் போராட்டத்தை பயங்கரவாதப் பிரச்சனையென்ற பார்வைப் புலத்தினுள் உள்ளடக்க முனைந்தனர்.

விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத இயக்கமாக வரையறுக்க உதவிய பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் யாவும் சிறயதொரு நாடொன்றில் விடுதலைக்காகப் போராடும் இயக்கமொன்று தமது இருப்பைத் தக்கவைப்பதற்காகவும், பலப்படுத்துவதற்காகவும் மேற்கொள்ளளும் நடவடிக்கைகளே என ஒரு சாரார் வாதிடத் தொடங்கியதுடன் தமிழ் மக்கள் என்ற இனம் அழிவைச் சந்திப்பதாலேயே இவ்வாறானதொரு அமைப்பு செயற்பட வேண்டிய தேவையை எதிரணி உருவாக்கியுள்ளதே ஒழிய தாமாகவே ஆயுதம் ஏந்த தமிழ் இளைஞர்கள் முன்வரவில்லை என்ற கருப்பொருளையும் அச்சாரார் தமது விவாதத்தில் இணைத்திருந்தனர்.

இங்குதான் தமிழ் அரசியல் கட்சிகளின் கூட்டான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற அரசியல் கட்சியின் நகர்வு விடுதலைப் புலிகளின் அரசியல் அபிலாசையான தமிழ்ஈழம் என்ற நோக்கை அடைவதற்காக விடுதலைப்புலிகளின் தலைமைத்துவத்தால் உருவாக்கப்பட்டது.

இங்கு கவனிக்க வேண்டியது யாதெனில் அக்கூட்டமைப்பின் தலைவர்கள் ஒருவரைத் தவிர எஞ்சிய அனைவருமே முன்னர் விடுதலைப் புலிகளால் துரோகப் பட்டியலில் இணைக்கப்பட்டவர்கள் என்பதே.

எனினும் காலத்தின் தேவையைக் கருதி அரசியல் முகமொன்றை தமிழ் மக்களின் விடுதலைப் போருக்கு உருவாக்கும் எண்ணத்துடனேயே தமிழத் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

இந்த அரசியல் முகமானது தமிழ் மக்களின் சுயநிர்ணயம் என்பதைத் தமது தாரக மந்திரமாகக் கொண்டு 2001ம் ஆண்டின் இறுதிக்காலாண்டில் இருந்து செயற்படத் தொடங்கியது.

எனினும் 2009ம் ஆண்டில் விடுதலைப் புலிகளின் போர் முடக்கப்பட்ட பின்னர் அக்கூட்டமைப்பில் மாற்றம் ஒன்று உருவாகியது.

யாரெல்லாம் விடுதலைப் புலிகளால் துரோகப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தார்களோ அவர்கள் தவிர்ந்த ஏனையவர்கள் அக்கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டார்கள். அவர்கள் தாயகம் தேசியம் சுயநிர்ணயம் என்ற கோட்பாட்டுடன் தனித்தியங்க வேண்டிய நிலை ஏற்பட ஏனைய துரோகப் பட்டியல் அணியினர் தமிழத் தேசியக் கூட்டமைப்பாக தம்மை வெளிப்படுத்தினர். அதன் மிகமுக்கிய கட்டமாக விடுதலைப் புலிகளின் போராட்டத்தை பயங்கரவாதப் போராட்டம் என சர்வதேசத்தில் அவர்களும் ஏற்றுக்கொண்டனர்.

தமிழ் மக்களால் ஏகப் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டவர்களே விடுதலைப் புலிகளின் போராட்டத்தை பயங்கரவாதப் போராட்டம் என சர்வதேசத்தில் வெளிப்படுத்தியதால் ஒட்டுமொத்தத் தமிழ் மக்களின் ஒப்புதல் வாக்குமூலமாக அச் செய்தி வெளியாகியது. அதை எதிர்த்து எதையும் செய்ய முடியாது ஈழத் தமிழர்கள் அமைதி காத்தனர்.

இங்கு தான் தனி நாட்டுக்கான போராட்டம் ஒட்டுமொத்தமாகக் காட்டிக்கொடுக்கப்பட்டது என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

இலங்கைத்தீவில் வாழும் தமிழர்களுக்கு இனப்பிரச்சனையென்று ஒன்று இங்கு இல்லை என்றும் அவர்களிலிருந்து பிரிந்த சிறு அணியினரே ஒரு பயங்கரவாதப் போராட்டத்தை இங்கு நிகழ்த்தியிருக்கின்றனர் என்றும் ஒரு மாயை சர்வதேசத்தில் தமிழ்த் தலைமைகளால் வெளியிடப்பட்ட கூற்றுக்களால் உருவாக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் இலங்கையில் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் அழிக்கப்பட்டு விட்டனர் எனில் இலங்கைத் தீவில் எவ்வித பிரச்சனைகளும் தற்போது தமிழருக்கு இல்லை என்பதை நாம் தெரிவு செய்தவர்களின் கூற்றுக்கள் தெளிவுபடுத்தியுள்ளன. இதனால் இனித் தமிழர்கள் தேசிய அரசியலில் கலந்து கரைந்து போவதைத் தவிர எவ்வித வேண்டுகோளையும் சர்வதேசத்தின் மீது விடுக்க முடியாத நிலை தோன்றியுள்ளது. அதனாலேயே தற்போதைய நல்லாட்சிக்கான அரசுக்கெதிரான தமிழர்களின் போராட்டங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே நசுக்க முனைகின்றது.

இக்காட்டிக் கொடுப்பின் விளைவுகள் தமிழருக்கு இனிக் கடுமையாகவே இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்


INFOMATION TECHNOLOGY

MOBILE




ஸ்மார்ட் கைப்பேசி நிறுவனங்களுக்குள் ஏற்பட்டுள்ள போட்டி நிலைமை காரணமாக ஒவ்வொரு நிறுவனமும் புதிய பல அம்சங்களை உள்ளடக்கியதாக கைப்பேசிகளை வடிமைத்து வருகின்றன. எனினும் ஸ்மார்ட் கைப்பேசிகளில் தரப்படும் அம்சங்களுக்கு ஏற்ப அவற்றின் மின்கலங்கள் செயற்படுவதற்கு போதிய சக்தியைக் கொண்டிருப்பதில்லை.

இதனால் கடந்த காலங்களில் சம்சுங்கின் Galaxy S4 மற்றும் iPhone 5 என்பவற்றின் மின்கலங்கள் வெடித்துச் சிதறியுள்ளன. இவற்றினைத் தொடர்ந்து தற்போது Google Nexus 6 ஸ்மார்ட் கைப்பேசியின் மின்கலமும் வெடித்துச் சிதறியுள்ளது. இதனால் பயனர்கள் குறித்த கைப்பேசி வகை தொடர்பாக கூகுள் நிறுவனத்திடம் புகார் தெரிவித்துள்ளனர்.




## மின்கலத்தால் இயங்கும் விமானம்


மின்கலத்தில் கிடைக்கும் சக்தியில் இயங்கும் 10 என்ஜின் கொண்ட நாசாவின் புதிய விமானத்தின் சோதனை வெற்றிகரமாக முடிந்தது.

ஒரு ஹெலிகாப்டரை போலவே டேக்-ஆப் ஆகி தரை இறங்கும் இது ஒரு விமானத்தின் சக்தியைக் கொண்டது.

கிரீஸ்டு லைட்னிங் அல்லது புடு-10 என்று அழைக்கப்படும் இந்த விமானம் பல்வேறு சோதனைகளில் வெற்றி பெற்றுள்ளதாக ஹாம்டனில் உள்ள நாசா மையத்தின் விண்வெளி பொறியாளர் பில் அறிவித்துள்ளார்.

இந்த விமானம் குறித்து பில் கூறுகையில் "சிறிய பொருட்களை டெலிவரி செய்ய இந்த விமானம் உதவும். விவசாயத்தை நீண்ட நேரம் கண்காணிப்பது, மேப்பிங், தனி நபர் உபயோகம் என்று பல வகையில் இந்த விமானம் பயன்படும்" என்றார்.



## செவ்வாயில் சூரிய அஸ்தமனம்

செவ்வாய்க் கிரகத்தின் மேற்பரப்பில் தரையிறங்கியுள்ள நாசா விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தின் கியூரியோசிற்றி விண்கலமானது அந்தக் கிரகத்திலான சூரிய அஸ்தமனம் தொடர்பில் புகைப்படங்களை எடுத்து அனுப்பி வைத்துள்ளது.

## இனி SKYPE இல்லை

OTHER

மைக்ரோசொப்ட் நிறுவனம் குமிழிகள் போன்ற வடிவமைப்பில் உருவாக்கப்பட்ட லோகோவை அடிப்படையாகக் கொண்ட Skype எனும் பெயரை பதிவு செய்ய முற்பட்டுள்ளது.

இதற்கு எதிராக அமெரிக்க நிறுவனம் ஒன்று வழக்கு தொடர்ந்துள்ளது. இவ்வழக்கினை விசாரித்த நீதிமன்றம் Skype எனும் பெயர் Sky எனும் பெயரைப் போன்றே காணப்படுவதாகவும், Sky லோகோவில் காணப்படும் நிறம் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளது.


இதன் காரணமாக Skype எனும் பெயரில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய நிலைக்கு மைக்ரோசொப்ட் நிறுவனம் தள்ளப்பட்டுள்ளது.

## உணர்வை வெளிக்காட்டும் கண்ணாடி

கணனி மென்பொருள் தயாரிப்பில் முன்னணியில் உள்ள மைக்ரோசொப்ட் நிறுவனம், ஒருவர் நினைப்பதை தெளிவாக காட்டும் மூக்கு கண்ணாடியை உருவாக்கியுள்ளது. இந்த கண்ணாடியில் பல நுண்ணுர்வுக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. இதனால் கண்ணாடி மூலம் காணப்படுபவரின் உடல் வெப்பத்தைக் கூட எளிதாக அறிய முடியும்.

மேலும், எதிரில் உள்ள ஒரு நபரின் செய்கைகள், குரல் ஆகியவற்றை மைக்ரோசொப்டின் இணையத் தகவல் சேமிப்பகத்துக்கு அனுப்பி உடனுக்குடன் ஆய்வு செய்து, அவரது எண்ணங்கள் குறித்த தகவல்கள் மூக்குக் கண்ணாடி அணிந்தவருக்கு அளிக்கப்படுகிறது. இதில் உருவாக்கப்பட்டுள்ள மென்பொருள், வெவ்வேறு வகையான எண்ணங்களையும் சரியாக வேறுபடுத்தி, தகவல் அளிக்கக் கூடியதாக உள்ளது.

இருப்பினும் இந்த மூக்குக் கண்ணாடி விற்பனைக்கு வருமா என்பது குறித்த தகவல்களை அந்த நிறுவனம்




## ∴போன் கவசம் அறிமுகம்

அப்பிள் நிறுவனத்தினால் அண்மையில் அறிமுகம் செய்யப்பட்ட iPhone 6 ஸ்மார்ட் கைப்பேசியானது மக்கள் மத்தியில் பலத்த வரவேற்பினை பெற்றுள்ளது. இந்நிலையில் குறித்த கைப்பேசியினை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு துணைச் சாதனங்கள் அறிமுகம் செய்யப்பட்டு வருகின்றன.



இவற்றின் வரிசையில் தற்போது நீர் உட்புகாத மின்கல கவசம் (Waterproof Battery Case) Mophie நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது.

## இனி இரத்த தட்டுப்பாடு ஏற்பாது

தானம் வழங்கப்படும் ரத்தம் எந்தப் பிரிவாக இருந்தாலும், அதை எந்த வகை ரத்தப் பிரிவினருக்கும் செலுத்துவதற்கேற்ப ஒரு புதிய நொதியம் (என்ஸைம்) உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த நொதியம், ஏ பிரிவு ரத்தத்திலும், பி பிரிவு ரத்தத்திலும் மட்டுமே காணப்படும் உடற்காப்பு ஊக்கிகளை (ஆன்டிஜென்) பிரித்து எடுக்கிறது. இதனால் அந்த ரத்தம், ஓ பிரிவு ரத்தத்தின் தன்மையைப் பெறுகிறது. ஓ பிரிவைச் சேர்ந்த ரத்தத்தை, அனைத்து ரத்தப் பிரிவினருக்கும் செலுத்த முடியும் என்பதால் இந்த என்ஸைம் செலுத்தப்பட்ட ஏ, பி பிரிவு ரத்தத்தையும் அனைத்து நோயாளிகளுக்கும் செலுத்த முடியும்.

# குறுக்கெழுத்து புதிர் 059

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 க | | 2 | | | ■ | ■ | 3 | 15 ப |
| 4 | | 5 | | மா | | ■ | | ழ |
| 6 | ர் | | 14 | | | ன் | | |
| | ■ | 7 | | கோ | | 16 | லை | |
| ■ | 8 | | | 17 | | | ■ | |
| ■ | ழை | ■ | 9 | | ன் | 10 | | |
| 11 | | | 12 | | ■ | த | ■ | |
| ■ | ■ | ■ | | ■ | ■ | | ■ | ர் |
| 13 | ண் | | | | ம் | ■ | ■ | ■ |

## இடமிருந்து வலமாக

1. சுமை தூக்கப் பயன்படுவது
2. பெண்ணை இவ்வாறும் அழைப்பர்
3. ஒட்டுவதற்குப் பயன்படும் இது மாறியுள்ளது.
4. மகளிர் இதை அதிகம் விரும்புவர் - குழம்பியுள்ளது
5. இரும்பு வேலை செய்யுமிடம்
6. முருகன்
7. ஞானசம்பந்தரால் பாடல் பெற்ற திருத்தலங்களில் ஒன்று
8. கடதாசி தொழிற்சாலை அமைந்துள்ள இட்ம்
9. சைவர்களின் முழுமுதற் கடவுள்
10. தோகை விரித்தாடும் இது
11. கண்ணகியின் கதையின் முக்கிய பொருள்
12. கல்லானாலும் கணவன் ….. ஆனாலும் புருஷன்
13. வெயில் அதிகமாக இருக்கும் காலத்தை இவ்வாறும் கூறுவர்

## மேலிருந்து கீழாக

1. மேற்பார்வையாளர்
3. இந்துக்கள் வைணவம், …………. ஏன பிரிந்துள்ளனர்
5. தளபதியின் ஓர் படம்
8. முக்கனிகளுள் ஒன்று
12. செட்டிகளைக் குறிக்கும் - திரும்பியுள்ளது
14. இந்திய தமிழ்நாட்டில் அமைந்துள்ள ஓர் இடம்
15. ஆதிகுடிகளை இவ்வாறும் அழைக்கலாம்
16. பெண்களுடன் லீலைகளில் ஈடுபடுபவன்
17. அதிகாலையில் அனைவரையும் எழுப்பும் ஓர் பறவை

**விடையை அனுப்ப வேண்டிய முகவரி :**

முடிவுத்திகதி : 15.05.2015

**மலைமுரசு. இல - 159ஏ,**
**கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.**

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

# புதிர் 058 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 13 அ | ■ | 1 அ | ச | கா | ய | 14 சூ | ர | ன் |
| 2 ந் | 15 அ | தி | ■ | ■ | ■ | 3 வ | த | ம் |
| 4 தா | வ | ர | ப | ட் | ச | ணி | ம் | ■ |
| ட் | 5 தா | ன் | தோ | ன் | றி | ■ | 6 ம | டு |
| 7 டி | ர | ம் | ■ | ■ | ■ | 8 ப | த | ம் |
| க் | பு | ■ | ■ | ■ | 16 சி | ல | ந் | 17 தி |
| 9 க | ரு | ட | ன் | ■ | ல | க | ம் | க |
| ட் | 10 ச | ட | ம் | ■ | ம் | ணி | ■ | ட |
| 11 சி | ன் | ன | வ | ன் | 12 பு | டை | ய | ன் |

பாராட்டு பெறுவோர் :

செல்வி. ம. தரணியா
நித்தியபுரி

திரு. கே. பாலச்சந்தர்
துவரங்காடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## திரை விமர்சனம்
## ஓ காதல் கண்மணி
## இயக்குனர் மணிரத்தினத்தின் துல்கர், நித்தியாமேனன் நடிக்கும்

மும்பையில் சந்தித்து கொள்ளும் துல்கர், நித்யா இரண்டாம் சந்திப்பிலேயே நெருக்கம் ஆகிறார்கள். 'திருமணத்தில் நம்பிக்கை இல்லை' என்ற ஒற்றை புள்ளியில் ஒருவருக்கொருவரை பிடித்துப்போக காதலில் விழுகிறார்கள். துல்கருக்கு அமெரிக்கா செல்வது தான் லட்சியம் அதேபோல நித்யாவுக்கு பாரிஸ். இவர்களின் லட்சியம் நிறைவேறும் வரை துல்கர் தங்கியிருக்கும் பிரகாஷ்ராஜ் வீட்டிலேயே Living Together ஆக வாழலாம் என்ற முடிவுக்கு வருகிறார்கள். ஒருகட்டத்தில் இருவீட்டாரும் திருமணம் செய்ய கட்டாயப்படுத்த துல்கர், நித்யா இருவரும் அதை மறுக்க, கடைசியில் திருமணம் செய்து கொண்டார்களா? இல்லையா? என்பதுதான் கதை.

தன் துள்ளலான நடிப்பில், குறும்பான பார்வையில் சுறுசுறுப்பான வசனங்களின் மூலம் அனைவரையும் கவர்கிறார் நித்யா மேனன் முக பாவனைகளுக்கு பஞ்சமே இல்லாத முகம். பிரகாஷ்ராஜ் - லீலா சாம்சன் ஜோடி காதலுக்கு முன்னுதாரணம்! நீளமான முதல் பாதி, இலக்கே இல்லாமல் நகருகின்றது. மொத்தத்தில் ஓ காதல் கண்மணி கண்டிப்பாக அலைபாயுதேவின் இரண்டாம் பாகம் என்று சொல்லலாம்.

இருப்பினும் மணிரத்னம் போட்டு வைத்த காதல் திட்டம் "டபுள்" ஓகே கண்மணி!





## மேனன் ஃபெயில்லாயிட்டாராம்!



ஒன்பதாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் போதே சினிமாவுக்குள் நுழைந்தவர் மேனன். இர் நடித்த அனைத்து படங்களுமே ெற்றிப் படங்கள் தான். தற்பொழுது கூட வீரம் சிவா இயக்கத்தில் தல யின் தங்கையாக நடித்து வருகின்றார். இருப்பினும் கடந்த நாட்களில் ப்ளஸ் 2 பரீட்சைகள் எடுப்பதற்காக சினிமாவில் இருந்து சற்றுத் தள்ளி இருந்தார். தற்பொழுது பரீட்சை முடிவுகள ெளியாகியுள்ளதாகவும், அதில் மேனனுக்கு கணித பாடத்தில் அதி குறைந்த புள்ளி கூட கிடைக்கவில்லை எனவும் வதந்திகள் பரவி வருகின்றன. ஆயினும் தனக்கின்னமும் புள்ளிகள் ெளிவரவில்லை எனவும் வதந்திகளைப் பரப்ப வேண்டாம் எனவும் நம்பத்தகு வட்டாரங்களிடம் மேனன் தெரிவித்துள்ளதாக தெரிய வருகின்றது.

## அடுத்த வெற்றிப்படம் 17இல்



தமிழ் சினிமாவில் கதாநாயகனாக மட்டுமில்லாமல் ஒரு தயாரிப்பாளராக, பாடகராக, பாடலாசிரியராக அனைத்திலும் வெற்றி கொண்டு வலம் வருபவர் தனுஷ். தனுஷின் அடுத்த வெற்றி படமாக களம் காணப்போவது மாரி. இப்படத்தை பாலாஜி மோகன் இயக்க, அனிருத் இசையமைத்து இருக்கிறார். இதன் பாடல் வெளியீட்டு விழாவை இம்மாதம் 25ம் தேதி நடத்த முடிவு செய்துள்ளனர். அதோடு படத்தை ஜூலை 17ம் தேதி வெளியிடப்போவதாக திட்டமிட்டுள்ளனர்.

## அஜித் – சூர்யா மனம் திறக்கும் பிரபு


சமீபத்தில் சூர்யா, அஜித் இருவரிடம் பணிபுரிந்தது குறித்து வெங்கட் பிரபுவிடம் கேள்வி கேட்கப்பட்டது. இதற்கு இவர் 'அஜித் சார் என்னிடம் ஒன் லைன் மட்டுமே கேட்டார், உடனே நடிக்க சம்மதித்து விட்டார்.சூர்யா சார் என முழுக்கதையையும் கேட்டுவிட்டு தான் நடிக்க சம்மதித்தார். ஆனால், இருவருமே தத்தமது படப்பிடிப்பு காட்சிகள் முடிந்தாலும், மற்றவர்கள் நடிப்பதை பார்த்து விட்டு தான் செல்வார்கள்' என கூறியுள்ளார்.

## 5 ஆண்டு சிறை தண்டனையா??

காரை ஏற்றி ஒருவரை கொன்ற வழக்கில் பாலிவுட் நடிகர் சல்மான் கானுக்கு மும்பை நீதிமன்றம் 5 ஆண்டுகள் சிறைத்-தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. இந்த தீர்ப்புக்கு ஆதரவாக பலர் கருத்து தெரிவித்துள்ள நிலையில், ஒருசில நடிகர்கள் சல்மான் கானுக்கு ஆதரவாக கருத்து தெரிவித்தனர்.

அந்த வகையில், பாலிவுட் பாடகர் அபிஜீத் சல்மானுக்கு ஆதரவாக கருத்து தெரிவித்தார். நடைபாதை என்பது தூங்குவதற்கு அல்ல என்றும், நடந்த விபத்துக்கு டிரைவரோ, மது அருந்தியதோ காரணம் அல்ல என்றும் அவர் கூறியிருந்தார்.

ஐஸ்வர்யா தனுஷின் இயக்கத்தில் வெளியான "வை ராஜா வை" திரைப்படத்தின் திரைவிமர்சனம்



## தனுஷால் பிரிந்த காதலர்கள்



ஆரம்பத்தில் இருந்தே வருணின் குடும்பத்தினருக்கு திரிஷாவை பிடிக்கவில்லையாம். சம அந்தஸ்துள்ள வேறு பெண்ணை திருமணம் செய்து வைக்க முனைப்பு காட்டினர். வருண் பிடிவாதமாக இருந்ததால் வேறு வழியின்றி சம்மதித்தனர். நிச்சயதார்த்தம் முடிந்ததும் நடிகர் – நடிகைகளுக்கு இருவரும் விருந்து அளித்தார்கள். அந்த விருந்துக்கு தனுசை திரிஷா அழைத்து இருந்தார். தனுசை வருணுக்கு பிடிக்காதாம். இருவருக்கும் இடையே மோதல் இருந்து வந்ததாம். அவரை திரிஷா விருந்துக்கு அழைத்ததால் வருண் மணியன் கோபப்பட்டாராம். இருவருக்கும் வாய் தகராறு ஏற்பட்டு இது சரிபட்டு வராது என்று பிரிய தயாரானார்களாம்.

## ஏன் விபரீத ஆசை

சிவகார்த்திகேயன் சூப்பர் ஸ்டாரின் தீவிர ரசிகர் என்பது அனைவரும் அறிந்ததே. இந்நிலையில் சமீபத்தில் இவர் ஒரு பேட்டியில் 'எனக்கு சூப்பர் ஸ்டாரின் பாட்ஷா படம் தான் மிகவும் பிடிக்கும்' என்று கூறியுள்ளார். பேட்டி கொடுத்ததோடு மட்டும் இல்லாமல், நெருங்கிய நண்பர்களிடம் இப்படி ஒரு கதையை ரெடி செய்து வாருங்கள் என்றும் கூறி வருகிறாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் 52

# மாந்தரைப் பீடிக்கும் கெட்ட ஆவிகள்



(வி. என். சந்திரகாந்தி)

அண்மையில் 'மொபைல் போனில்' பிடிபட்ட ஆவிகள் என்ற தலைப்பில் சில 'வீடியோ கிளிப்ஸ்' ஐ பார்க்க முடிந்தது. 'கூட்டமாக நிற்கும் பெண்களுடன் சேர்ந்து நிற்கும் ஆவி', 'மோட்டார் சைக்கிள் ஓட்டுபவருடன் சேர்ந்து பயணிக்கும் ஆவி', 'விபத்து நேர்வதிலிருந்து காப்பாற்றும் ஆவி', இப்படி பற்பல!. 'வீடியோவில்' பல திருகுதாளங்களைச் செய்யும் காலம் இது! பல நடிகைகளுக்கு முகம் மாற்று சத்திர சிகிச்சை கூட செய்வதாக தகவல்கள் கசிகின்றன. இவையெல்லாவற்றையும் நாம் நம்ப வேண்டும் என்ற அவசியம் கிடையவே கிடையாது!

ஆனால் நாம் கெட்ட ஆவிகளால் பீடிக்கப்பட்ட பல மனிதர்களுடன் நாளாந்தம் பழகிக் கொண்டிருக்கின்றோம் என்றால் அதை நீங்கள் நம்பாமல் இருக்க முடியாது. ஆவிகள் மனிதர்களை கொண்டு நடாத்துகின்றன. தம் இஷ்டம் போல ஆட்டுவிக்கின்றன. தம்மை கெட்ட ஆவிகள் பீடித்திருக்கின்றன என்ற உண்மையை அப்படியான மனிதர்களால் உணரக்கூட முடிவதில்லை. அவ்வளவு இலாவகமாக அந்த ஆவிகள் மனிதர்களில் அரசோச்சுகின்றன. கெட்ட ஆவியால் பீடிக்கப்பட்ட ஒருவர் சாதாரண ஒரு மனிதருடன் பழகும்போது கெட்ட ஆவி சற்று அடக்கி வாசிக்கும். ஆனால் கெட்ட ஆவியால் பீடிக்கப்பட்ட ஒருவர் மற்ற ஒரு கெட்ட ஆவியால் பீடிக்கப்பட்டவரை சந்திக்கும் போது பெரும் களேபரமே ஏற்பட்டுவிடும். அங்கு கொலைகள் கூட சம்பவிப்பதற்கு காரணம் கெட்ட ஆவிகளின் பிடிவாதம் தான். பொறுத்த நேரத்தில் அந்த கெட்ட ஆவிகள் மனிதனின் சிந்தனையை துண்டித்துவிட்டு தமது இஷ்டப்படி அட்டகாசம் செய்து விடுகின்றன. முடிவு சம்பந்தப்பட்ட மனிதர்கள் சிறைக்கு செல்ல வேண்டி நேரிடுகின்றது. மனிதர்கள் சுதந்தரமாக நடமாட முடியாமல் சிறைக்கு சென்றதும் அந்த ஆவிகள் அவர்களை விட்டு தூர விலகி சென்று விடுவதுதான் பெரிய ஆச்சரியம்!

இந்த உண்மையை யாராவது உங்களுக்கு சொன்னால் அறவே நம்ப மாட்டீர்கள். ஏனென்றால் ஆவிகளை நாம் எமது புலன்களை கொண்டு பார்க்க முடியாது. இவ்வளவற்றையும் உங்களுக்கு கூறிவிட்டு இறுதியில் ஆவிகளே இல்லை என்றால் நீங்கள் கட்டாயம் கோபத்திற்கு உள்ளாவீர்கள். எனவே கெட்ட ஆவிகளை பெயர்வாரியாக உங்களுக்கு கூற வேண்டிய கடமைப்பாடு இருக்கவே இருக்கின்றது.

ஆவிகளில் எல்லாம் மிக மிக கெட்ட ஆவி அகம்பாவமாகும். அதற்கு கீழ்ப்பட்ட ஆவிகளாக கர்வம், தற்செருக்கு தலைக்கணம், அகங்காரம், பிடிவாதம், திமிர் என்று பல ஆவிகள் மனிதர் மீது செல்வாக்கு செலுத்திக்கொண்டிருக்கின்றன.

அகம்பாவம் கொண்ட ஒருவன் தன்னைத்தானே புகழின் உச்சாணிக் கொப்பில் வைத்து கற்பனை செய்து கொள்வான். பணக்காரர்களிலெல்லாம் தானே அதியுயர்ந்த பணக்காரனென்றும், அறிவுடையோரிலெல்லாம் தானே அதிகம் அறிவுடையவன் என்றும், பலத்தில் தானே சூரனென்றும் இன்னும் சொல்லப் போனால் தான் கடவுளின் பிரதிநிதி என்றும் கூட அவன் திடமாக நம்பிக்கொண்டிருப்பான். பிடிவாதம் அவனுடைய சிறப்பம்சமாக இருக்கும். அகம்பாவம் காரணமாகவே சிலர் தாம் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று பிடிவாதம் செய்கின்றார்கள். அவர்கள் பிரதானமாக மற்றவர்களின் கருத்தை ஏற்றுக்கொள்வது இல்லை. மற்றவரின் காரியசித்தியை அவர்கள் பொறுத்து கொள்ளமாட்டார். தமது வெற்றிக்கு முயற்சிப்பதைக் காட்டிலும் மற்றவர்களின் முன்னேற்றத்தை தடுப்பதில் மிகுந்த கண்ணும் கருத்துமாக இருப்பர்.

ஊரிலேயே தமது வீடுகள் தான் பெரிதாக இருக்க வேண்டும். தம் பிள்ளைகளே படித்து பெரிய பதவிக்கு வர வேண்டும். தமது பிள்ளைகளுக்கே சிறந்த வரன் அமைய வேண்டும் என்றெல்லாம் எண்ணுவார்கள். பிறருடைய பிள்ளைகளுக்கு எதுவும் நன்றாக அமையக்கூடாதென்று அப்பிள்ளைகளின் முயற்சிக்கு குந்தகம் விளைவிக்கக்கூடிய முயற்சிகளிலும் ஈடுபடுவர். அது சாத்தியமாகாவிட்டால் வன்முறையிலும் அடாவடித்தனத்திலும் கூட இறங்க தயங்கமாட்டார்.

அகம்பாவத்தால் பீடிக்கப்பட்ட ஒருவன் அந்த உண்மையை உணரமாட்டான். ஆனால் அவனையும் அவனது செயல்களையும் அவதானிக்கும் பிறர் அவனது 'தலைக்கணத்தை' இலகுவில் அறிந்து கொள்வது மட்டுமன்றி அவனை தமது வாழ்விலிருந்து ஒதுக்கி வைத்தும்விடுவர்.

அப்படி அவர்கள் அவனை ஒதுக்கி வைத்து விட்டாலும் அவனது 'கர்வம்' அவனை உணரவிட மாட்டாது. பிறருக்கெல்லாம் தானே உதவி செய்தால் தான் உண்டு என்ற 'தற்செருக்கில்' அலைந்து திரிவான். பொய் பேசுவதில் கில்லாடியாக இருக்கும் இவர்கள், மற்றவர்களை சிரமப்படுத்தியும், தன்னை உயர்த்தியும் பேசுவதில் கண்ணும் கருத்துமாக இருப்பார்கள்.

அடுத்த கட்டமாக தமக்கு துணையாக சில அடியாட்களை வைத்திருப்பர். தமது பிடிவாதங்களை சிறிதேனும் விட்டுக் கொடுக்க சம்மதிக்காத அவர்கள் அவற்றை நிறைவேற்ற பல திட்டங்களை வகுத்து அடியாட்கள் மூலம் சாதிப்பர்.

ஊரில் ஒரு இளைஞனும், யுவதியும் காதலித்தால் அது பற்றி பெற்றோருக்கு கருத்து வேற்றுமை இல்லாவிட்டாலும் கூட சாதி, சமயம், இனம் என்ற திமிர் பிடித்த அவர்கள் ஊருக்கே பெரிய சாபக்கேடு நேர்ந்ததாகவும், அதனை தடுக்க வேண்டிய தார்மீக கடன் தம்மையே சாரும் என்றும் அட்டகாசம் செய்வர். பாவம் அந்த இளைஞனும் யுவதியும் தலைமறைவு வாழ்க்கை வாழ வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாவார். பெற்றோர் தலையில் கையை வைத்துக் கொண்டு வீட்டில் குந்தி விடுவார்கள்.

அகம்பாவம் அரசியலில் எவ்வளவு தூரம் ஊடுருவி மக்களின் வாழ்க்கையை சீரழிக்கின்றது என்பதற்கு இக்கால கட்டம் பெரும் எடுத்துக்காட்டாக உள்ளது. நானே தலைவன் நானே எல்லாம் ஒரு ஆணை பெண்ணாகவும், ஒரு பெண்ணை ஆணாகவும் மாற்றுவதை தவிர மற்ற அனைத்து சக்திகளும் என்னிடத்தில் உண்டு என்ற 'அகங்காரத்துடன்' கூடிய தலைமைத்துவத்தால் மக்கள் பெரும் துன்பத்தை அனுபவிக்க வேண்டி நேரிட்டது. ஒரு கிராமத்தில் சாதாரண குடிமகனாக வாழ்ந்திருக்க வேண்டிய ஒருவர் மக்களின் வாக்குப் பலத்தாலும் பதவிக்கே உரிய அதிகாரங்களாலும் நினைத்தவை எல்லா-வற்றையும் சாதிக்க முடிந்திருக்கின்றது. ஒருவரின் அகங்காரம் தன்னைச்சுற்றி பாதுகாப்பு எல்லைகளை ஏற்படுத்திக் கொண்டு எப்படி எப்படி எல்லாம் ஆட்டம் போட அனுமதிக்கின்றது என்று பாருங்கள். அதற்கெதிராக விசாரணையென்றும், சட்டநடவடிக்கை என்றும் எடுத்தால் அது குற்ற செயல் போல கணிக்கப்படுவதுடன் அதை தடுக்கும் நடவடிக்கைகளில் சிலர் ஆர்ப்பாட்ட-த்தில் ஈடுபடுகின்றார்கள்.



இவர்களெல்லாம் தமது தவறுகளை விசாரணைக்கு உட்படுத்தக்கூடாது என்பதற்-காகவே பொதுவான சட்டங்களுக்கு மதிப்புக் கொடுக்காமல் நடக்கின்றார்கள். அவர்களது அகம்பாவம் மக்களுக்காக போராடுவதை விடுத்து தம்மை காப்பாற்றுவதற்காக அமைகின்றது.

அடுத்த பக்கமாக சத்தியத்தையும் நேர்மை-யையும் எளிமையையும் தமது வாழ்கையின் இலட்சியங்களாக கொண்டு வாழும் பலர் அகம்பாவமும் தற்செருக்கும் கொண்டவர்களால் பாதிப்புக்குள்ளாகும் சந்தர்ப்பங்கள் நிறைய இருக்கின்றன. ஒரு குடும்பம் தந்தையின் உழைப்பால் நெறிதவறாத வாழ்கையை ஓட்டிக்கொண்டிருக்கும். அக்குடும்பத்தின் மூத்த மருமகனாக அகம்பாவம் கொண்ட ஒருத்தன் வருவதும் அவன் தனது மனைவி உட்பட முழுக்குடும்பத்தையுமே தனது நலன்களுக்காக அடக்கி ஆள்வதும் பல குடும்பங்களில் அவதானிக்கப்படக்கூடியதாக இருக்கின்றது.

வறுமையின் எல்லையில் வாழ்ந்து கொண்டிருக்கும் குடும்பங்களை சேர்ந்த பல யுவதிகளை 'கர்வம்' கொண்ட இளைஞர்கள் நாசம் செய்வதை கண்கூடாக பார்க்கின்றோம்.

ஒரே பதவியில் ஒரே குழுவாக வேலைசெய்த பலர் மத்தியில் ஒருவருக்கு மட்டும் பதவிஉயர்வு கிடைத்தால் அவர் அகம்பாவம் கொண்டு மற்றவர்களை அலட்சியம் செய்யும் சந்தர்ப்பம் உண்டு.

இவ் விடத்தில் அகம்பாவம் பற்றிய உண்மையை வெளிச்சத்திற்கு கொண்டு வரலாம் என்று நினைக்கின்றேன். அகம்பாவம் என்பது தைரியத்தின் வெளிப்பாடு அல்ல. அகம்பாவம் உண்மையில் அச்சத்தின் வெளிப்பாடே! மற்றொரு உண்மை என்னவெனில் அகம்பாவம் கொண்டவர் களின் வாழ்க்கை ஒரு போதும் வெற்றியில் முடிவதில்லை. வீழ்ச்சியில் முடிந்ததாகவே சரித்திரங்கள் சான்று பகர்கின்றன!

எனவே அன்பர்களே மேலே குறிப்பிடப்பட்ட கெட்ட ஆவிகள் பற்றி விழிப்பாக இருப்பீர்களாக!

# "நெருப்பணைத்த கதைகள்"

### சஞ்சயன் செல்வமாணிக்கம்

**தொடரும் மனசாட்சி...**

காட்டுத்தீயின் வேகமும், அகோரத்தையும் அன்றுதான் அறிந்துகொண்டேன். திருச்செல்வம் இல்லாதிருந்தால் அன்று அப்பாவின் கரும்புத்தோட்டம் சாம்பலாகியிருக்கும் என்று அப்பாவே சொல்லக்கேட்டேன். அதன் பின் திருச்செல்வத்திற்கு பலத்த சலுகைகள் அப்பாவிடம் கிடைத்தது.

இதன் பின் தீயுடனான நெருக்கம் எனக்கு கிடைக்க பல வருடங்களாகியது. 1983ம் ஆண்டு மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியின் விடுதியில் தங்கியிருந்து கல்விகற்ற காலம். நான் விடுதியின் சிரேஸ்ட மாணவர் தலைவனாய் நியமிக்கப்பட்டிருந்தேன். ஒரு நாள் நள்ளிரவில் தூக்கத்தில் தட்டி எழுப்பப்பட்டேன். "அண்ணை பள்ளிக்கூடம் எரியுது" என்றார்கள். வெளியே வந்த போது தென்னையோலையினால் அமைக்கப்பட்டிருந்த பல வகுப்பறைகள் தீயிடப்பட்டிருந்தன. பாடசாலை அதிபருக்கு செய்தியனுப்பி, சிரமத்தின் மத்தியில் மேசை, வாங்குகளை காப்பாற்றிக்கொண்டிருந்த போது அதிபர் வந்தார். எல்லோரும் சேர்ந்து தீயை அணைத்தாலும் வகுப்பறைகள் எரிந்து போயிருந்தன. இரவிரவாய் அவற்றை அகற்றினோம்.

யார் பாடசாலையை எரித்தார்கள் என்பதை கண்டுபிடிக்கும் பொறுப்பு என்னிடம் தரப்பட்டது. சந்தேகப்படும் படியாக திருச்செல்வம் என்னும் மாணவனே இருந்தான். அவனும் நானுமே விடுதியைச் சுற்றயிருக்கும் வீடுகளில் இருந்து இராப்பொழுதுகளில் கோழிகளை திருடி எமது நள்ளிரவு உணவாக்கிக் கொண்டிருந்தோம் என்பது எமக்கும் இன்னும் மிகச் சிலருக்கும் மட்டுமே இன்றுவரை தெரிந்திருந்த பரமரகசியம்.

அவனிடம் அதிபருக்கு நம்பிக்கை இருக்கவில்லை. பாடசாலை எரிவதற்கு இரண்டு நாட்களுக்கு முன் அவன் வீடு செல்ல அனுமதி கேட்டு அதிபர் மறுத்திருந்தார். எனவே அவனே பாடசாலையை எரித்தான் என்பது அதிபரின் கணிப்பு. எனினும் ஆதாரம் இல்லையாதலால் என்னை ஆதாரத்தை கண்டுபிடிக்க நியமித்தார்.

அனைத்து மாணவர்களையும் அழைத்து "எனக்கு யார் பாடசாலையை எரித்தது என்று தெரியும்" அவர்கள் என்னுடன் தனிப்புட்ட முறையில் உடனேயே தொடர்பு கொண்டால் அதிபரின் தண்டனையில் இருந்து தப்பிக்கலாம்" என்று கதையளந்தேன். சற்று நேரத்தில் ஒருவன் "அண்ணை நான் தான் நெருப்புப்பெட்டி வாங்கி வந்தேன் என்றான்". யார் எரித்தது என்றேன். திருச்செல்வம் என்றான் அவன். திருச்செல்வத்தை அழைத்த போது என்னைக் காட்டிக்கொடுக்காதே, எனது சீட்டு கிளிந்துவிடும். என்னைக் காப்பாற்று என்றான்.

ஒரு புறம் நண்பன். மறுபுறம் அதிபர். அதிபரிடம் சேட்டைவிடுவது தற்கொலைக்குச் சமம் என்பதை அனைருமே அறிந்திருந்தார்கள். நண்பனை காட்டிக்கொடுத்தால் நண்பனின் பாடசாலை வாழ்க்கை அன்றுடன் முடிந்தது என்பதை உணர்ந்ததால் முக்கிய நண்பர்களை அழைத்து மந்திராலோசனை நடாத்தினோம். இறுதியில் இராணுவத்தினரின் வாகனம் இவ் வழியால் ரோந்து போவதுண்டு எனவே அவர்களே வந்து எரித்தார்கள் என்றும் இராணுவத்தினரின் வாகனம் ஒன்று பாடசாலை எரியும் போது பாடசாலையருகில் நின்றிருந்ததை சில மாணவர்கள் கண்டிருக்கிறார்கள் என்றும் அதிபரிடம் கூறச்சொன்னான். அதுவே நண்பனைக்காப்பாற்ற சிறந்த வழியாய் தெரிந்ததால் அதையே அதிபரிடம் கூறினேன். அதிபர் என் நெஞ்சினை ஊடுருவிப் பார்த்தார். தலைகுனிந்-திருந்தேன்.

சில மாதங்களின் பின் திருச்செல்வம் ஒரு இயக்கத்தில் சேர்ந்து ஸ்னைப்பர் தாக்குதலில் உயிரிழந்தான் என்று ஒரு நாள் அதிபரே எனக்குக் கூறினார். அது மட்டுமல்ல நான் அவனை காப்பாற்றிய கதையும் தனக்குத் தெரியும் என்றார் ஒரு விதமான நக்கலுடனான புன்னகை கலந்த குரலில்.

தீயுடன் எனக்கு ஏற்பட்ட இரு சம்பவங்களிலும் "திருச்செல்வம்" என்னும் பெயரே சம்பந்தப்பட்டி-ருப்பதன் காரணம் தற்செயலானது என்றே நம்புகிறேன்.

இவை தவிர நான் நோர்வே வந்த ஆரம்ப காலங்களில் ஒரு நாள் நள்ளிரவு நேரம் கடைத்தெருவழியாக நடந்து கொண்டிருந்தேன். ஒரு கடையினுள் இருந்து புகை வருது போல் தெரிந்தது. உடனேயே தீயணைக்கும் படைக்கு அறிவித்து 5 நிமிடங்களில் தீயணைப்பப்படை ஒலி, ஒளி சகிதம் வாகனங்களில் வந்திறங்கி யார் தொலைபேசியில் தொடர்பு கொண்டது என்ற போது "நான் தான்" என்றேன் பெருமிதத்துடன். எங்கே தீ என்றார்கள். கடையையும் புகை வரும் இடத்தையும் காட்டினேன்.

சற்று நேரம் புகையை உற்று நோக்கியவர்கள் தமக்குள் எதையோ பேசிக்கொண்டார்கள். பின்பு என்னை பார்த்தபடியே சிரித்தார்கள். ஒன்றும் புரியாததால், ஏன் சிரிக்கிறீர்கள் என்றேன். அப்போது ஒரு தீயணைப்புப் படைவீரர் உனது விளிப்புணர்வை பாராட்டுகிறோம். ஆனால் அது தீயில்லை. அது ஒரு நீராவி இயந்திரம். காற்றின் ஈரப்பதனை தக்கவைப்பதற்காக பயன்படுத்தப்படும் இயந்திரம் எனவே தான் அந்தப் புகை வெளிவருகிறது. அது உண்மையில் புகையல்ல, நீராவி என்றார்.

வெட்கித் தலை குனிந்து கொண்டேன். மீண்டும் உனது விளிப்புனர்வை மெச்சுகிறோம் என்று கூறி அங்கிருந்து அகன்றனர் தீயணைப்புப் படைவீரர்கள். அதன் பின் இன்று வரை தீ என்னுடன் நெருங்கிய உறவினை ஏற்படுத்திக்கொள்ளவில்லை. இனிமேலும் தீ என்னை நெருங்காதிருக்கக் கடவதாக!

**கற்பனை கலக்காத உண்மை சம்பவங்கள்!!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டு நடப்பு

# கண்கள் எதைப் பார்த்தாலும் மனசு குருடாக இருத்தல் வேண்டும்

**– பாலையூற்றான் –**

எம்மில் பலருக்கு பொது இடங்களில் பண்பாக எவ்விதம் நடந்து கொள்ள வேண்டுமென்பது சரியாக தெரியாததல்ல. நாம் பலர் சத்தமில்லாத அருவறுப்பான முணுமுணுப்புகளுக்கு ஆளாகின்றோம். சிலவேளைகளில் தவறாக நடந்து கொண்ட பின் வீட்டுக்கு சென்று அது தொடர்பில் கவலைப் படுகின்றோம். குறிப்பாக இளம் வயதினரே இவ்விதம் பொது இடங்களில் பண்பாக நடந்து கொள்ளத் தவறுகிறார்கள். சிலவேளைகளில் அது அவர்களது வயதுக் கோளாறு என காண்பிக்கப்பட்டாலும், பொதுவாக எடுத்துப் பார்க்கும் போது இன்றைய முன்னேற்றமடைந்துள்ள நாகரீக சமூகத்திற்கு அது எந்த வகையிலும் ஒவ்வாததே.

கடற்கரை, சந்தை, போக்குவரத்து நிலையம் போன்ற பொது இடங்களில் விநோதமாக நடந்து கொண்டாலும், புனிதமான வணக்கஸ்தலங்களை கூட அந்த பேர்வழிகள் விட்டு வைப்பதில்லை. அதனால் இறைவனை பக்தியோடு தரிசிக்க செல்பவர்களுக்கு கூட குறிப்பிட்ட-வர்களால் அசௌகரியங்கள் ஏற்படுவது கண்கூடு.

சில ஆண்கள் அதிலும் இளம் வயதினர் பொது இடங்களில் பெண்களுடன் வரம்பு மீறி நடந்து கொள்வதும் அவ்வாறே சில இளம் பெண்கள் கூட வரம்பு மீறி நடத்தலும் இன்று சகஜமாகி விட்டது. சொந்த ஊரிலே அவர்கள் அவ்விதம் நடந்து கொள்கிறார்கள் என்று பார்த்தால், வெளி இடங்களில் கூட நாகரீகற்ற முறையில் நடந்து கொள்கிறார்கள்.

சந்தோஷின் சொந்த இடம் சிலாபம். உயர்தரத்தை முடித்துக் கொண்டு தற்பொழுது மொரட்டுவ தொழிநுட்ப கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கின்றான். யாதும் பயணத்தின் போது அவனின் கண்களில் படும் எந்தவொரு இளம் பெண்ணையும் விட்டு வைப்பதேயில்லை அவன். அன்று ஞாயிற்றுக்கிழமை சிலாபத்திலிருந்து கொழும்பு கோட்டைக்கு தொடரூந்தில் சென்றிருந்தான். அங்கிருந்து மொரட்டுவைக்கு செல்ல வேறு தொடரூந்தில் செல்ல வேண்டியிருந்தது. திங்கள் வேலைநாள் சனநெரிசல் அதிகம் என்பதால் ஞாயிற்றுக்கிழமையே மொரட்டுவைக்கு சென்று



அங்கு தனது நண்பனது வீட்டில் தங்கிவிட்டு அங்கிருந்து கல்லூரிக்கு செல்வது வழமை.

அன்று சந்தோஷ் பயணித்துக் கொண்டிருந்த அந்த தொடரூந்தில் ஓர் அழகான தேவதை போன்று சிங்கள யுவதி ஒருவரும் பயணித்துக் கொண்டிருந்தாள். களனிப் பல்கலைக்கழக மாணவியான அவள் கல்கிஸ்ஸவில் உள்ள தனது மூத்த சகோதரியினது பிறந்த நாள் வைபவத்திற்காக சென்று கொண்டிருந்தாள். அவள் இரண்டாம் வகுப்பு பெட்டியில் பயணித்தாலும் மூன்றாம் வகுப்பு பெட்டியில் பயணிக்கும் சந்தோஷின் கண்களுக்கு அவள் தென்படாமல் இருக்கவில்லை. காதில் இயர் ஃபோனை இணைத்து பாட்டுக் கேட்டுக் கொண்டே பயணித்துக் கொண்டிருந்தாள் அந்த அழகு தேவதை.

சந்தோஷின் மனதிற்குள் ஒரே மௌன யுத்தம் இடம்பெற்றுக் கொண்டிருந்தது. எப்படியும் அவளிடம் பேசிப் பழகவேண்டுமென்பதே தற்போது அவனுக்கிருக்கும் ஒரே ஒரு பிரச்சினை. மூன்றாம் பெட்டியின் அருகில் இரண்டாம் வகுப்பு பெட்டி இணைக்கப்பட்டிருந்தாலும் அவளருகில் சென்று முகத்தைப் பார்க்க முடியாத நிலை அவனுக்கு.

திங்கட் கிழமை பரீட்சை ஆரம்பம். தொடரூந்துக்குள் இருந்து கொண்டு படிக்கலாம் என புத்தகங்களை அவன் கொண்டு வந்திருந்தாலும் அந்த அழகு தேவதை போன்றவளின் உருவம் அவனைப் படிக்க விடாமல் தடுத்ததுமின்றி அவனது மனதை குழப்பிக் கொண்டே இருந்தது.

படிப்பதா அல்லதா அவளைப் பின் தொடர்வதா என்கின்ற பல்லாயிரக்கணக்கான கேள்விகள் அவனைக் குழப்பின. அவன் வாழ்வில் எத்தனையோ பெண்களைப் பார்த்திருக்கின்றான். ஏன் அவர்களுடன் நெருங்கிப் பழகியுமிருக்கின்றான். ஆனால் அன்று அவனை கடும் அவஸ்த்தைக்குள்ளாக்கிய அந்த அழகு தேவதை.

மண்ணாசை பொன்னாசை, பெண்ணாசை என ஆசைகளை பிரிக்கலாம். அதிலும் பெண்ணாசை என்பது மிகவும் பொல்லாதது ஆகும். அந்த ஆசைகளினால் பல சாம்ராச்சியங்களைக் கூட அந்தக் காலத்து அரசர்கள் இழந்துள்ளதாக பல சரித்திர நூல்கள் வாயிலாக நாம் அறிந்துள்ளோம்.

மனம் ஒரு குரங்கு என்பார்கள். மனதைக் கட்டுப்படுத்துவதோ ஓர் பாரிய பிரச்சினை தான். மேலும் காதல் விவகாரத்தில் மாத்திரமல்ல வாழ்க்கையில் நாம் முகங்கொடுக்கும் சகல பிரச்சினைகளையும் பெரிதாக்குவதும், சிறிதாக்குவதும் ஏன் அவற்றை அடியோடு அழித்தொழிப்பதும் எமது மனம் தான். பயம் பதட்டம் சந்தோசம் போன்றவைகள் ஏற்படுகின்ற இடமான எமது மனதை நாம் எப்பொழுதும் திடமாக வைத்துக் கொள்ள வேண்டும். மனம் சோர்வடைந்தால் முற்றுமுழுதாக நாம் எம்மையே இழந்து விடுகின்றோம்.

சந்தோஷின் மனமானது அந்த சிங்கள யுவதியை சுற்றி வலம் வந்து கொண்டிருந்தது. எப்படியும் அவளோடு பேசிப் பழக வேண்டும் என்ற ஆசையில் அவளுக்கு முன்னால் இருந்த ஆசனம் வெற்றிடமாகவே அங்கு ஓடிச்சென்று உட்கார்ந்து கொண்டான். சந்தோஷ். இரண்டு பேரும் நேருக்கு நேர் உட்கார்ந்து கொண்டு ஆளையால் பார்க்க சந்தர்ப்பம் கிடைக்கும் போது எவராவது ஒருவர் பேசித்தானே தீர வேண்டும். சந்தோஷிற்கு என்ன இதுவொரு கன்னிமுயற்சியா! அவனது வழமையான வேலையே இதுதானே!.

இவ்வேளையில் பிரபல இந்திய கவிஞர் ஒருவரின் கவிதை வரிகளை ஞாபகப்படுத்தாமல் இருக்க முடியாது.

*அவள் பேசட்டும் என்று அவன் காத்திருக்க*
*அவன் பேசட்டும் என்று அவள் காத்திருக்க*
*எத்தனை முறை அவர்கள் முயற்சித்திருப்பார்கள்?*
*ஒரு வார்த்தை பேசிவிட்டால் அந்த*
*வார்த்தை*
*எத்தனை நாட்களுக்கு காதிற்குள்*
*சில்லிட்டுக்*
*கொண்டு சிலிர்க்க வைத்திருக்கும்!!!*

இது தான் காதலின் ஆரம்ப கட்டத்தில் ஏற்படுகின்ற மிக அவலமான அவஸ்தை. அதை தாண்டி விட்டால் ஏனையவைகளெல்லாம் சுலபமாக அமையுமல்லவா?

சந்தோஷ் அவளின் முகத்தை நிமிடத்திற்கு நிமிடம் பார்த்துக் கொண்டிருந்தாலும், அவளின் உதடுகள் ஏனோ அசைய மறுத்தன. அவள் பாடல் கேட்டு ரசித்துக் கொண்டிருக்கும் போது முன்னே நடப்பவை அவளுக்கெங்கே தெரியப் போகின்றது?

அவள் சிங்களப் பெண் என்பதால் அவளோடு பேசுவதற்கு தமிழிலிருந்து சில வார்த்தைகளை மொழி பெயர்த்து சிங்களத்தில் சந்தோஷ் பேச்சை ஆரம்பிக்க இருந்த வேளையில் சிவ பூசைக்குள் கரடி புகுந்தாற் போல் டிக்கட் பரிசோதகர் அங்கு வந்து சேர்ந்தார். அதனால் அவன் மேற்கொள்ளவிருந்த கடும் கைங்கரியத்தின் முயற்சி படு தோல்வியை தழுவியதுமல்லாமல் அங்கே பெரும் அமளி துமளியும் இடம்பெற்றது. அதற்குக் காரணம் அவன் தனது டிக்கட்டுக்குரிய ஆசனத்தில் அமராது வேறு ஆசனத்தில் இருந்தமையே. டிக்கட்டுக்குரிய ஆசனங்களைத் தவிர்த்து வேறு உயர்கட்டண ஆசனங்களில் அமருதல் தண்டனைக்குரிய குற்றமென்பது சகலரும் அறிந்ததே.

எவ்வாறாயினும் சந்தோஷ் அங்கு புரிந்தது தண்டனைக்குரிய குற்றமென்பதால் டிக்கட் பரிசோகர்களால் ரூபா 2750 ஐ தண்டப்பணமாக செலுத்துமாறு பணிக்கப்பட்டான். ஆனால் அவனிடம் அவ்வளவு தொகைப் பணம் அச்சமயத்தில் இருக்கவில்லை. அதனால் பரிசோதகர்கள் அவனது கையடக்கத் தொலைபேசியை பறிமுதல் செய்து அதற்கான சிட்டையும் அவனுக்கு வழங்கியிருந்தனர். மேலும் உரிய தண்டப்பணத்தை அங்குள்ள தொடரூந்து நிலையத்தில் சுமார் ஒரு வார காலத்தினுள் செலுத்தி அவனுடைய கையடக்கத் தொலைபேசியை மீளப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் கூறினர்.

அந்த அழகு தேவதைக்கு அங்கு நடந்த கலாட்டா எதுவும் தெரியவில்லை. தன்னுடைய நிறுத்தம் வரவும் தான் இறங்கிக் கொண்டாள். சந்தோஷோ தனது நாளைய பரீட்சை, தன்னுடைய தொலைபேசி, கட்டவேண்டிய தண்டப்பணம் என்பவற்றைப் பற்றி எண்ணியவாறே அவளைப் பார்த்து அசடு வழிந்தான். கண்கள் எதைப் பார்த்தாலும் மனம் குருடாக இருக்க வேண்டும் எனும் பாடத்தை சந்தோஷ் அன்று மிக தெளிவாக கற்றுக் கொண்டான்.

---

## இப்படியும் நடக்கலாம்

### 50வருட சிறை தண்டனை



மெக்சிகோவில் உள்ள சலவை கடை ஒன்றில் ஜுண்டுரி (22) என்ற பெண் கடந்த 2 வருடங்களுக்கு முன்னர் வேலைக்கு சேர்ந்துள்ளார். அந்த சலவை கடையின் முதலாளியான ஆகொ என்ற பெண், ஜுண்டுரியை இரும்பு சங்கிலியில் கட்டிவைத்து கொடுமை செய்துள்ளார். மேலும், ஒரு நாளைக்கு 17 மணி நேரம் வேலை வாங்கியுள்ளார். அவர் சொன்னபடி வேலை செய்யவில்லை என கூறி உடல் முழுவதும் சூடு வைத்துள்ளார்.

இந்நிலையில் கடந்த ஏப்ரல் 25 திகதி ஜுண்டுரி அங்கு இருந்து தப்பித்து, சலவை கடையில் தான் சந்தித்த கொடுமைகளை கூறிய அவர், அவர்கள் தன்னை மிகவும் துன்புறுத்தியதாகவும், சங்கிலியால் கட்டப்பட்டு இருந்ததால், நின்றுகொண்டே தூங்கியதாகவும், மேலும் பாலித்தீன் பையில் மலம் கழிக்க வற்புறுத்தியதாகவும் தெரிவித்துள்ளார்.

அவரை பரிசோதித்த மருத்துவர்கள், ஜுண்டுரியின் உடல் 80 வயது முதியவர் போல் உள்ளதாக கூறினர். மேலும் இந்த சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள ஆகொவுக்கு 50 ஆண்டுகள் சிறை தண்டனை கொடுக்கப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

### ஷேம் ஷேம் பப்பி ஷேம்

அமெரிக்காவின் எலிசா அல்வரிஸ், ஜோஸ் கேபலிரோ தம்பதியினர் அங்குள்ள கடற்கரையில் வைத்து உறவில் ஈடுபட்டனர். இதை அங்கிருந்த 3 வயது குழந்தை உட்பட ஏராளமானோர் பார்த்துள்ளனர். இது தொடர்பாக காவல்துறையினர் அவர்களை கைதுசெய்தனர். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி அவர்கள் இருவரையும் குற்றவாளிகள் என கூறி, 15 ஆண்டுகள் வரை சிறை தண்டனை வழங்கியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

### தாயே காரணமானாரா?



தாய் ஒருவர், தனது வாகனத்தை கராஜிற்குள் விட பின் புறமாக செலுத்தியுள்ளார். அந்த சமயம் எதிர்பாராத விதமாக அவரது 5 வயது மகன் வாகனத்தின் பின்னால் நின்றதால் அவன் மேலாக செலுத்தப்பட்டதாக கூறப்படுகிறது. இந்த திடீர் விபத்தில் அடிபட்ட அந்த சிறுவன், விமான அவசர ஊர்தி மூலம் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளான்.

காவல்துறையினர் கூறுகையில், தனது மகன் சாலையில் விளையாடி கொண்டிருப்பான் என்ற நோக்கத்தில் தனது வாகனத்தை, கராஜிற்குள் விட பின் புறமாக செலுத்தியுள்ளார், அப்போதுதான் இந்த துயர சம்பவம் நடந்துள்ளது என்று தெரிவித்தனர்.

### சியர்ஸ் கூறும் சிறுவன்



கஜகஸ்தான் நாட்டில் சிறுவன் ஒருவன் மது மற்றும் சிகரெட் குடிப்பது போன்ற வீடியோ வெளியாகியுள்ளது. இரண்டு நிமிடங்கள் ஓடக்கூடிய அந்த வீடியோவில், 5 வயது மதிக்கத்தக்க சிறுவன், முதலில் ஆல்கஹாலை குடிக்கிறான், பின்னர் யாரோ ஒரு நபர் அவனுக்கு சிகரெட்டை கொடுக்கிறார். அதனை வாங்கிய சிறுவன், அந்த சிகரெட்டை வாயில் வைத்து நன்றாக இழுத்து புகைவிடுகிறான். மேலும், கமெராவிற்கு பின்னால் இருப்பவர்கள் அந்த சிறுவனை உற்சாகப்படுத்துகிறார்கள், ஒரு கட்டத்தில் நபர் ஒருவர் இச்சிறுவனுக்கு "cheers" சொல்கிறார். அதற்கு அந்த சிறுவன் இதெல்லாமல் சர்வசாதாரணம் என்று கூறுகிறான். இணையத்தில் வெளியான இந்த வீடியோவை வைத்து காவல்துறையினர் அச்சிறுவனை தேடி வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் அலசல்

# 19ஆவது திருத்தம் தமிழ் மக்களுக்கு நன்மையானதா?

இலங்கைத் தீவின் அரசியல் அமைப்பு 19 ஆவது தடவையாகத் திருத்தப்பட்டுள்ளது. ஆயுதமோதல்கள் முடிவுக்கு வந்தபின் செய்யப்பட்ட இரண்டாவது திருத்தம் இது.

ஆட்சி மாற்றத்தை உருவாக்கிய அதைப் பின்னிருந்து பலப்படுத்துகின்ற மேற்கு நாடுகளும் இந்தியாவும் இத்திருத்தத்தை வரவேற்றிருக்கின்றன. கூட்டமைப்பும் இத்திருத்தத்தை வரவேற்றிருக்கின்றது. ஜனநாயக அடிப்படைகளை பலப்படுத்த இத்திருத்தம் உதவும் என்று அதை ஆதரிப்பவர்கள் கூறுகிறார்கள். அரசாங்கம் தனது வாக்குறுதிகளில் ஒன்றை ஓரளவுக்கேனும் நிறைவேற்றியிருப்பதாகப் பெருமைப்பட்டுக்கொள்கின்றது.

மெய்யாகவே 19 ஆவது திருத்தம் இலங்கைத் தீவின் ஜனநாயக வெளியை பலப்படுத்தியிருக்கிறதா? குறிப்பாக இனப்பிரச்சினைக்கான தீர்வைப் பொறுத்தவரை அது தமிழ் மக்களுக்கு சாகமானதா?

தமிழ் மக்களின் நோக்கு நிலையில் இருந்து பார்த்தால் இத்திருத்தத்தை அண்மையில் அரசாங்கம் தேசியகீதம் தொடர்பாக வெளியிட்ட அறிவிப்போடு ஒப்பிடலாம். தமிழில் தேசிய கீதம் இசைக்கப்பட வேண்டும் என்பது இலங்கைத் தீவில் ஏற்கனவே சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. ஆனால் அதை அரசாங்கத் தரப்புக்களே சட்டவிரோதமான முறையில் மீறி தமிழில் தேசிய கீதம் இசைக்கப்படுவதற்கு எதிராகச் செயற்பட்டு வந்திருக்கிறார்கள். இப்பொழுது அவ்வாறு சட்ட விரோதமாகத் தமிழ் மக்களை சிங்களத்தில் தேசிய கீதம் இசைக்க வேண்டும் என நிர்ப்பந்திப்பதில்லை என்று முடிவெடுக்கப்பட்டது. அதாவது அவர்கள் உருவாக்கிய சட்டத்தை அவர்களே மீறிவிட்டு இப்பொழுது அதை அமுல்படுத்தப்போவதாகக் கூறுகிறார்கள்.

அதாவது வாக்களிக்கப்பட்ட நூறு நாட்களுக்குள் யாப்பின் இதயமான பகுதிகளில் அடிப்படையான மாற்றங்களைச் செய்ய முடியவில்லை என்பதே மெய்நிலையாகும்

அப்படித்தான் 19 ஆவது திருத்தமும். 18 ஆவது திருத்தத்தின் மூலம் அதிகரிக்கப்பட்ட அரசுத் தலைவரின் அதிகாரங்கள் 19ஆம் திருத்தத்தின் மூலம் குறைக்கப்பட்டிருக்கின்றன. இதனால் ஜெயவர்த்தனா கொண்டு வந்த அரசியலமைப்பின் இதயமான பகுதிகள் எதுவும் அடிப்படை மாற்றத்திற்கு உள்ளாக-வில்லை. அரசியல் அமைப்பில் மகிந்த ராஜபக்ச கொண்டுவந்த திருத்தங்கள் பலவீனமாக்கப்பட்டு மறுபடியும் ஜெயவர்த்தனா கொண்டுவந்த அடிப்படைகள் ஓரளவுக்கு பேணப்பட்டு இருக்கின்றன என்பதே நடைமுறை உண்மையாகும்.

இத்திருத்தத்தை ஆதரிக்கும் மேற்கு நாடுகளும் கூட்டமைப்பும் இதன் மூலம் ஜனநாயகத்திற்கும் நல்லாட்சிக்குமான அடிப்படைகள் பலப்படுத்தப்படும் என்ற தொனிப்பட கருத்துத் தெரிவித்துள்ளன. ஆனால் 1978 இல் இப்போதிருக்கும் யாப்பை ஜெயவர்த்தனா கொண்டு வந்த போது மேற்கு நாடுகள் அதிகம் அலட்டிக்கொள்ளவில்லை. மேற்கின் தீவிர விசுவாசியாகிய ஜெயவர்த்தனா இந்த யாப்பைக் கொண்டுவந்தபோது இது ஓர் மூடுண்ட யாப்பு என்றும் நெகிழ்ச்சியற்றது என்றும் பிரெஞ்சு அரசுத் தலைவராகிய டிகோல் உருவாக்கிய யாப்பைப் போன்றது என்றும் அந்நாட்களில் விமர்சிக்கப்பட்டது. நாடாளுமன்றத்தை இது பலவீனப்படுத்துகிறது என்றும் அரசுத் தலைவரை பண்டைய மன்னர்களைப் போல கேள்விக்கிடமற்ற அதிகாரங்களைக் கொண்டவராக மாற்று-கின்றது என்றும் விமர்சிக்கப்பட்டது.

ஜெயவர்த்தனா ஒருமுறை கூறியது போல ஆணைப் பெண்ணாக்கவும், பெண்ணை ஆணாக்கவும் வேண்டிய அதிகாரங்களைத் தவிர மற்ற எல்லா அதிகாரங்களையும் பெற்ற ஓர் அரசுத் தலைவரை இந்த யாப்பு உருவாக்கியது. அது கெடுபிடிப் போர் காலகட்டம். எனவே மேற்கு நாடுகள் ஜெயவர்த்தனவை விமர்சனத்தோடு பார்க்க-வில்லை. அவர் யாப்பில் ஒவ்வொரு திருத்தமாக மேற்கொண்டு தன்னைப் பலப்படுத்திக் கொண்டபோதும் தன்னுடைய எதிரிகளை மேலெழ முடியாதபடி தோற்கடிக்கும் விதத்தில் திருத்தங்களை மேற்கொண்ட போதும் மேற்குநாடுகள் அதிகம் அலட்டிக்கொள்ளவில்லை.

ஜெயவர்த்தனா செய்ததைத்தான் அதன் அடுத்தகட்டத்திற்கு ராஜபக்ஷவும் செய்தார். யுத்தத்தின் வெற்றிக்குப் பின் வெற்றிவாதத்திற்குத் தலைமை தாங்கிய அவர் தன்னுடைய அதிகாரங்களை மேலும் பெருக்கிக் கொண்டார். ராஜபக்ஷ செய்த திருத்தங்களை இப்பொழுது மைத்திரிபால சிறிசேன ஓரளவுக்குப் பலவீனப்படுத்தி இருக்கிறார். இதிலுள்ள சுவாரசியமான ஒரு முரண் என்னவெனில் 37 ஆண்டுகளுக்கு முன் ஒரு மேற்கின் விசுவாசியால் கொண்டுவரப்பட்ட யாப்பானது அதன் தர்க்கபூர்வவிளைவாக விகார வளர்ச்சி கண்டபோது அதே மேற்கின் விசுவாசியான மற்றொரு அரசுத் தலைவரை வைத்து அதைப் பலவீனப்படுத்தவேண்டியிருக்கிறது என்பது.

ஆனால் இங்கு தமிழர்கள் உற்றுக் கவனிக்க வேண்டிய முக்கியமான ஒரு விடயம் உண்டு. இதற்கு முன்பு யாப்பில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் எந்த நோக்கத்தோடு செய்யப்பட்டனவோ ஏறக்குறைய அதேவிதமான நோக்கத் தோடுதான் இப்பொழுதும் திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதுதான் அது. அதாவது கடந்த சுமார் நான்கு தசாப்தகால இலங்கைத்தீவின் இரத்தம் சிந்தும் அரசியலில் யாப்புத் திருத்தங்கள் எத்தகைய உள்நோக்கங்களோடு செய்யப்-பட்டனவோ அதே பாரம்பரியத்தின் தொடர்ச்சியாகத்தான் இம்முறையும் திருத்தம் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றது என்பதே.

1978 இல் இந்த யாப்பு உருவாக்கப்பட்டதிலிருந்து அதன் பிதாவாகிய ஜெயவர்த்தனா தனது அதிகாரங்களை பலப்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்குமான கவசங்களாகவே யாப்பில் திருத்தங்களை மேற்கொண்டார். அவர் கொண்டுவந்த திருத்தங்களில் முக்கியமானவை யாவும் அவருடைய ஆட்சிக்காலத்தை நீடிப்பதற்கும் அவருடைய அரசியல் எதிரிகளை பலமிழக்கச் செய்வது அல்லது அரங்கில் இருந்து அகற்றுவது அல்லது இரண்டு எதிர்த்தரப்புக்களை தங்களுக்கிடையில் மோதவிடுவது போன்ற நோக்கங்களோடு மேற்கொள்ளப்பட்ட-வைதான். உதாரணமாக ஆறாவது திருத்தச் சட்டம் தமிழ் மிதவாதிகளை அரங்கில் இருந்து அகற்றியது. 13 ஆவது திருத்தச் சட்டம் இந்தியாவையும் தமிழர்களையும் மோதவிட்டது.

ஒரு ஜனாதிபதிக்குரிய வயதெல்லையைத் தீர்மானித்த போது ஜெயவர்த்தனா தனது மருமகனான ரணில் விக்கிரமசிங்கவை மனதில் வைத்தே அந்த வயதெல்லையை தீர்மானித்ததாக இப்பொழுது ராஜபக்ஷ ஆதரவாளர்கள் கூறிவருகின்றார்கள். அதைப் போலவே மைத்திரி கொண்டு வந்த திருத்தத்திலும் நாமல் ராஜபக்ஷ போட்டியிடுவதைத் தடுக்கும் நோக்கத்தோடு வயதெல்லை உயர்த்தப்பட்டிப்பதாக விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். அதைப் போலவே ஜெயவர்த்தன தன்னுடைய ஆட்சிக்-காலத்தை நீடிப்பதற்கு மேற்கொண்ட சூழ்ச்சிகளின் தொடர்ச்சியாகவே ராஜபக்ஷவும் தனது ஆட்சிக்காலத்தை நீடிப்பதற்காக திருத்தங்களையும் மேற்கொண்டார்.

எனவே ஜனாதிபதி வேட்பாளருக்-குரிய வயதெல்லையில் தொடங்கி ஆட்சிக்-காலத்தை நீடிப்பது வரையிலுமான எல்லா விடயங்களிலும் பதவியில் இருப்பவரைப் பாதுகாத்துக் கொண்டு அவருடைய எதிரிகளை அரசியலில் செயலற்ற நிலைக்குத் தள்ளுவதை நோக்கமாகக் கொண்டே இதுவரையிலுமான பெரும்பாலான முக்கிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இம்முறையும் ராஜபக்ச வம்சம் மறுபடியும் தலையெடுப்பதைத் தடுப்பதே பத்தொன்பதாவது திருத்தத்தின் பிரதான இலக்காகும். அதாவது மேற்கு நாடுகள் மற்றும் இந்தியாவின் நோக்கு நிலையில் இருந்து பார்த்தால் மாற்றத்தைப் பலப்படுத்துவதே அதன் நோக்கம். ஆனால் ஏனைய திருத்தங்களோடு ஒப்பிடுகையில் இதில் ஒரு பிரதான வித்தியாசம் உண்டு. இதற்கு முன்பிருந்த அரசுத் தலைவர்கள் எல்லோருமே தங்களுடைய அதிகாரத்தை எப்படி அதிகரிக்கலாம்? எப்படி பாதுகாக்கலாம்? ஆட்சிக்காலத்தை மேலும் எப்படி நீடிக்கலாம் என்பது பற்றியே சிந்தித்து வந்துள்ளார்கள். ஆனால் மைத்திரிபால சிறிசேன இந்த மரபில் புறநடைபோலத் தோன்றுகின்றார். அவர் தன்னுடைய அதிகாரத்தைக் குறைக்கவும், ஆட்சிக்-காலத்தை மட்டுப்படுத்தவும் தயாராகக் காணப்படுகின்றார். இது ஒரு முக்கியமான வித்தியாசம்.

ஆனால் அதற்கொரு அரசியல் பின்னணியும் உண்டு. மிகச்சரியான வார்த்தைகளில் கூறின் அவர் ஓர் இடைமாறு காலகட்டத்திற்குரிய தலைவரே. அவர் ஒரு கருவி மட்டுமே. எனவே 19 ஆவது திருத்தத்தை ஆழமாகப் பார்க்கும் எவரும் அதன் உள்ளோட்டங்களை விளங்கிக் கொள்ளும் அதே சமயம் மைத்திரி ஒரு கருவி என்பதையும் விளங்கிக்கொள்ள வேண்டும்.

இலங்கைத் தீவின் யாப்பு வரலாற்றைப் பொறுத்தவரை பண்பு மாற்றம் எனப்படுவது அந்த யாப்பிற்கு பின்னால் இருக்கும் சிங்கள பௌத்த மேலாண்மைவாத மனோநிலையில் ஏற்படக் கூடிய தலைகீழ் மாற்றம் மட்டுமே.

எனவே மேற்சொன்னவை அனைத்தையும் தொகுத்துப் பார்த்தால் ஒன்று மிகத் தெளிவாகத் தெரியும். கடந்த சுமார் நான்கு தசாப்தகால அரசியலில் மேற்கொள்ளப்பட்ட யாப்பு திருத்தங்களைப் போல 19 ஆவது திருத்தமும் பதவியில் இருப்பவர்களை பாதுகாக்கும் உள்நோக்கங்-களைக் கொண்டதுதான். இதற்கு முந்திய எல்லா யாப்புத் திருத்தங்கைளப் போலவே இதுவும் மேற்பரப்பு மாற்றமே. வேர்நிலை மாற்றம் அல்ல. அதாவது பண்பு மாற்றம் அல்ல.

இலங்கைத் தீவின் யாப்பு வரலாற்றைப் பொறுத்தவரை பண்பு மாற்றம் எனப்படுவது அந்த யாப்பிற்கு பின்னால் இருக்கும் சிங்கள பௌத்த மேலாண்மைவாத மனோநிலையில் ஏற்படக் கூடிய தலைகீழ் மாற்றம் மட்டுமே. அப்பொழுதுதான் யாப்பானது ஓர் ஒடுக்கும் கருவி என்ற பண்பில் மாற்றம் ஏற்படும். அப்பொழுதுதான் அது பல்லினத்தன்மை மிக்க ஓர் இலங்கைத் தீவை கட்டியெழுப்பத் தேவையான அடிப்படைகளைக் கொண்டிருக்கும்.

எனவே, இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றிச் சிந்திக்கும் போது இலங்கைத் தீவிற்குத் தேவைப்படுவது யாப்புத் திருத்தங்கள் அல்ல. மாறாக யாப்பை மறு வரைபு செய்வதுதான். இதை இன்னும் கூராகச் சொன்னால் பண்பு மாற்றத்திற்குத் தயாரற்ற ஓர் அரசியல் சூழலைப் பாதுகாப்பவை தான் மேற்படி திருத்தங்கள் எனலாம்.

எனவே, ஆட்சிமாற்றத்தின் பின் நாட்டில் நடப்பவற்றை வைத்து தமிழர்கள் அதிகம் கற்பனை செய்யத் தேவையில்லை. மாற்றத்தைப் பலப்படுத்துவதே இப்பொழுது எல்லாருடைய குறிக்கோளும். யாப்புத் திருத்தமும் கைதுகளும் அந்த நோக்கத்தைக் கொண்டவைதான். அதாவது ஆட்சி மாற்றமானது எப்படி தமிழ் நோக்கு நிலையில் இருந்து செய்யப்படவில்லையோ அப்படித்தான் மாற்றத்தின் பின்னர் நாட்டில் நடப்பவைகளும் தமிழ் மக்களின் நோக்கு நிலையில் இருந்து மேற்கொள்ளப்படுபவை அல்ல. இத்தகையதோர் அரசியல் சூழலில் தமிழ் மக்கள் என்ன செய்யலாம்?

மாற்றமும் சரி மாற்றத்தின் பின்னர் நடப்பவைகளும் சரி, தமிழ் மக்களின் நோக்கு நிலையில் இருந்து மேற்கொள்ளப்படவில்லை என்றாலும் கூட அவற்றின் விளைவுகளும் விளைவின் விளைவுகளும் தமிழ் மக்களுக்கு சில புதிய வெளிகளைத் திறக்கக் கூடும். மாற்றத்தின் பின் தமிழ் சிவில் வெளி ஒப்பீட்டளவில் அதிகரித்திருக்கிறது. அதைப் போலவே யாப்புத் திருத்தங்களும் தமிழ் மக்களுக்கு அதிகரித்த அளவிலான ஜனநாயக வெளிகளை உருவாக்கக் கூடும். இவ்வாறு கடந்த சில மாதங்களாக அதிகரித்து வரும் சிவில் ஜனநாயக வெளியை தமிழ் மக்கள் எப்படி கையாளப் போகிறார்கள் என்பதிலும் அப்படி வெற்றிகரமாக கையாள்வதன் மூலம் தமது பேரம் பேசும் சக்தியை எப்படி அதிகப்படுத்தப் போகிறார்கள் என்பதிலும் தான் தமிழ்மக்களின் அடுத்தகட்ட அரசியல் தங்கியிருக்கின்றது.

இத்தகையதோர் பின்னணியில் மாற்றத்தின் பின் கடந்த சில மாதங்களாக நடந்தவற்றில் இருந்து தமிழ் மக்கள் மறுபடியும் சில பாடங்களை கற்கவேண்டி-யிருக்கிறது. சக்திமிக்க நாடுகளும் சரி தென்னிலங்கை அரசியல் தலைவர்களும் சரி அவரவர் தங்களுடைய நிகழ்ச்சி நிரல்களின்படியே காய்களை நகர்த்திக்-கொண்டிருக்கிறார்கள்.

மாற்றத்தின் பின் அனைத்துலக அரங்கில் தமிழ் மக்களுடைய பேரம்பேசும் சக்தியானது ஒப்பீட்டளவில் வீழ்ச்சி கண்டுள்ளது. சில மாதங்களின் பின் வரக்கூடிய ஐ.நா மனித உரிமைகள் பணியகத்தின் அறிக்கை கூட மாற்றத்தைப் பலவீனப்படுத்தும் ஒன்றாக அமையுமா என்பது சந்தேகத்திற்குரியதே. இத்தகையதோர் பின்னணியில் மாற்றத்தின் பின் கடந்த சில மாதங்களாக நடந்த-வற்றில் இருந்து தமிழ் மக்கள் மறுபடியும் சில பாடங்களை கற்கவேண்டியிருக்கிறது. சக்திமிக்க நாடுகளும் சரி தென்னிலங்கை அரசியல் தலைவர்களும் சரி அவரவர் தங்களுடைய நிகழ்ச்சி நிரல்களின்படியே காய்களை நகர்த்திக்கொண்டிருக்-கிறார்கள். யாருமே மற்றவர்களுடைய நிகழ்ச்சி நிரலுக்காக தங்களுடைய நிகழ்ச்சி நிரலைக் கைவிட்டதாகவோ ஒத்தி வைத்ததாகவோ தெரியவில்லை. ஆனால் தமிழர்கள் தரப்பின் நிலைமை எவ்வாறு உள்ளது?

ஜனாதிபதித் தேர்தலின் போது ஓர் அருமையான சந்தர்ப்பம் கிடைத்தது. மேற்கு நாடுகள் – இந்தியா – தென்னிலங்கை ஆகிய மூன்று தரப்புக்க-ளோடும் ஓர் அருமையான பேரத்தைச் செய்திருக்கலாம். ஆனால் செய்யப்பட-வில்லை. இப்பொழுதும் கூட வரவிருக்கும் பொதுத் தேர்தலில் ஒரு பேரத்தைச் செய்ய முடியும். ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் இருந்ததைப் போல ஒரு பலமான பேரமாக இது இருக்காதுதான். ஆனாலும் பொதுத் தேர்தலில் ராஜபக்ஷக்களைத் தோற்கடிப்பது என்றால் தமிழர்களுடைய ஆதரவு கட்டாயமாகத் தேவை. எனவே இங்கேயும் ஒரு பேரம் இருக்கிறது.

ஆனால் அப்படி ஒரு பேரத்தை பகிரங்கமாக வைத்துக் கொண்டால் அது ராஜபக்சக்களைப் பலப்படுத்திவிடும் என்று பயந்தால் அதற்கான வாய்ப்புக்களும் இல்லை. இப்படியே சிங்களக் கடும்போக்காளர்கள் பலமடையக் கூடாது என்பதற்காக தோற்கடிக்கப்பட்டிருக்கும் பலவீனமான ஒரு மக்கள் கூட்டம் தனது பேரங்களை இன்னும் எவ்வளவு காலத்திற்கு ஒத்தி வைக்கப் போகிறது? பொதுத் தேர்தல் முடிந்தபின் இப்போதிருக்கும் அளவிற்கு பேரம் பேசும் சக்தி இருக்குமா என்பதும் சந்தேகமே. அதாவது ஜனாதிபதித் தேர்தலின் போது இருந்ததைவிடவும் இப்பொழுது பேரம் பேசும் சக்தி குறைந்துவிட்டது. இப்பொழுது இருப்பதை விடவும் பொதுத் தேர்தலின் பின் பேரம் பேசும் சக்தி மேலும் குறையக் கூடும்.

அரசியலில் நன்றிக்கடன் என்பதெல்லாம் கிடையாது. நிலையான நலன்கள் மட்டுமே உண்டு. எனவே ஒரு புத்திசாலியான மக்கள் கூட்டம் தனது பேரம் சக்தி உயர்வாக இருக்கும் போது பேரத்தை வைத்துக் கொள்ள வேண்டுமா? அல்லது தாழ்வாக இருக்கும் போது பேரத்தை வைத்துக் கொள்ள வேண்டுமா?



– –நிலாந்தன்– –

- www.tamilkingdom.org -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. 8செமீ நீளமும் 3செமீ அகலமும் உள்ள ஒரு செவ்வகத்தின் பரப்பளவு யாது?

02. சீரான கதியுடன் நீர் பாயும் குழாயொன்றிலிருந்து 10 செக்கனில் 40லீ நீர் வெளியேறுகின்றது. நீர் பாயும் கதி லீற்றர் நிமிடத்தில் யாது?


03. 1- 80 வரையுள்ள எண்கள் முறையே எழுதப்பட்டுள்ளன. எண்பது அட்டைகள் ஒருவருக்கு ஒன்று வீதம் 80 மாணவர்களிடையே விநியோகிக்கப்பட்டு அவர்களிடையே இரண்டின் மடங்குகளான எண்கள் கிடைத்த மாணவர்களுக்கு ரூபா 2வீதமும், ஐந்தின் மடங்குகளான எண்கள் கிடைத்த மாணவர்களுக்கு ரூபா 5 வீதமும் வழங்கப்பட்டன. எத்தனை மாணவர்களுக்கு ரூபா 7 வீதம் கிடைத்தது?

04. ஒருவர் புள்ளி aயிலிருந்து 50மீ கிழக்கு நோக்கிச் சென்று புள்ளி bயிற்கு வருகிறார். அவ்விடத்திலிருந்து 50 மீ தெற்கு நோக்கிச் சென்று புள்ளி c யிற்கு வருகிறார். aயிலிருந்து c யின் திசைகோள் யாது?

05. ஒரு குறித்த கம்பனியில் ரூபா 7200ஐ முதலீடு செய்து பேர் மாத்திரையான பெறுமானம் ரூபா 8,000 ஆன ரூபா 10 பங்குகளை கொள்வனவு செய்யலாம். ஒரு பங்கின் சந்தைப் பெறுமானம் யாது?

**பகுதி 02**

01. I. அடியின் ஆரை a ஆகவும், உயரம் 6a உள்ளதுமான ஒரு திண்மச் செவ்வட்ட மர உருளையிலிருந்து ஆரை யயை உடைய ஒரு திண்ம அரைக் கோளப்பகுதி குடைந்து அகற்றப்பட்டுள்ளது. உருளையின் எஞ்சிய மரத்தின் கனவளவு ஒவ்வொன்றும் ஆரை யயை உடைய 4 திண்மக் கோளங்களின் கனவளவிற்குச் சமமெனக் காட்டுக.




## பாடம் : வரலாறு

1. முதலாம் உலகமகாயுத்தம் ஆரம்பிக்கும் தருவாயில் தீராபகைகளை கொண்டிருந்த இரு நாடுகள்?
   1. பிரான்ஸ் - பின்லாந்து 2. பிரான்ஸ் - ஜேர்மனி
   3. ரஷ்யா - இங்கிலாந்து 4. அமெரிக்கா - பிரிட்டன்

2. இந்திய ஆரிய மகாகுடியேற்றங்களில் மிகப் பெரிய இராச்சியமாக விளங்கிய குடியேற்றங்களை மட்டும் காட்டும் விடைத் தொகுதி?
   1. மல்ல, மத்சய, மகதம், காசி
   2. கோசலை, மகதம், வத்சயம், அவந்தி
   3. கோசலை, மகதம், காசி, அவந்தி
   4. காந்தாரம், கோசலை, வத்சயம், காசி

3. "விஜயன் வருகை தந்தபோது குவேனி நூல் நூற்றாள்" இதிலிருந்து நீர் எடுக்கும் முடிவானது?
   1. புராதன காலத்தில் பருத்தி உற்பத்திகள் இலங்கையில் அதிகமாக நடைபெற்றுள்ளது.
   2. இலங்கையின் புராதன சுதெசிகளிடம் தொழிநுட்ப அறிவு காணப்பட்டிருந்தது.
   3. குவெனி நூல் நூற்பதில் திறமையுள்ளவளாக இருந்துள்ளாள்.
   4. வெளிநாடுகளுடன் புராதன காலத்தில் இலங்கை நெசவு வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்தது.

4. பின்வரும் எக்கல்வெட்டு ஐந்து அமைச்சுப் பரம்பரை பற்றிக் குறிப்பிடுகிறது?
   1. பம்பரகல 2. குசேலன்கந்த 3. யடஹலென 4. கந்துறுவெவ

5. பின்வருவனவற்றில் எக்கால்வாய் மின்னேரியா, கந்தளாய் குளங்களுக்கு நீரை வழங்குகிறது?
   1. பப்பதந்த கால்வாய் 2. எலகர கால்வாய்
   3. அங்கமட்டில கால்வாய் 4. மினிப்பேகால்வாய்

## பாடம் : விஞ்ஞானம்

01. பின்வரும் கூற்றுக்களிடையே பொய்யான கூற்றைத் தெரிந்தெடுக்க.
   1. நீரில் கரையத்தக்க அயன் சேர்வைகளும் கரையாத அயன் சேர்வைகளும் மண்ணில் உள்ளன.
   2. மண்ணில் உள்ள போசணைப் பொருள்களைத் தாவரங்களுக்கு வழங்கும் ஊடகமாக மண்ணீர் செயற்படுகின்றது.
   3. தாவரத்தில் உள்ள அத்தியவசிய மூலகங்கள் எல்லாம் மண்ணிலிருந்து பெறப்படுகின்றன.
   4. மண்ணில் உள்ள பல்வேறு உப்புகள் கரைந்த கரைசலாக மண்ணீரைக் கருதலாம்.

02. ஒரு நேர்க்கோல் ஓர் எளிய பொறியாகப் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பம் உருவில் காணப்படுகின்றது. அதன் பொறிமுறை நயம் யாது?




1. $\frac{\text{எத்தனம்}}{\text{சுமை}}$ 2. $\frac{\text{சுமை}}{\text{எத்தனம்}}$

3. $\frac{\text{சுமைப்புயத்தின் நீளம்}}{\text{எத்தனப் புயத்தின் நீளம்}}$ 4. $\frac{\text{எத்தனப் புயத்தின் நீளம்}}{\text{சுமைப்புயத்தின் நீளம்}}$

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

### தமிழ் இலக்கணம் எழுத்தியல்

**உயிர்மெய்**

மெய்யெழுத்துடன் உயிரெழுத்துச் சேர்ந்து ஒலிப்பதை உயிர்மெய்யெழுத்து என்கிறோம்.

18 மெய்யுடனும் 12 உயிர்களும் சேரும். அவற்றுக்கான தனியான வரிவடிவம் உண்டு.

எடுத்துக்காட்டு

க் + அ = க

க் + ஆ = கா

12 உயிர் x 18 மெய் = 216 உயிர்மெய்யெழுத்துக்கள் உள்ளன.

உயிரெழுத்து உயிரையும் மெய்யையும் சார்ந்து நிற்கும். உயிர் எழுத்திற்கேற்பவே அதன் மாத்திரையளவு காணப்படும்.

எடுத்துக் காட்டு - க் + அ = க - 1 மாத்திரை (உயிர்மெய்க் குற்றெழுத்து)
க் + ஆ = கா - 2 மாத்திரை (உயிர்மெய் நெட்டெழுத்து)

**ஆய்தம்**

மூன்று புள்ளிகளுடைய (∴) எழுத்து வடிவம் ஆய்தம் எனப்படுகிறது. முப்புள்ளிஇ முப்பாற்புள்ளிஇ தனிநிலை எழுத்து என்பன இதன் வேறு பெயர்களாகும். இதற்குரிய மாத்திரையின் அளவு ½.

இது சொல்லில் இடம்பெறும்போது தனிக் குற்றெழுத்துக்கும் வல்லின உயிர் மெய் எழுத்துக்கும் இடையில் வரும். எடுத்துக்காட்டு - அ∴து எ∴து அ∴றிணை குற்றெழுத்துக்கும் ஒரு வல்லின மெய்க்கும் இடையிலேயே வருமென்ற இடச்சார்பு காரணமாக சார்பெழுத்து எனப்பட்டது. தற்காலத்தில் பிறமொழிப்பெயர்களைத் தமிழில் எழுதும்போது தமிழில்லாத சில ஒலிகளுக்குப் பதிலாக ஆய்தம் கையாளப்படுகிறது.



**தமிழ் இலக்கியத் தொகுப்பு**
ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

## Grammar

Ex 01: **Underline the most suitable word in the brackets.**

It is a well known fact that an advertisement must be (1) ........................ (attractive/ attract/ attraction). It must get the (2) ........................ (attend/ attention/ attendant) of the reader or the viewer.

The language of an advertisement must be clear and (3) ........................ (easily/ easiness/ easy) understood.

The reader or the viewer must be able to (4) ........................ (response/ respondent/ respond) to the advertisement.

So (5) ........................ (beauty/ beautiful/ beautify) words are a must in an advertisement.

An advertisement which doesn't persuade people to buy a product is a (6) .............................. (fail/ failing/ failure).

03. கடற்கரைப் பிரதேசத்தில் காணப்படும் ஒரு தாவரம் எது?
   1. இரைசோ போரா 2. ஐப்போமியா பைலேரியா
   3. ஐக்கோணியா 4. நெலும்பியம்

04. குளிரேற்றியைப் பயன்படுத்தும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய ஒரு முறையாகக் கருதமுடியாதது?
   1. சூரிய ஒளி, அடுப்புகளில் இருந்து முடியுமான ரை தூரத்தில் வைத்தல்
   2. கதவைத் திறந்து வைக்கும் நேரத்தைக் குறைத்தல்
   3. கதவுகளில் பொருத்தப்பட்டுள்ள இறப்பர் வளையங்களைச் சீராகப் பேணுதல்
   4. இறைச்சி வகைகளை மட்டும் குளிரேற்றியினுள் வைத்தல்

05. பென்சிலினைக் கண்டுபிடித்த விஞ்ஞானி யார்?
   1. பென்சிலியன் 2. அலெக்சாண்டர் பிளெமிங்
   3. கென்றி 4. லவொய்சியர்

06. 400 K இல் ஒரு மாதிரி வாயுவின் கனவளவு $800cm^3$ ஆகும். அதன் அமுக்கம் மாறாது இருக்கும் பொழுது, 500 K இல் அவ்வாயுவின் கனவளவு யாது?
   1. $800cm^3$ 2. $1000cm^3$ 3. $1600cm^3$ 4. $200cm^3$



07. கடற்குதிரை என்பது?
   1. முளையூட்டியின் ஓர் இனமாகும் 2. மீனின் ஓர் இனமாகும்
   3. குதிரையின் ஓர் இனமாகும் 4. ஒரு முள்ளந்தண்டிலியாகும்

08. நீர், தேங்காயெண்ணெய், இரசம், தெரப்பந்தைலம் என்னும் நான்கு திரவங்களில் எத்திரவத்தைப் பயன்படுத்தும் போது குறைந்த உயரமுள்ள பாரமானியை அமைத்துக் கொள்ளலாம்?
   1. நீர் 2. தேங்காயெண்ணெய் 3. இரசம் 4. தெரப்பந்தைலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 19

01. தபாலகத்தில் மாத்திரம் இடம் பெறக்கூடிய சேவை அல்லாதது
 1. தொலைபேசி அழைப்பைப் பெறல்
 2. பதிவுத்தபால் அனுப்புதல்
 3. ஓய்வூதியப் பணம் பெறல்
 4. கடித உறை வாங்குதல்

02. இலங்கையின் மிக உயர்ந்த மலை
 1. சிவனொளிபாதமலை 2. பீதுறுதாலகால மலை
 3. உண்ணஸ்கிரிய 4. எவரெஸ்ட்

03. லோவமகாபாயவைக் கட்டிய மன்னன்
 1. மகாசேனன் 2. வலகம்பா 3. மகாபராக்கிரமபாகு 4. துட்டகைமுனு

04. பின்வருவனவற்றில் மிக விவைாகத் தீப்பற்றக் கூடியது.
 1. டீசல் 2. பெற்றோல்
 3. தேங்காயெண்ணெய் 4. மண்ணெண்ணெய்

05. மிகப்பெரிய கோள்
 1. யுரேனஸ் 2. வியாழன் 3. சனி 4. செவ்வாய்

06. உணவு சமைக்கப்பயன்படும் பூ அல்லாதது
 1. கோவா 2. வில்வித்திரியம் 3. அகத்தி 4. வாழை

07. விக்டோரியா நீர்த்தேக்கத்துடன் தொடர்புடைய ஆறு
 1. வளவங்கை 2. களுகங்கை 3. மகாவலி 4. களனி

08. உணவு சமைக்கப் பயன்படுத்தப்படாத கிழங்கு வகை
 1. கரணைக்கிழங்கு 2. வற்றாளை
 3. கார்த்திகைக் கிழங்கு 4. மரவள்ளி

09. தூர இடங்களில் இருந்து நீரைச் சுமந்து கொண்டு கிராமத்துப் பெண்கள் பயன்படுத்தும் பாத்திரம்
 1. வாளி 2. பேசின் 3. செம்பு 4. குடம்

10. இலங்கையின் தொலைபேசி வலையமைப்பில் ஒருவருக்கு வழங்கப்படும் தொலைபேசி ஒன்றின் இலக்கங்களின் எண்ணிக்கை
 1. 9 2. 10 3. 11 4. 12

11. வயலை உழுவதற்கு மாடுகளுடன் சேர்த்துப் பூட்டப்படுவது
 1. மண்வெட்டி 2. பரப்பும் பலகை 3. நுகத்தடி . 4. ஏர்

**பகுதி 02**

01. பதினைந்தாயிரத்து தொண்ணூற்று ஒன்பது என்பதை இலக்கத்திர் தருக?.........................................

02. பெறுமானம் காண்க. 2250 + 200 + 20 + 02 = ...............................

03. 30 நிமிடத்திற்குள் 20km தூரம் செல்லும் ஜீப்வண்டி ஒன்று அதே வேகத்தில் 50km தூரத்தை சென்றடைய எடுக்கும் நேரம் எத்தனை மணித்தியாலயம் ஆகும்? ...................................

04. அண்மையில் வெளியிடப்பட்ட ரூபா 5000 இல் காணப்படும் புள்ளிகளின் எண்ணிக்கை? ..................

05. 2l பாலை காய்ச்சும் போது 100ml பால் குறைவடையும் 5l பாலை காய்ச்சும் போது எத்தனை ml பால் குறைவடையும்? ..................................


06. மூன்று பேனாக்களின் விலை ரூ 60.00 எனின், இரண்டு பேனாக்களின் விலை எவ்வளவு? ................................

07. வாக்கியங்களை நிறைவு செய்யப்பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து கோடிடுக.
அ. வீட்டுக்கூரை ஓடுகாளல் .............................. (வேயப்பட்டிருந்தன/ வேயப்பட்டிருந்தது)
ஆ. அது கறையான் அமைத்த .............................................(புற்று / புற்றுக்கள்)
இ. திராட்சைப்பழங்கள் குலை குலையாகத் ........................ (தொங்கியது / தொங்கின)
ஈ அந்த விளையாட்டு வீடுகள் சிறுவர்களால் ................ ( கட்டப்பட்டது / கட்டப்பட்டன)



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**



## குட்டிக்கதை


## மலைமுழுங்கி சின்னக்குருவி

ஓர் ஊரில் சின்னக் குருவியும், மைனாவும் நல்ல நண்பர்களாக இருந்தனர். ஒரு நாள் குருவி நண்பனே! எனது நண்பர்கள் வெளியூரிலிருந்து வருகின்றனர். ஆகையால் நான் அங்கு ஒரு வாரத்திற்கு சுற்றுலா செல்கின்றேன். என கூறிவிட்டு சென்றது மைனா.

திரும்பி வந்த மைனா என்ன குருவி நண்பனே! உன் பெயர் சின்னக் குருவி தானே, ஆனால் எல்லோரும் உன்னை மலை முழுங்கி சின்னக் குருவி என்று அழைக்கிறார்களே? என்று ஆவலாகக் கேட்டது.

ஹா....! ஹா...! என்று சிரித்த சின்னக் குருவி, என்ன மைனாவே என்னுடைய பலத்தை அறியாமல் இப்படி ஒரு கேள்வியை கேட்டுவிட்டாயே? நீ என் நண்பன் என்பதால் உன்னை சும்மா விடுகின்றேன். இதுவே வேறு யாராவது கேட்டிருந்தால் அவ்வளவுதான் எனக் கோபமாகக் கூறியது.

நண்பனே! இதில் கோபப்படுவதற்கு என்ன இருக்கிறது? நாம் நண்பர்கள் என்பதால் உனது பலம் எனக்கும் தெரியும். அது மட்டுமல்ல நம்மைப் போன்ற சிறிய பறவைகளால் அளவு பெரிய மலையை அல்ல ... சிறு மடுவைக் கூட முழுங்க இயலாதே என்றது.



அப்படியா? நீ நம்பவில்லை தானே! சரி, நாளைக்கு காலை அந்த நதிக்கு வா... நான் மலையை முழுங்குவதைக் காணலாம் என்றது சின்னக் குருவி.

சரி என்று கூறிவிட்டு உணவுத் தேடிப் பறந்தது மைனா. மறுநாள் காலை நதிக்கு இருவரும் வந்து சேர்ந்தனர். அப்போது சூரியன் மலைக்குப் பின்னால் ஒளி வீசிக் கொண்டிருந்தது. அதனால் மலையின் நிழல் நீரில் விழுந்திருந்தது.

மைனாவே! இதோ பார், இந்த நீரில் மலையின் அச்சு தெரிகிறது அல்லவா? இப்போது பார் எனத் தன் மெல்லிய அலகால் கொஞ்சம் கொஞ்சமாக நீரைக் குடித்துக் கொண்டிருந்தது சின்னக்குருவி.

நேரம் ஆகஆக சூரியன் மேலே செல்ல செல்ல மலையின் நிழல் நதியை விட்டு கொஞ்சம் கொஞ்சமாக மறையத் தொடங்கியது.

சின்னக்குருவி கூறியது, பார்த்தாயா மைனாவே? நான் நீரைக் குடிக்க குடிக்க மலையின் நிழல் என் வயிற்றுக்குள் சென்று குறைந்துவிட்டது என்றது.

மைனா சிரித்தது. என்ன மைனாவே! ஏன் சிரிக்கிறாய்? எனக் கேட்டது சின்னக்குருவி.

என்ன சொல்வது குருவியாரே! மலை அவவிடத்திலேயே தான் இருக்கிறது. சூரியன் மேலே எழஎழ மலையின் நிழல் குறைந்து செல்கின்றதே ஒழிய நீ மலையின் நிழலை முழுங்கவில்லை என்றது.

ஓ நான் தான் பிழையாகப் புரிந்து கொண்டேனா என கூறி தலை கவிழ்ந்தது.

குருவி நண்பனே கவலைப்படாதே நாம் நம் கடமையில் சரியாக இருந்தால் அதுவே சிறப்புதான். வருத்தப்படாதே! வா நாம் இருவரும் சேர்ந்தே உணவு தேடுவோம் எனக் கூறி அழைத்துச் சென்றது மைனா.


- அனைவரும் கடமைகளை சரிவரச் செய்தல் அதுவே சாலச்சிறந்தது -

## குட்டிப் பூனை

எனது செல்லப்பிராணி எனது பூனைக் குட்டியாகும். அதன் பெயர் ஜெசிக்கா. வெள்ளை நிறத்தினாலான என் பூனைக்குட்டியின் உடம்பில் ஆங்காங்கே கறுப்பு நிறமும் அதன் அழகைக் கூட்டுகின்றது. ஜெசிக்காவுக்கு நான் என்றால் மிகவும் பிடிக்கும். என்னுடைய ஜெசிக்கா என்னுடன் விளையாடுவாள். நான் சாப்பிடும் போது அவளுக்கும் கொடுக்கவே வேண்டும். அது சொகலட் ஆயினும் கொடுத்தால் தான் நானும் சாப்பிட முடியும். படுக்கும் போது கூட என்னருகிலேயே வந்து படுத்துக்கொள்ளும்.

*தனுஷனா.வீ*
*தரம் - 05.*

**சிந்திக்க ....**
திருமண வாழ்வு சரியாய் அமையவில்லை
எனில் காரணம்: இங்கிருக்கும்
இரண்டு பிடிவாதக் காரர்கள்தான்
எங்கோ இருக்கும் ஒன்பது கிரகங்களல்ல:



கே. மனோகிரண்
தரம் - 06

## பொது அறிவு - 21

இப்பொது அறிவு வினா விடை ஓர் போட்டியை நோக்காகக் கொண்டு தரப்படுகின்றது. போட்டிப் பரீட்சை தொடர்பான விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

01. 2014 இல் ரோபோக்களால் மட்டும் நிர்வகிக்கப்படும் ரெஸ்டோரண்ட்ஸ் அதிகம் உள்ள நாடு எது?
 சீனா

02. Touch mobile எப்போது ஆரம்பமானது?
 2008 இல்

03. மீன் கொள்வனவு வீதத்தின் தற்போதைய பெயர் யாது?
 துணையில் வைப்பு வசதி வீதம்

04. தற்போது நடைமுறையிலுள்ள பங்குச் சந்தை முறைமை ஆனது எப்போது ஆரம்பிக்கப்பட்டது?
 1985ஆம் ஆண்டில்

05. திரவத் தன்மை கூடிய சொத்து வகை எது?
 நடப்புச் சொத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் சந்தை நிகழ்வு

-தம்பலகாமம் நிருபர்-

முள்ளிபொத்தானை கோட்டக்கல்வி உட்பட்ட தம்பலகாமம் பிரதேசத்தின் தி/கிண்/பாத்திமா பாலிகா வித்தியாலத்தின் முதலாவது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முதலாம் தரம் தொடக்கம் நான்காம் தரம் உள்ளடங்கிய மாணவிகளுக்கான இணைப்பாடன விதான செயற்பாடு சிறுவர் சந்தை அண்மையில் பாடசாலை அதிபர் ஏ.ஆர்.சாதிகீன் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக முள்ளிப்பொத்தானை கோட்டக் கல்வி அதிகாரி கே.எம்.சுபைர் மற்றும் கோட்கல்வி உத்தியோகத்தர்கள் இப் பாடசாலையின் ஆசிரியர்களின் பெற்றார்களின் அதிகளவிலான மாணவிகளின். பங்களிப்புடன் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது. சிறுவர் சந்தையில் கலந்து கொண்ட அதிகாரிகள் பார்வையிட்டனர்.





## சிறுவர் பாடசாலைக்கான உதவி

கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இம்ரான் மஃரூப் அவர்களின் பண்முகப் பட்ட வரவு செலவில் ஒதுக்கபட்ட பொருட்களை முள்ளிப்பொத்தானை சிறுவர் பாலர் பாடசாலைக்கான கற்றல் உபகரணங்களை பாடசாலை ஆசிரியர்களிடம் ஒப்படைத்தார்.



## விழிப்புணர்வு பேரணி

உலக செயற்பாட்டு வாரத்தையொட்டி மட்டக்களப்பு, கிரான் பிரதேசத்தில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் பேரணியொன்று நடாத்தப்பட்டது. கடந்தகால போர்ச்சூழலினால் கிழக்கு மாகாணத்தில் வெகுவாகப் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு கிரான் பிரதேசத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் போஷாக்கின்மை ஆகியவற்றை முற்றாக இல்லாமல் செய்வதே இந்த செயற்பாட்டின் இலக்கு என தெரிவிக்கப்படுகிறது.

## அடிக்கல் நாட்டு விழா

-மூதூர் நிருபர்-

மூதூர் கிழக்கு, சேனையூர் அருள்மிகு ஸ்ரீ வராஹி அம்பாள் தேவஸ்தானத்திற்கான அடிக்கல் நாட்டு விழா ஆலயத்தின் தர்மகத்தா சிவஸ்ரீ நா.செல்வரத்தினக் குருக்கள் தலைமையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. இதன் போது சிவாச்சாரியார்கள் பல்வேறு கிரியைகளை மேற்கொண்டதோடு, கலந்து கொண்ட பக்தர்களும் அடிக்கல் நாட்டினர்.





## வைகாசிப் பொங்கல் விழா

கிழக்கிலங்கையில் வரலாற்றுச் சிறப்புமிக்க சேனையூர் ஸ்ரீ நாகம்மாள் ஆலய வருடாந்த வைகாசிப் பொங்கல் விழாவை முன்னிட்டு அம்பாளின் நகர்வலம் 04.05.2015 திங்கட்கிழமை ஆலயத்திலிருந்து அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் ஆரம்பமான போது எடுக்கப்பட்ட படத்தைக் காணலாம்.



## நடமாடும் சேவை

மட்டக்களப்பு மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஒரே நாளில், ஒரே இடத்தில் தீர்ப்பதற்கு ஏதுவாக மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில், எதிர்வரும் வியாழக்கிழமை (14) மாபெரும் நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது. கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட்டின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்ட மக்களின் சகல பிரச்சினைகளுக்கும் முடிந்தளவு அன்றே உடனடித் தீர்வுகள் பெற்றுக்கொடுப்படும் என கிழக்கு மாகாணசபை முதலமைச்சின் செயலாளர் யூ.எல்.ஏ.அஸீஸ் தெரிவித்தார்.

## மக்கள் முரசு

# சந்தோசத்திலும் அனுபவிக்கக்கூடிய தனிமை

இன்றைய நாகரீக உலகில் ஒருவர் தனியாக இருப்பது என்பதே அதிசயம்தான். நமது வாழ்வில் ஒரு அங்கமாகவே மாறிவிட்ட ஃபேஸ்புக், டிவிட்டர் போன்ற சமூக இணையதளங்கள் அனைவரையும் உலகத்தோடு பிணைத்து வைத்திருக்கிறது.

இன்றைய சூழலில் ஒருவர் தனியாக இருக்கிறார் என்றால் அவர் தீராத மன வேதனையில் உள்ளார் என அர்த்தம். காதல் தோல்வி, ஏமாற்றம், துரோகம் என ஏதாவது ஒருவிதத்தில் பாதிக்கப்பட்டிருக்கும் இவர்கள், இனி யாரையும் நம்ப வேண்டாம். மற்றவர்களுடன் இருந்து காயப்படுவதை விட தனியாக நிம்மதியுடன் இருப்பதே மேல் என்ற அளவிற்கு தீர்மானித்திருப்பார்கள்.

இந்த முடிவு நடைமுறைப்படுத்துவது மிகவும் கடினமான ஒன்று. எப்போதும் நண்பர்களுடன் இருந்து பழகியவர்களுக்கு தனியாக இருப்பது என்பது கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போல் இருக்கும். ஒரே நாளில் வாழ்க்கையே வெறுத்தது போல தோன்றும். தனியாக இருப்பது என்பது ஒரு பெரிய இழப்பல்ல.

ஒரு தரப்பினர் தாமே தம் சந்தோஷத்தை அனுபவிப்பதற்காக தனிமையை விரும்புவர். இன்னொரு தரப்பினர் தம் சோகத்தை தணிப்பதற்காக தனிமையை நாடுவர். சோகத்தை தணிக்கும் இச்சமயத்தில் தம்மை புரிந்து கொண்டவர்களிடம், தம்முடைய வேதனைகளை கொட்டித் தீர்ப்பதால் ஓரளவு அந்த தனிமையிலிருந்து விடுபடலாம்.

எவரொருவர் மனம் ஒப்பாமல் தனிமைக்குள் போகின்றாரோ அது அவரை அணு அணுவாக கொல்லக் கூடியது. அவ்வாறானவர்கள் தனிமையை மறக்க முயற்சி செய்ய வேண்டும். விருப்பமான ஏதேனும் பொழுது போக்குகளில் மனதை ஈடுபடுத்திக் கொண்டால் தனிமையிலிருந்து விடுபடலாம். அது கடினமாக இருந்தால் செல்லப்பிராணி மீது அன்பு பாராட்டுவதனாலும் தனிமையை அடித்து விரட்டலாம்.

தனிமை அச்சம் தருகிறது என்றால் தனித்து இருக்கும் திறனில்லாதவராய் பிறர் கட்டிப் போட்டிருக்கிறார்கள் என்றே பொருள். தனிமை என்றால் ஒரு அறையில் அடைந்து கிடப்பதா? தனிமை என்பது சூழலை ஒட்டியதா? இல்லை. தனிமை என்பது எம் மனது தொடர்பானது. கூட்டத்தின் மத்தியிலும் கூட தனிமையை உணரமுடியும். தனிமையை விரும்பி ஏற்றுக் கொண்டவர்களால் மட்டுமே அதிலுள்ள இனிமையை உணரமுடிகின்றது. நிறைய சிந்திப்பதற்கு, பல்வேறு புத்தகங்களை படிக்க இவ்வாறான ஏதோவொன்றை செய்வதற்குக் கூட தனிமை அவசியமாகின்றது.

சற்று நேரம் பாடல் கேட்டுக் கொண்டிருந்தால் மனம் அமைதியாகும் என பலர் கூறிக் கேட்டிருக்கின்றோம். அது கூட ஓர் தனிமையான சுகம் தான். எந்தவொரு குறுக்கீடுகளும் இன்றி, எந்தவொரு பிரச்சினையுமின்றி ஓர் நாளில் ஓர் நிமிடம் கிடைக்குமா? இல்லை. ஆனால் தனிமையில் கிடைக்கும் அந்த ஓர் நிமிடம்.


தனிமை என்பது வெறுமனே உடல் ரீதியாகத் தனித்திருத்தல் எனலாம். மாறாக தனிமையுணர்வு என்பது ஒரு மனநிலையாகும். சுற்றிவரப் பலர் இருக்கலாம், சுவாரஸ்யமான பல விடயங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கலாம். ஆனால் அவை எவற்றோடும் உளமார ஒன்றுபடாத நிலை இது. மற்றொரு விதத்தில் சொன்னால் வெறுமை உணர்வு, சூழலிலிருந்து அந்நியப்பட்ட மனநிலை, அல்லது தனிமைப்பட்டதான உணர்வு எனலாம்.

தனிமையாக உணரும் ஒருவருக்கு உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் பல்வேறு பாதிப்புகள் ஏற்படும் என்பது தெரிந்ததே. நாம் உணராத அளவிற்கு பலவிதமான பாதிப்புகள் இருக்கலாம். இவை யாவும் நேரடியாக தனிமையுணர்வுடன் மட்டுமே தொடர்புடையன அல்ல என்றபோதும் ஏனைய காரணங்களுடன் சேர்ந்து இத்தகைய பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன.

தனிமையுணர்வால் தனது வாழ்க்கையில் என்ன பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதையிட்டு சிந்திக்க வேண்டும். பாதிப்புகள் உள நலம் சார்ந்ததாகவோ உடல் ஆரோக்கியம் கெடுவதாகவோ இருக்கலாம். எம்மோடு ஒத்த சிந்தனைகளும் உணர்வுகளும் உள்ளவர்களோடு உறவுகளை ஏற்படுத்தலாம். அல்லது ஏற்கனவே உள்ளவற்றை வலுப்படுத்தலாம்.

அநேகமான நேரங்களில் எம்மைப் பற்றி மாத்திரமே யோசித்துக் கொண்டிருப்போம். ஆனால் எம்மைப் பற்றிய சிந்தனைகளுக்கு அப்பால் மற்றவர்களது துன்பங்களையும் போதாமைகளையும் கவனத்தில் எடுத்து அவர்களுக்கு உதவும் ஏதாவது சமூக சேவையில் ஈடுபடுவதன் மூலம் மனம் விரிவடையும். தனிமையும் விலகும்.

குழந்தைகளின் வாழ்க்கையை எடுத்துக் கொண்டால், அவர்களை நாம் தனியாக இருக்க அனுமதிப்பதில்லை. அவர்கள் தமது தனித்தன்மையைக் கண்டுணர்ந்து ஒரு நல்ல வலுவான ஆளுமையாக உயரவும் விடுவதில்லை. எந்நேரமும் அவர்களை தங்களுக்குள்ளேயே வைத்திருக்க ஆசைப்படுவர் பெற்றோர். பின்னர் குழந்தைகள் புதிய ஒரு சூழலுக்குள் செல்லும் போது பாடுபடப்போவது குழந்தைகளே.



--தன்யா --

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பூர்...

மக்கள் அம்மண்ணில் குடியேற முடியும் என்ற வதந்தி பரவியிருந்தாலும் அதற்கான முன்நடவடிக்கைகள் மாவட்ட அரசாங்க அதிபரினால் மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதாக அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எதிர்வரும் வாரமளவிலேயே மக்கள் தமது காணிகளுக்குச் செல்ல முடியும் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை 8ம் திகதி இடைத்தங்கல் முகாம்களின் தலைவர்களைச் சந்திக்குமாறு மூதூர் பிரதேசத்திற்குப் பொறுப்பான இராணுவக் கட்டளை அதிகாரி அழைப்பு விடுத்திருந்தார். எனினும் கடைசி நேரத்தில் அச் சந்திப்பு காரணங்கள் எவையும் கூறப்படாமல் கைவிடப்பட்டுள்ளது.

அதேவேளை கடந்த வாரம் பட்டித்திடல் முகாம் பகுதியில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றியிருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் எதிர்வரும் ஜூன் மாதம் 30 திகதிக்கு முன்னர் மக்களைக் குடியேற்றாது விட்டால் ஜூலை மாதம் முதலாம் திகதி மக்களுடன் சம்பூர் பூர்வீக மண்ணை நோக்கி செல்லப் போவதாக அரசிற்குக் கெடு விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இக்கெடுவிடயத்தினை அரசாங்கத்திற்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கவெனக் கடந்த 7ம் திகதி நடாத்தப்படவிருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மக்கள் பேரணியானது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் 6ம் திகதி முகாம்களுக்கு வருகை தந்து மேலும் சில நாட்கள் பொறுமை காக்கும்படிக் கோரப்பட்டதையடுத்து கைவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அனல் மின்நிலைய.....

எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை திருகோணமலையின் பசுமை இயக்கம் மற்றும் மூதூர் பீஸ்ஹோம் உட்பட சில பொது அமைப்புக்கள் முன்னெடுத்திருந்தன.

அதற்காக மூதூரில் மக்களைத் திரட்டிக்கொள்ள முயன்ற போதே தமிழ் அரசியல்வாதிகள் அதற்குத் தடையாகச் செயற்பட்டதுடன் இந்தியாவின் நலன்களுக்கு எதிராகச் செயற்பட்டால் சம்பூர் மீள்குடியேற்றம் தாமதமாகும் என மக்களை அச்சுறுத்தியும் உள்ளனர்.

அதற்கும் மேலதிகமாக தேசியப் பட்டியல் நாடாளுமன்ற தமிழ் உறுப்பினர் ஒருவர் உள்ளூர் உறுப்பினர் ஒருவரைத் தொடர்பு கொண்டு ஆர்ப்பாட்டத்தை நடக்க விடது செய்ய கடும் முயற்சிகளை மேற்கொண்டதை அந்த உள்ளூர் உறுப்பினரே ஒப்புக் கொண்டுள்ளார்.

இறுதியாக ஆர்ப்பாட்டம் நடைபெறும் நேரத்தில் கூட ஆர்ப்பாட்டத்தில் 150 உறுப்பினர்களுக்கு மேலாக கலந்துகொள்ளாமலிருக்க ஆவண செய்யுமாறு அந்தத் தேசியப் பட்டியல் உறுப்பினர் உள்ளூர் உறுப்பினரை வற்புறுத்தியதாகவும் தெரிய வருகின்றது.

சம்பூர் மக்களின் காணிகள் மீள வழங்கப்படும் நிலை உருவாகியுள்ளதை அடுத்து அனல் மின்நிலைய எதிர்ப்புப் போராட்டமானது மேலும் தீவிரமடையும் வாய்ப்புக்கள் எழுந்துள்ளது.

அதற்கான அடுத்த கட்ட நகர்வுகள் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிகின்றது.

## அதிபர்....

பொதுச் செயலாளர் திரு. ஜெயராஜா அறிவித்துள்ளார்.

திருகோணமலை பெருந்தெரு விக்னேஸ்வரா கல்லூரியில் எதிர்வரும் 16ம் திகதி காலை 9 மணிக்கு இக்கருத்தரங்குகள் ஆரம்பமாகவுள்ளன.

கல்வித் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் திறன் மிக்க விரிவுரையாளர்களால் விரிவுரைகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் தேவைக்கேற்ப கைநூல்களும் வழங்கப்படவும் உள்ளது.

பதிவுகளை அன்றைய தினமே மேற்கொள்ள முடியும்.

## அரசியல்....

பிரிவுக்குட்பட்ட பின் தங்கிய கிராமங்களான நொச்சிக்குளம், சாந்திபுரம், அவ்வைநகர் போன்ற பகுதிகளுக்கு கடந்த வியாழக்கிழமை நேரில் சென்று மக்களுடன் கலந்துரையாடிய போதே சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

இந்தக் கலந்துரையாடலின்போது பல வருடங்களாக மீள்குடியமர்த்தப்பட்டும் இருப்பதற்கு இருப்பிடம் கூட இன்னும் வழங்கப்படவில்லை எனவும், தாம் போருக்கு முன்னர் விவசாயம் செய்துவந்த காணிகள் பெரும்பான்மை இனத்தவர்களால் களவாடப்பட்டுள்ளன எனவும், தமது விவசாய நிலங்களைப் பெற்றுத்தரவேண்டும் எனவும் சம்பந்தன் எம்.பியிடம் மக்கள் கோரிக்கை விடுத்தனர். இதற்குப் பதிலளித்த சம்பந்தன் எம்.பி., கூடிய விரைவில் அரசியல் தீர்வு கிடைக்கும் எனவும், புதிய அரசு இப்படியான மக்களின் பிரச்சினைகளுக்கு சிறந்த தீர்வைப் பெற்றுத்தரும் என்ற நம்பிக்கை காணப்படுகின்றது எனவும் தெரிவித்தார். இன்னும் சில மாதங்கள் பொறுமையாக இருக்குமாறும், நல்ல எதிர்காலம் மைத்திரி அரசில் உருவாகும் சாத்தியம் உள்ளது ஏனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். அதேவேளை, சாந்திபுரம் துர்க்கையம்மன் கோயிலுக்கு ஐந்து இலட்சம் ரூபாவும், நொச்சிக்குளம் பிள்ளையார் கோயிலுக்கு ஐந்து இலட்சம் ரூபாவும் வழங்கினார்.

## நூல் அறிமுக விழா

வைத்திய கலாநிதி அருமைநாதன் ஸதீஸ் குமார் அவர்களின் கொட்டியாபுரத்து சிங்கம் என்னும் வரலாற்று நூல் அறிமுக விழா 10-05-2015 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் தி.மூ.அந்-நஹார் மகளிர் கல்லூரி மண்டப அரங்கில் இடம்பெறவுள்ளது.

மூதூர் கலை இலக்கிய ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் மூதூர் முகைதீன் தலைமை வகிக்க ஜனாப். ஏ.எஸ். உபைதுல்லா, திரு.க.தேவகடாட்சம், கலாநிதி கே.எம்.எம்.இக்பால் மற்றும் ஜனாப்.கே.எம்.அமீர்தீன் ஆகியோர் சிறப்புரைகளை வழங்கவுள்ளனர்.

## 19வது...

அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 19 ஆவது திருத்தப் பிரேரணையின் தமிழ்ப் பிரதி உறுப்பினர்களுக்கு வழங்கப்படவில்லை. ஆங்கிலப் பிரதி மட்டுமே வழங்கப்பட்டது.

பிரபா கணேசன் மொழி புரியவில்லை எனச் சுட்டிக் காட்டிய போது ரணில் விக்கிரமசிங்க "நீ ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்குகளினால் வென்றனீர். வாயைப் பொத்திக் கொண்டிரு"எனக் கூறி அடக்கினார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இவ்வளவுக்கும் வாய் திறக்கவில்லை. பிரபா கணேசனுக்கு ஆங்கிலமும் தெரியும். சிங்களமும் தெரியும். கூட்டமைப்பிலுள்ள உறுப்பினர்கள் பலருக்குத் தான் ஆங்கிலம் தெரியாது. ஆனாலும் எவரும் வாய் திறக்கவில்லை.

இங்கு உறுப்பினர்களுக்குக்குக் கட்டாயம் ஆங்கிலம் தெரிய வேண்டும் என நான் கூற வரவில்லை. ஆங்கிலத்தைப் புரிந்து கொள்வதல்ல இங்குள்ள பிரச்சினை. தமிழ்மொழி ஒரு தேசிய இனத்தின் அடையாளம். தமிழ்மொழியைப் புறக்கணித்ததன் மூலம் தமிழ்த் தேசம் அவமானப்படுத்தப்பட்டுள்ளது என்பது தான் இங்குள்ள பிரச்சினை

தமிழ்மக்கள் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் தீர்மானிக்கும் அதிகாரம் தமிழ்மக்களிடமிருக்க வேண்டும் என வற்புறுத்தியிருக்கலாம். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி மாற்றத்திற்கு உதவியது போலவே இது விடயத்திலும் வெற்றுக் காசோலையில் கையெழுத்திட்டது போலப் பங்களித்துள்ளது எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

## தமிழக் கூட்டமைப்பு.....

கைச்சாத்திடப்படுமென்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார் என்றார்.

மேலும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் தமிழரசுக் கட்சி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட், தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய ஐந்து கட்சிகள் இருந்து வந்த நிலையில் தற்போது தமிழர் விடுதலைக் கூட்டணி தவிர்ந்த ஏனைய நான்கு கட்சிகளையும் இணைத்து ஓர் கூட்டமைப்பாக பதிவு செய்வதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இதற்கு ஆதரவும் எதிர்ப்பும் இருந்து வந்தது. இதனால் கூட்டமைப்பை பதிவதில் தொடர்ச்சியாக அங்கத்துவக் கட்சிகளிடையே முரண்பாடும் பல ஆண்டுகளாக இழுபறி நிலையும் ஏற்பட்டு வந்திருந்தன. இதே போன்றதான நிலைமைகள் தான் தற்போதும் நீடித்து வருகின்றன.

இந்நிலையில் கூட்டமைப்பை கட்சியாகப் பதியாது அதன் அங்கத்துவக் கட்சிகளிடையே ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இதற்கமைய தமது கட்சிகளின் நிலைப்பாடுகள் மற்றும் கோரிக்கைகளை உள்ளடக்கியாக புரிந்துணர்வு உடன்படிக்கைகளை கட்சிகள் பலவும் தயார் செய்து தமிழரசுக் கட்சியிடம் கையளித்துள்ளன.

இதற்கமைய கடந்த மாதம் இடம்பெறவிருந்த கட்சிப் பதிவு தொடர்பிலான கூட்டம் தமிழரசுக் கட்சியின் தலைவர் நாட்டில் இல்லாத காரணத்தால் மறு அறிவித்தலின்றி நிறுத்தப்பட்டது. இதன் பின்னரும் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த போதும் அதுவும் தவிர்க்க முடியாத காரணத்தால் நிறுத்தப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான நிலையிலேயே கட்சி அங்கத்துவக் குழுக் கூட்டம் விரைவாக நடத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் போது கூட்டமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் கட்சிகளை இணைத்து அதனை ஓர் கட்சியாகப் பதியாது அனைத்துக் கட்சிகளுக்குமிடையே புரிந்துணர்வு உடன்படிக்கையே தற்போது கைச்சாத்திப்படவுள்ளதாக தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார் என சிவசக்தி ஆனந்தன் மேலும் தெரிவித்துள்ளார்.

## தமிழ் அரசியல்...

அரசு சட்டவிரோதமாக 2014ஆம் ஆண்டு மே மாதம் 26ஆம் திகதி இலங்கைக்கு நாடுகடத்தியது. ஐ.நா. சபையும் மேலும் பல சர்வதேச நாடுகளும், புலம்பெயர் தமிழ் அமைப்புகளும் இவர்களை இலங்கைக்கு நாடுகடத்தினால் அவர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் எனத் தெரிவித்தும் மலேசிய அரசு நாடுகடத்தியிருந்தது. இந்நிலையில், மகஸின் சிறைச்சாலையில் அடைத்துவைக்கப்பட்டுள்ள இம்மூவரும் சித்திரவதைக்கு உள்ளாகுகின்றனர் என்று இவர்களைத் தொடர்புகொண்ட உறவினர்கள் வெளியிட்டுள்ளனர். அத்துடன், இம்மூவரும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் எந்தவகையிலும் தொடர்புபட்டிருக்கவில்லை எனவும் உறவினர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இம்மூவரும் நேற்றுமுன்தினம் கொழும்பு புதுக்கடை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது எந்தவித ஆக்கபூர்வமான முடிவையும் நீதிமன்றம் வழங்கவில்லை என்றும், இவர்களின் வழக்கு எதிர்வரும் 20ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்றும் உறவினர்கள் தெரிவித்தனர். அத்துடன், வெசாக் தினத்தன்று ஆயிரத்து 400 கைதிகளை நல்லெண்ண அடிப்படையில் இலங்கை அரசு விடுவித்திருந்தது. இதில் ஒரு தமிழ் அரசியல் கைதிகூட விடுவிக்கப்படவில்லை. மலேசியாவில் அகதி அந்தஸ்து இருந்தும் சட்டவிரோதமாக தடுத்துவைத்துள்ள மூன்று கைதிகளையும் விடுவிக்காமல், குடு கடத்தியவர்கள் மற்றும் கொலைசெய்தவர்களை புதிய நல்லாட்சி அரசு விடுவித்திருப்பது அதிர்ச்சியளிக்கின்றது என மேற்படி மூன்று கைதிகளும் உறவினர்களிடம் தெரிவித்துள்ளனர். மேற்படி மூன்று கைதிகளின் உயிருக்கு ஏதும் ஆபத்து ஏற்படுமாயின் அதற்கு இலங்கை அரசும், மலேசிய அரசுமே பொறுப்புக்கூறவேண்டும் என்றும், அவர்களுடன் சேர்த்து சட்டவிரோதமாக தடுத்துவைக்கப்பட்டுள்ள அனைத்து தமிழ் அரசியல் கைதிகளையும் விடுக்க புதிய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் உறவினர்கள் வலியுறுத்துகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மரணித்தும் வாழும் உயிர்கள்

கடந்தவார தொடர்ச்சி .. ..

பிரார்த்தனைகள் அல்லாஹ் ஒருவனிடம் மட்டுமே கேட்கப்பட வேண்டும்.

'அல்லாஹ் அல்லாதவர்களிடம் பிரார்த்தித்த நிலையில் யார் மரணிக்கின்றானோ அவன் நரகம் நுழைவான்' என நபி(ச) அவர்கள் கூறியுள்ளார்கள்.

அறிவிப்பவர்: இப்னு மஸ்ஊத், ஆதாரம்: புஹாரி

எனவே, இறந்தவர்கள் உண்மை யிலேயே கப்ரில் உயிர் வாழ்ந்து கொண்டிருந்தால் கூட அவர்களிடம் பிரார்த்திப்பது இணை வைத்தலாம்.

ஈஸா(ர) அவர்கள் ஒரு இறைத்தூதர் பல்வேறுபட்ட அற்புதங்களை அல்லாஹ்வின் உதவியால் நிகழ்த்தியவர் அற்புதமாகப் பிறந்தவர் இன்றுவரை உயிருடன் இருப்பவர் இப்படி இருந்தும் ஈஸா(ர) அவர்களிடம் தேவைகளை முன்வைப்பது ஷிர்க் என்றால் நல்லவரா? கெட்டவரா? என்பது தெரியாத அற்புதம் செய்யும் அருளைப் பெற்றவரா என்பது தெரியாத இறந்து போனவர்களிடம் வேண்டுதல் வைப்பது எப்படிச் சரியாகும்?

அடுத்து, இந்த வசனம் மகான்கள், அவ்லியாக்கள் பற்றிப் பேசவில்லை. அல்லாஹ்வின் பாதையில் உயிர்த்தியாகம் செய்தவர்கள் பற்றியே பேசுகின்றது.

உயிருடன் இருப்பவனிடம் கூட பரஸ்பரம் உதவுதல் என்ற அடிப்படையில் சில உதவிகளைக் கோரலாமே தவிர, எல்லா உதவிகளையும் கோர முடியாது.

ஒருவர் நல்லவர் உயிருடன் உள்ளார். அவரிடம் அவரால் செய்யக் கூடிய உதவியைக் கேட்கலாம். அந்த நல்லவர் பரம ஏழையாக இருக்கின்றார்.

தொடரும் .. ..

– இஸ்லாம்கல்வி –




## சிக்கன் கூட்டு

**தேவையான பொருட்கள்**

சிக்கன் - ¼ கிலோ, வெங்காயம் - 2, இஞ்சி, பூண்டு விழுது - 1 தே.கரண்டி, கரம் மசாலாத்தூள் - 1 தே.கரண்டி, மிளகுத்தூள் - 2 தே.கரண்டி, எண்ணெய் - 3 மேகரண்டி, கொத்தமல்லித்தழை - சிறிதளவு



**செய்முறை**

சிக்கனை நன்கு சுத்தம் செய்து சிறு சிறுத் துண்டுகளாக்கி கொள்ளவும். அத்துடன் மற்ற பொருட்களையும் தயார் நிலையில் வைத்துக் கொள்ளவும். பின்னர் வெங்காயத்தை எட்டாக நறுக்கி அதை தனித் தனியே பிரித்து வைத்துக் கொள்ளவும். ஒரு தாச்சியில் எண்ணெய் ஊற்றி சூடு வந்ததும் இஞ்சி பூண்டு விழுதினை சேர்த்து வதக்கவும்.

பின்பு மசாலாத் தூள்களை சேர்த்து சிறிது நேரம் வதக்கி உடனே சிக்கன் துண்டுகளையும் சேர்த்து வதக்கவும். பின்பு தேவையான அளவு உப்பு சேர்த்து சிறிதளவு தண்ணீர் ஊற்றி மூடி போட்டு மிதமான தீயிலேயே பத்து நிமிடம் வேக விடவும். (இடையில் இருமுறை கிளறி கொள்ளவும்.)

சிக்கன் வெந்ததும், நறுக்கி வைத்திருக்கும் வெங்காயத்தை சேர்த்து பிரட்டி இரண்டு நிமிடத்தில் மல்லித்தழை தூவி இறக்கி விடவும். இதனுடன் குடைமிளகாயையும் வெங்காயம் போல் நறுக்கி சேர்க்கலாம்.

## அழகாக மிளிர

அழகு குறிப்பு

**பெண்களின் அழகினை இன்னும் மெருகேற்றுவதற்கு இதோ சில சித்த மருத்துவத்துடன் சம்பந்தமான குறிப்புக்கள். இதில் எதுவித பாதகங்களும் இல்லை. ஆனால் பலன் மட்டும் உறுதி.**



- தேங்காய் எண்ணெயில் மஞ்சள்தூளை போட்டுக் குழைத்து உடம்பிற்கு தடவி, பயத்தமாவை தேய்த்துக் குளித்தாள் தோல் பளபளப்பாகவும், மிருதுவாகவும் இருக்கும்.
- கூந்தலில் எண்ணெய் பசை அதிகமாக இருந்தால், கோழி முட்டையில் கொஞ்சம் சர்க்கரையை கலந்து தலையில் லேசாக தடவிக்கொண்டு பிறகு தலைக்கு ஊற்ற வேண்டும். இதனால் எண்ணெய் பசை நீங்கி முடி அழகு பெறும்.
- தேநீரில் வடிகட்டிய பின், மிஞ்சும் தேயிலைத் தூளில் எலுமிச்சை சாறை பிழிந்து, தலையில் தேய்த்துக் குளித்தால், தலைமுடி பளபளப்பாகும்.
- வேப்பிலை, புதினா, சிறிது மருதாணி மற்றும் குப்பைமேனி இலைகளை காயவைத்து, தூளாக்கி வைத்துக் கொள்ளவும். இதில் சிறிது எடுத்து, பாலில் குழைத்து, முகத்தில் பூசி, 20 நிமிடம் ஊற வைத்து குளித்தால், முகம் வோடிக்குரு வராமல், வெளியில் கறுத்துப் போகாமல் இருக்கும்.



- இளம் சூடான ஒரு லிட்டர் நீரில், இரண்டு ஸ்பூன் உப்பைப் போட்டு, கண்களை கழுவினால் கண்கள் பிரகாசமாக இருக்கும்.



# மருத்துவம்

## வெண்படலமா வைத்திருக்க வேண்டாம்

உடலில் வெண்மை படலம் படருவது ஆபத்தான ஒன்றாகும். பொதுவாக 12 முதல் 40 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு இது ஏற்படுகிறது. வெண் படலம் முதலில் கைகள் மற்றும் கால்களில் தொடங்குகிறது, சிலருக்கு மூக்கு, வாய், கண்கள், தொப்புள் போன்ற இடங்களில் வெண் படலம் தோன்றும். பிறகு பரவாமல் அந்தந்த பகுதிகளுடன் நின்று விடும், சிலருக்கு உடல் முழுவதும் பரவும். உடலுக்கு மெலனின் என்ற நிறத்தை கொடுக்கும் நிறமி, சரியான முறையில் வேலை செய்யாமல் போவதால், இது போன்ற பாதிப்பு ஏற்படுகிறது. இதுவும் பரம்பரையாக ஏற்படுவது தான்.

வெண் படலம் தோன்றினால், நம் உடலில் சூரிய ஒளி நேரடியாக படாமல் பார்த்து கொள்ள வேண்டும். சன் பில்டர் 30 சதவீதம் அடங்கிய சன்ஸ்கிரீன் லோஷனை, உடலில் வெயில்படும் இடங்களில் பூசிக் கொண்ட பிறகே, வெளியில் செல்ல வேண்டும். சிறிய வெண் படலங்களை, ஸ்டிராய்டு போன்ற களிம்புகளைப் பூசி மறைக்கலாம். எனினும் தொடர்ந்து களிம்பு பூசினால் தோலின் தன்மை கெட்டு விடும். வெண் புள்ளிகள் உடலில் தோன்ற ஆரம்பித்தவுடனேயே சிகிச்சை பெறின் குணப்படுத்தலாம்.

## பசளிக்கீரை

மூளை வளர்ச்சிக்கு



அனைத்துவகை கீரைகளிலும் இரும்புச்சத்து அதிகமாக உள்ளது, அதில் ஒன்றான பசளைக்கீரை மூளைவளர்ச்சிக்கு உதவுகிறது.

✓ பாலக்கீரை போல் உடலுக்கு நன்மை தரும் கீரை வேறெதுவும் இல்லை. இரும்புச்சத்து, பீட்டா கரோட்டின், ∴போலிக் அமிலம், கல்சியம் போன்றவை இதில் அடங்கியுள்ளன.

✓ இந்த கீரையில் உள்ள சில ரசாயனப் பொருட்கள் பார்வைக் குறைவை தடுக்கிறது. மலச் சிக்கலை போக்கிறது.

✓ இதில் மிக அதிகமாக உள்ள பச்சையம் கொழுப்பை கரைக்கும் தன்மையுள்ளது.

✓ ரத்தத்தின் சிவப்பு அணுக்கள், ஹீமோகுளோபின் ஆகியவை அதிகமாக உற்பத்தியாக உதவுகிறது.

✓ ஹீமோகுளோபின் ரத்தத்தில் ஆக்ஸிஜனை ஏற்றிச் சென்று உடலின் செல்களுக்கு தந்து அங்கிருந்து கரியமிலவாயுவை வெளியேற்றுகிறது. இதனால் ரத்தம் சுத்தமாகி உடலில் பாக்டீரியா தாக்காமல் தடுக்கிறது.

✓இக்கீரையில் இருக்கும் பொட்டாசியம் நரம்பு மண்டலத்துக்கு வலுவூட்டுகிறது, ரத்த அழுத்தம் சீராக இருக்கவும் பயன்படுகிறது.

✓ பாலக்கீரை இலைச் சாற்றுடன், சீரகம் 5 கிராம்,பூண்டு இரண்டு பல் ஆகியவற்றை அரைத்து மூன்று சம பாகமாகப் பிரித்து வடிகட்டி மூன்று வேள்ளை சாப்பிட்டால் வெள்ளைப்படுதல் பிரச்சனை குணமாகும்.

## இவ்வார ராசிபலன்கள்



**மேஷம்** :வாழ்வில் முன்னேற புதிய வாய்ப்பு கிடைக்கும். உடன் பிறந்தவர்களின் எண்ணங்களுக்கு மாறாக பேச வேண்டாம்.



**ரிஷபம்** :பிறர் மனம் அறிந்து பேசி, நற்பெயர் பெறுவீர்கள், அலைச்சல் தரும் பயணம் தவிர்க்கவும். வீட்டில் பராமரிப்பு தேவைப்படும்



**மிதுனம்** : சுயகவுரவம் பாதுகாத்திடுவீர்கள். சொல்லும், செயலும் வசீகரமாக அமையும். உடன் பிறந்தவர்களிடம் கூடுதல் அன்பு மலரும்.



**கடகம்** :முயற்சி சிறந்து வெற்றியைத் தரும். உடன் பிறந்தவருக்கு மங்கல நிகழ்ச்சி நடத்துவீர்கள். மறைமுக இடையூறுகளைசரி செய்வீர்கள்.



**சிம்மம்**:நம்பிக்கையுடன் செயல்படுவதால், பணி சீராக நிறைவேறும். பொது விவகாரங்களில் கருத்து சொல்ல வேண்டாம்.



**கன்னி** : புகழ் பெறுவதில் ஆர்வம் வளரும். உண்மை, நேர்மையை மன உறுதியுடன் பின்பற்றுவீர்கள். உடன் பிறந்தவர் இயன்றளவு உதவுவர்.



**துலாம்** :முக்கியமான செயல் புதிய முயற்சியால் வெற்றி பெறும். உறவினர் பாராட்டுவர். அறிமுகம் இல்லாதவரிடம் விவாதம் பேச வேண்டாம்.



**விருச்சிகம்** : நற்செயல்களில் ஆர்வம் வளரும். உடன்பிறந்தவர் மனக்கடங்களை எதிர்கொள்வர். எதிர்ப்பாளரின் செயலை உணர்ந்து விலகுவீர்கள்.



**தனுசு** :உங்களை புகழ்ந்து பேசுபவரிடம் கவனம் வேண்டும். குடும்பச் செலவுகளுக்கான பணத்தேவை அதிகரிக்கும். எதிரியால் இருந்த தொல்லை விலகும்.



**மகரம்** : ஒருமுகத்தன்மையுடன் செயல்படுவீர்கள். பணி சிறந்து, சமூகத்தில் செல்வாக்கு கூடும். அறிமுகம் இல்லாதவருக்கு உதவுவதில் நிதானம் வேண்டும்.



**கும்பம்** : எண்ணம், செயலில் உற்சாகம் பிறக்கும். குடும்ப நலன் பேணுவதில் அக்கறை கொள்வீர்கள். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும்.



**மீனம்** :வாழ்வில் முன்னேற்றம் பெற, புதிய பாதை உருவாகும். மன உறுதியுடன் செயல்படுவீர்கள். வீண் வம்பு பேசுபவரிடம் விலகுதல் நன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு முரசு

# உள்ளூர் விளையாட்டு செய்திகள்

## மேதின விளையாட்டுப் போட்டி

– கலாரதன் –

கடந்த 04.05.2015 அன்று மூதூர், பட்டித்திடல் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் விளையாட்டு போட்டி நிகழ்வுகள் நடைபெற்றது. விசேடமாக "பெண்களின் ஆளுமையை மேம்படுத்துவோம்!" எனும் தொனிப்பொருளின் அடிப்படையிலான இவ்விளையாட்டு நிகழ்வுகள் சங்கத்தின் தலைவர் திருமதி.பேரின்பமூர்த்தி விக்கினேஸ்வரி தலைமையில் இடம்பெற்ற இவ்விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளில் கிராம மகளீர் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

குறித்த இந்நிகழ்வில் விருந்தினர்களாக கிராம உத்தியோகத்தர் சு.பேரின்பமூர்த்தி அவர்களுடன், விசேடமாக மூதூர் பிரதேசசபை உறுப்பினர் திரு.தவராசா தமிழ்ச்செல்வன் ஆகியோருடன் கிராம முதியோர்சங்கம், விளையாட்டு சங்கம், கிராம அபிவிருத்தி சங்கத்தின் பிரதிநிதிகள் பங்குபற்றினர்.









## உதைப்பந்தாட்டப் போட்டி

திருகோணமலை ஈஸ்ரன் ஈகிள்ஸ் விளையாட்டுக் கழகம் தலைவர் கிண்ணத்துக்கான அணிக்கு எழுவர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியினை நடத்தியது. ஞாயிற்றுக்கிழமை 03.05.2015 ஏகாம்பரம் மைதானத்தில் நடத்தப்பட்ட இச்சுற்றுப்போட்டியில் 30 அணிகள் பங்கு கொண்டன.

இறுதிப் போட்டியில் திருகோணமலை சென் அன்ரனீஸ் கழகத்ததை எதிர்த்து ஜமாலியா பிஸ்ஷர்மன் விளையாட்டுக் கழகம் மோதியது. இதில் சென்அன்ரனீஸ் கழகம் 3 க்கு 0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்ட சம்பியனானது. இப்போட்டியின் போது கிழக்கு மாகாண சபை உறுப்பினர் லாகீர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வெற்றிக்கிண்த்தை வழங்கி வைத்தார்.

– கதிரவன் –







## வி.பொருட்கள் வழங்கி வைப்பு

– கதிரவன் –

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நாடெங்கிலும் உள்ள இளைஞர் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்ள் வழங்கும் வேலைத் திட்டத்தை முன்னெடுத்துள்ளது. திருகோணமலை மாவட்டத்தில் உள்ள இளைஞர் கழகங்களுக்கு இவை பகிர்ந்த-ளிக்கும் நிகழ்வு திருகோணமலை நகரம், சேருவில, ஹோமரன்கடவெல போன்ற பகுதிகளில் கடந்த 02.05.2015 சனிக்கிழமை நடைபெற்றது.

இதன் பிரதான நிகழ்வு திருகோணமலை நகரத்தில் ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் நடை-பெற்றது. பட்டணமும் சூழலும் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 50 இளைஞர் கழகங்களுக்கு இவை பகிர்ந்த-ளிக்கப்பட்டது. துடுப்பாட்டம், உதைபந்து, கரப்பந்து ஆகிய விளையாட்டக்-களுக்கான உபகரண-ங்கள் இக்கழகங்களுக்கு பகிர்ந்தளிக்-கப்பட்டது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற திருகோணமலை மாவட்ட உதவிப் பணிப்பாளர் அ.ஹமித் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.







## விளையாட்டு உபகரணங்கள் கையளிப்பு

– தம்பலகாமம் நிருபர் –

திருகோணமலை மாவட்ட இளைஞர் சேவை மன்றத்தினால் சேருவில தொகுதி ஐ.தே.க அமைப்பாளர் அருன சிரிசேன தலைமையில் சுமார் இறுநூற்றி முப்பத்தைந்து மாவட்டத்தில் உள்ள இளைஞர் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கிவைத்தார். அத்துடன் கிரிகெட் போட்டியில் அதிகூடிய ஓட்டங்களை பெற்ற வீரர்களுக்கு கேடயம் வழங்கப்பட்டது.







## சித்திரைப் பொங்கல் விளையாட்டு விழா

மூதூர் ஈஸ்டன் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற சித்திரைப் பொங்கல் விளையாட்டு விழா கடந்தவாரம் நடைபெற்றது.

இவ்விளையாட்டுக்களுக்கான அனுசரனையை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் வழங்கியிருந்தனர்.

பிரதம விருந்தினராக அக்கட்சியின் செயலாளர் நாயகம் செ கஜேந்திரனும் சிறப்பு விருந்தினர்களாக அக்கட்சியின் அமைப்பாளர் சட்டத்தரணி மணிவண்ணனும், மலைமுரசு ஆசிரியர் இரா ஸ்ரீஞானேஸ்வரனும் கலந்து கொண்டனர்.

கட்சியின் மாவட்ட அமைப்பாளர் ஹரிஹரன் ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.







## 80கோடி நஷ்டஈடு

அமெரிக்காவில் நடந்த 'வெல்டர் வெயிட்' குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டியில் அமெரிக்காவின் மேவெதரிடம், பிலிப்பைன்சின் பேக்கியாவோ தோல்வியடைந்தார். விதிகளை மீறி, இப்போட்டியில் தோள்பட்டை காயத்துடன் பங்கேற்றதை, பேக்கியாவோ ஒப்புக் கொண்டார். அமெரிக்காவின் நெவடா மாகாண விதிப்படி இது தண்டனைக்குரிய குற்றம்.

இதையடுத்து, போட்டிக்குரிய நுழைவுச்சீட்டை பணம் கொடுத்து வாங்கிப் பார்த்த ரசிகர்கள் சார்பில் நெவடாவைச் சேர்ந்த ஸ்டீபன் வானெல், காமி ராபெரன் என்ற இரு ரசிகர்கள், பேக்கியாவோ ரூ. 80 கோடி நஷ்ட ஈடு தர வேண்டும் என வழக்கு தொடர்ந்துள்ளனர்.



## உலக குத்துச் சண்டை கோதா

உலக குத்துச்சண்டை பிரியர்களின் கவனத்தை ஈர்த்திருந்த குத்துச்சண்டை கோதாவில் பிலிப்பைன்ஸின் மெனி பிக்காயோவை அமெரிக்காவின் ப்ளொயிட் மேவெதர் வீழ்த்தினார்.

இதற்கு முன்னர் 47 கோதாக்களில் தொடர்ச்சியாக வெற்றிபெற்றிருந்த அமெரிக்காவின் ப்ளொயிட் மேவதர் தோல்வியடையாத வரலாற்றை தக்கவைத்துக் கொள்ளும் எதிர்ப்பார்ப்புடன் இந்தக் கோதாவில் களமிறங்கினார்.

கோதாவில் மென[illegible] பிக்காயோ சிறப்பா[illegible] செயறபட்ட போதிலு[illegible] மேவெதர் தற்காப்புட[illegible] விளையாடி கோதா[illegible] வெற்றிகொண்டார். தோல்[illegible] யடையாத வீரர் எனும் சிறப்[illegible] மேவெதர் தக்கவைத்து[illegible] கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை பற்றிப் பேசுவார் எவருமில்லை - உறவுகள் கவலை



தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் புதிய அரசு இதுவரை எந்தத் தீர்மானமும் எடுக்கவில்லை என்பது மிகப்பெரிய தவறாகும் என்று கடந்த வருடம் தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் மலேசியாவிலிருந்து நாடுகடத்தப்பட்டு மகஸின் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப் பட்டுள்ள மூன்று தமிழர்களின் உறவினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

2014ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி மலேசியாவில் வைத்து கைதுசெய்யப்பட்ட சந்திரலிங்கம் குசாந்தன், செல்லத்துரை கிருபாகரன், செல்லத்துரை மகாதேவன் ஆகியோர் சட்டத்துக்கு முறைகேடான வகையில் இலங்கை சிறையில் தடுத்துவைக்கப் பட்டுள்ளனர் என்று உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

மலேசியாவில் ஐக்கிய நாடுகளின் அகதி அந்தஸ்து பெற்றிருந்த மேற்படி மூவரையும் அந்நாட்டு 17

## தமிழக் கூட்டமைப்பு கட்சியாகப் பதிவு செய்யப்பட மாட்டாது.....

### சிவசக்தி ஆனந்தன் தெரிவிப்பு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை கட்டமைக்கப்பட்ட ஓர் கட்சியாகப் பதிவு செய்ய வேண்டுமென கூட்டமைப்பிலுள்ள அங்கத்துவக் கட்சிகள் பலவும் கோரி வந்த நிலையில் கூட்டமைப்பு பதியப்படாது கட்சிகளுக்கு இடையியே புரிந்துணர்வு உடன்படிக்கை மட்டுமே தற்போது கைச்சாத்திடப்படவுள்ளது என சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவிக்கையில் அடுத்த வாரத்திற்குள் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிக் குழுக் கூட்டம் இடம்பெற்று இதன் போது கட்சிகளுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் 17

## பிரதேசச் செயலாளர்கள் இடமாற்றம்

திருகோணமலை மாவட்டத்தின் வெருகல் மற்றும் குச்சவெளிப் பிரதேச செயலாளர்கள் இடமாற்றம் செய்யப்பட்ட நிலையில், அவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை தங்களது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டுள்ளனர் என்று மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

வெருகல் பிரதேச செயலாளராக பணியாற்றிய கே.தனேஸ்வரன் குச்சவெளிப் பிரதேச செயலாளராகவும் குச்சவெளிப் பிரதேச செயலாளராக கடமையாற்றிய எம்.தயாபரன் வெருகல் பிரதேச செயலாளராகவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

## வன்புணர்வு முயற்சி

### வாலிபனுக்கு தடுப்பு..!

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணியொருவரை வன்புணர முயற்சித்த வாலிபனுக்கு 14 நாட்கள் தடுப்பிலிருக்கும் உத்தரவை திருகோணமலை மாவட்ட நீதிமன்று வழங்கியுள்ளது.

கடந்த 7ம் திகதி நிலாவெளி கடற்கரை உல்லாச விடுதியில் இருந்து வெளியே வந்திருந்த வெளிநாட்டு இளம் யுவதியை வல்லுறவிற்குள்ளாக்க சிங்கள இளைஞனொருவர் முயற்சித்துள்ளார்.

அவரிடமிருந்து சாமர்த்தியமாகத் தப்பிய பெண் கடற்கரைக் காவலில் ஈடுபட்ட காக்கியுடையினரிடம் விடயத்தைத் தெரிவித்ததை அடுத்தே குறித்த இளைஞன் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்நிலைப்படுத்தபட்டிருந்தார்.

## நீர் இணைப்புக்கள் வழங்கப்பட்டன



புல்மோட்டை மற்றும் பதவி ஸ்ரீபுர கிராமங்களுக்கு கடந்த 2012 ம் ஆண்டு கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி மற்றும் கிராமிய நீர் வழங்கள் அமைச்சினால் ஜெய்கா திட்டத்தின் கீழ் 120 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டு நடை முறைப்படுத்தப்பட்ட நீர் விநியோக திட்டம் கடந்த சில மாதங்களுக்கு முன்னால் நீர் வழங்கள் மற்றும் வடிகால் சபைக்கு கையளிக்கப்பட்டது.

அதனையடுத்து கௌரவ அமைச்சர ரவூப் ஹக்கீமினால் திட்டம் உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கபட்டது. எனினும் அதற்கான புதிய நீர் இணைப்புகள் கடந்த 8ம் திகதி வழங்கி வைக்கப்பட்டன.

ஆரம்ப நிகழ்வில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஆர்.எம்.அன்வர் குச்சவெளி பிரதேச சபை உறுப்பினரும் நீர் வழங்கள் வடிகால் அமைப்புச் சபையின் இணைப்பாளருமான சல்மான் பாரிஸ் ஆகியோர் கலந்து இணைப்பை வழங்கிவைத்தனர்.

## கிழக்கிலேயே நியமனம் வழங்குக

கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர் பயிற்சிகளை முடித்து வெளியான ஆசிரியர்களுக்கு நியமனம் வெளி மாகாணங்கள், மாவட்டங்களுக்கு வழங்கப்படவுள்ளதாக கிடைத்த தகவலை தொடர்ந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் தலைமையிலான குழுவினர் கடந்த 5ம் திகதி கல்வி அமைச்சர் அக்கிலவிராஜ் காரியவசமை அவரது அமைச்சில் சந்தித்தனர்.

இச்சந்திப்பின் போது கிழக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் 1700க்கு மேற்பட்ட ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் இருப்பதால் எக்காரணம் கொண்டும் கிழக்கில் பயிற்சி முடித்த ஆசிரியர்களை வெளிமாவட்டங்களுக்கு அனுப்பும் முயற்சியை விடுத்து அவர்களுக்குரிய மாவட்டப் பாடசாலைகளிலேயே நியமிக்க வேண்டும் என்று ஸ்ரீ.மு.காங்கிரஸ் குழுவினர் கல்வி அமைச்சரை கேட்டுக்கொண்டனர்.


முதற்தடவையாக திருகோணமலையில் அனைத்து வசதிகளையும் கொண்ட ஒவ்செற் அச்சுப் பதிப்பு நிலையத்தை வாடிக்கையாளரின் வசதி கருதி நிறுவியுள்ளோம்

ஸ்ரீராம் பிறிண்டர்ஸ்
SHRIRAM PRINTERS

தங்களுடைய புத்தகங்கள், திருமண அழைப்பிதழ்கள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள், வாழ்த்துமடல்கள், மற்றும் அனைத்து வகையாக ஒவ்செற் அச்சுப்பதிப்புக்களும் வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப அழகாகவும் வர்ணமயமாகவும் திறம்பட செய்து தரப்படும்.



159A, கடல் முக வீதி.
திருகோணமலை.
0777 555 738


### மலைமுரசின் கட்டணமின்றிய திருமண விளம்பரங்கள்

மணமகள் தேவை
பெயர்: மாணிக்கராசா இயேசுராஜன்
வயது: 34
உயரம்: 5' 3"
தொடர்பு எண்: 0262222632 - 0776779631

மலைமுரசின் கட்டணமின்றிய திருமண விளம்பரங்களில் உங்களின் விபரங்களும் இடம்பெற வேண்டுமாயின் தகவல் அனுப்புங்கள். அனுப்புபவரின் அடையாள அட்டைப் பிரதி இணைக்கப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாராந்தப் பத்திரிகை மலைமுரசு நிறுவனத்தினால் இல.159 ஏ, கடல் முக வீதி, திருகோணமலையில் இருந்து 09.05.2015ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.